# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 148 சித்திரை 10 ஆம் நாள் திங்கட்கிழமை 23 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## சங்கானையில் கலசத்துக்கு மாலை எடுத்து வந்த 'ட்ரோன்'!

யாழ்ப்பாணம், ஏப். 23
சங்கானை சிங்கப்பூர் ஞான வைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் நேற்றுக் காலை 7.30 மணி தொடக்கம் 9 மணி வரைநடைபெற்றது. கும்பாபிசேகத்தின் போது, 'ட்ரோன்' >> 23



வடக்கு -கிழக்கு

## தமிழரின் கை தவறிப் போனால் இந்தியாவின்பாதுகாப்புக்குஆபத்து

எச்சரிக்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஏப். 23
தமிழரின் தாயக பூமியான, வடக்கு-கிழக்கு மாகாணம் தமிழரின் கையை விட்டுச் சென்றால் இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக் குறியாகும். இந்தப் பேராபத்தைக் கருத்திற் கொண்டு கரிசனையில் எடுத்து இந்திய அரசு தமது அயலுறவுக் கொள்கையில் மாற்றங்களை உடனடியாகக் கொண்டு வர வேண்டும் என்று ஈபிஆர்எல்எப் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். >> 23

# ஊழல், மோசடியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

பதவிக் காலம் முடிவதற்குள் செய்யுமாறு வடக்கு மாகாண சபைக்கு அழுத்தம்

வடக்கு மாகாண சபையின் ஆளுகைக்குட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை விரைந்து - சபையின் ஆயுள் காலத்துக்குள் - எதிர்வரும் ஒக்ரோபர் 25ஆம் திகதிக்குள் நிறைவேற்றுமாறு எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள மாகாண சபை அமர்வில் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது.

நிதி மோசடிகள், அதிகார முறைகேடுகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் காலத்துக்குக் காலம் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அந்த விசாரணை அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், அவற்றின் பரிந்துரைகளும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

ஆரம்ப விசாரணைகளில் தவறிழைத்த >> 23

## வடக்கு – கிழக்கு இணைந்திருக்கையில் இருந்த உத்வேகம் இப்போது இல்லை

குற்றஞ் சுமத்துகிறார் முன்னாள் துணைச் செயலர்

யாழ்ப்பாணம், ஏப். 23
இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு மாகாண சபை முறை வரப்பிரசாதமாக கிடைத்தது. அதனை வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்திருந்த போது செயற்படுத்திய உத்வேகம் இப்போதைய மாகாண சபை நிர்வாகத்தில் இல்லை. இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் துணை செயலர் சி.கிருஸ்ண்ானந்தன் குற்றஞ் சுமத்தினார்.
இந்தியப் பத்திரிகையாளர் தி.ராமகிருஸ்ண >> 23



## முல்லைத்தீவுக் கடலில் சிக்கிய விசித்திர சங்கு

முல்லைத்தீவு, ஏப்.23
முல்லைத்தீவுக் கடற்கரையில் விசித்திரமான சங்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். >> 23

வவுனியாவில்

## இராணுவத்தினர் 20 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

கடும் வெயில் காரணமா?

வவுனியா, ஏப். 23
இராணுவப் பயிற்சியில் ஈடுபட்ட 20 இராணுவத்தினர் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலும் பலருக்கு இராணுவ முகாமிலேயே சிகிச்சை வழங்கப் >> 23

## கொள்ளையரின் திட்டத்தை சாதுரியமாக முறியடித்த பெண்

எழுதுமட்டுவாழில் சம்பவம்

(விரிவு பக்:11)

## ஒற்றுமையைச் சீர்குலைப்போருடன் விக்கி கூட்டு வைத்தால் பாடம் புகட்டப்படும்

சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

(விரிவு பக்:11)

## கூட்டமைப்புடன் பேச்சைப் புறக்கணித்து நாடகத்தை அரங்கேற்றியது கூட்டணி

கொந்தளிக்கிறார் சத்தியலிங்கம்

(விரிவு பக்:4)

## தமிழர்களிடம் சுத்தமான குருதியே இல்லையாம்

ராணுவத்தின் குருதி கலந்திருக்கின்றது என்று சீண்டுகிறார் ஆளுநர் குரே

யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பும் பலரின் குருதியில் கலந்திருப்பது சிங்களக் குருதிதான். அங்கு குருதி தேவைப்படும் போது, இராணுவத்தினரே அதனை வழங்குகின்றனர். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார். >> 23

## நான் பழுதடைந்த நூடில்ஸ்ஸா?

டிலான் மீது சந்திரிகா சீற்றம்

கொழும்பு, ஏப். 23
தன்னை கடுமையாக விமர்சித்துவரும் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவுக்கு பதிலடி கொடுத்துள்ளார் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமார >> 23

மனித உரிமை விவகாரம்:

## இராணுவத்தின் மீது ஐ.நா. கிடுக்கிப்பிடி

கொழும்பு, ஏப். 23
ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்ற லெபனானுக்கு அனுப்பப்பட்ட 49 இராணுவத்தினர் தொடர்பான மனித உரிமை ஆய்வுகளை முன்னுரிமை கொடுத்து உடனடியாக, மேற்கொள்ள வேண்டும் என்று அரசிடம் கோரப்பட்டுள்ளதாக ஐ.நா அமைதி காப்பு நடவடிக்கைப் பணியக பேச்சாளர் தெரிவித்தார். >> 23

# அமைச்சரவை மாற்றம் நாளை முக்கிய துறைகள் கைமாறலாம்

ஒதுக்கீட்டுப் பணிகள் நிறைவு

கொழும்பு, ஏப். 23
அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சர்களுக்காக ஒதுக்கப்படும் அமைச்சுகளை ஒழுங்குபடுத்தும் பணிகள் நிறைவடைந்துள் என, என்று அரச தலைவர் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
புதிதாக நியமிக்கப்படும் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படும் துறை >> 23

## ஐ.தே.கவின் பட்டியலை நிராகரித்தார் மைத்திரி!

முக்கிய அமைச்சுகள் சு.க. வசம்செல்லும் அறிகுறி

கொழும்பு, ஏப். 23
அமைச்சரவை மறுசீரமைப்பின்போது தமது கட்சிக்கு என்னென்ன அமைச்சுகள் வேண்டுமெனக் கோரி ஐக்கிய தேசியக் கட்சியால் முதலில் முன்வைக்கப்பட்ட பட்டியல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலி >> 23





சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு இலண்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார். இந்தநிகழ்வுகிங்ஸ்பெரிசிறிசத்தாதிஸ்ஸபௌத்தமத்தியநிலையத்தின் பியதஸ்ஸி நாயக்க தேரரின் தலைமையில் இடம்பெற்றது. (ந,ரி4)

## சடலம் மீட்பு

கொழும்பு.ஏப்.23

வெலிகந்ததொடருந்துநிலையத்துக்கு அருகில் உள்ள வயலில்சடலம்ஒன்றுமீட்கப்பட்டது.

இந்தச்சம்பவம்நேற்றுஇடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனைப் பகுதியை சேர்ந்த 36 வயதுடைய ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந,ரி4)

### யாழ். பல்கலைக் கழகத்தில்

# முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைப்பதற்கான தடை நீங்கியது

## நிர்வாகத்துக்கும், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சையடுத்து

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில், முள்ளிவாய்க்கால் நினைவாலயமொன்றை அமைப்பதற்கு ஏற்பட்டிருந்த தடை, மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டுடன் நீங்கியுள்ளது.

வன்னி இறுதிப் போரின்போது உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள், உறவுகள் உட்பட, முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூர்வதற்கு, நினைவாலயமொன்றை அமைக்க பல்கலைக்கழக மாணவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

அதற்கான பணிகளை பல்கலைக்கழக வளாக முன்றலில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்திருந்தனர். அந்த இடத்தில் நினைவாலயம் அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தின் பணிப்புரையை அடுத்துத் தடை விதிக்கப்பட்டது.

அதையடுத்து, பல்கலைக் கழக நிர்வாகத்தினருக்கும், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே, பல்கலைக்கழகத்தில், கடந்த வியாழக்கிழமை பிற்பகல் பேச்சு இடம்பெற்றது. போரில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைக்க நிர்வாகம் தடையில்லை என்றும் அதனை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்துக்கு அருகாமையில் அமைக்க மாணவர் ஒன்றியத்திடம் கோரப்பட்டது.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் கோரிக்கையைப் பரிசீலனை செய்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், அதற்கு இணக்கம் தெரிவித்தனர். பல்கலைக் கழக வளாகத்தில் நிர்வாகத்தால் அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம், முள்ளிவாய்க் காலில் நினைவாலயம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ். பல்கலைக்கழக பொங்குதமிழ் எழுச்சி நினைவாலயம் அமைக்கும் பணிகள் நிறைவடையும் நிலையில், முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

(ந-37)

## அட்டாளைச்சேனையில் நேற்றுசிரமதானப்பணி



அம்பாறை.ஏப்.23

அட்டாளைச்சேனைகோணாவத்தையில்சிரமதானப் பணி இன்று முன்னெடுக்கப்பட்டது.

அல்ஹுதாசமூகசேவைகள்அமையத்தினால்அதன் தலைவர்ஏ.எம்.எம்.நௌஷாட்தலைமையில்சிரமதானப்பணி இடம்பெற்றது.

இதில் குறித்த பிரிவின் கிராம உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்வர், பொது நூலக உத்தியோகத்தர் ஈ.என்.ஜலால்டீன்உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர்.

கோணாவத்தை பொது நூலக வளாகம், கிராம அபிவிருத்தி கட்டட வளாகம், மார்க்க கல்வி பயிலும் குர்ஆன்மத்ரிஸா வளாகம், கிராமசேவகர் அலுவலக வளாகம், அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலக வளாகம் மற்றும் வடிகால்கள் போன்ற இடங்கள் சிரமதானம் செய்யப்பட்டன. (ந,ரி4)

## அம்பலவாணர் கலை அரங்கின் முதலாம் ஆண்டு நிறைவுவிழா


புங்குடுதீவு அம்பலவாணர்கலைஅரங்கத்தின் முதலாம்ஆண்டுநிறைவு விழா நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் முதன்மைவிருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கலந்கொண்டார்.

புங்குடுதீவு வாழ் மக்களின் கலை கலாசார தொழில் பயிற்சிகளை மையமாகக் கொண்டு புலம்பெயர்து வாழும் புங்குடுதீவுமக்களினால் இந்த மண்டபம் கடந்த ஆண்டுதிறக்கப்பட்டது.

இதில் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி, வைத்தியர்ஸ்ரீகிருஷ்ண, பிரதேசபை உறுப்பினர்கள் என பலர்கலந்து கொண்டனர். (ந,ரி4,8)





கிளிநொச்சி கரைச்சி, புளியம்பொக்கணைநாகதம்பிரான் ஆலயத்தின் சப்ததலஇராஜகோபுரத்துக்கான அடிக்கல்நடும்நிகழ்வு நேற்று இடம் பெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கண்டாவளைப் பிரதேச செயலர், உதவிப்பிரதேச செயலர் மற்றும் பிரதேச மக்கள், சமயப்பெரியார்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ந,ரி4)

## மக்களுக்கான அபிவிருத்தியை ஒற்றுமையாக முன்னெடுப்போம்

நுவரெலியா.ஏப்.23

அனைவரும் ஒன்றிணைந்து மக்களுக்கான சிறந்த அபிவிருத்திப் பணியை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு நுவரெலியா பிரதேசசபையின் தவிசாளர் வேலுயோகேந்திரன் தெரிவித்தர்ர். நுவரெலியா பிரதேசசபையின் கன்னியமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

எங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு நாம் அனைவரும் கட்சி பேதங்கள் பாராமல் மக்களுக்கான சிறந்த அபிவிருத்திப் பணியை முன்னெடுக்கவேண்டும். நுவரெலியா பிரதேசசபையிலே என்னை தவிசாளராக நியமித்ததன் காரணமாக இந்த பிரதேச்சபையின் ஊடாக மக்களின் தேவைகளை அறிந்து எமது பிரதேச சபையின் ஏனய உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு சிறந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பேன்- என்றார். (ந,ரி4)

# கூட்டுஒப்பந்தத்தாமதத்தால் ரூ. 800 கோடி வழங்க வேண்டும்

## அரவிந்தகுமார் எம்.பி கூறுகின்றார்

பதுளை,ஏப்.23
தோட்டமுதலாளிமார்சம்மேளனத்துக்கும்தோட்டத் தொழிற்சங்கங்கள் சிலவற்றுக்குமிடையே மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டு ஒப்பந்தம் கடந்த ஒரு வருடம் காலதாமதமாகியதினால் தோட்டத் தொழிலாளர்களுக்குஎண்ணூறுகோடிரூபாவுக்கும் அதிகமான தொகையை வழங்கவேண்டியுள்ளது. இவ்வாறு பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

கடந்த முறை செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தினால்தோட்டத்தொழிலாளர்களுக்குஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
கடந்த கூட்டு ஒப்பந்தத்தின் போது கறுப்புப் பட்டி அணிந்துகொண்டு ஒப்பந்த சரத்துகளுக்குகண்டனத்தை தெரிவித்து தோட்ட முதலாளி மார் சம்மேளனத்தைஎதிர்க்கத்திராணியற்றதொழிற்சங்கத்தலைவர்கள்சம்மேளனத்தையும்பகைத்துக் கொள்ளாமல் தொழிலாளர்களுக்குஉதவுவது போன்று நடித்து கறுப்புப்பட்டி அணிந்து கொண்டு கண்டனத்தைத்தெரிவித்துகைச்சாத்திடுவதாகக் கூறி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு நாடகமாடியுள்ளனர். இவ்வாறான கபடத்தனங்களைதோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் கைவிடல் வேண்டும். தொழிலாளர்களுக்கு பாதிப்புக்களையும் இழப்புக்களையும் ஏற்படுத்த வேண்டாம் - என்றார். (ந,ரி4)

# இசை நிகழ்ச்சியில் சூடு: ஒருவர் சாவு: 4பேர் காயம்

## அத்தனகல்லவில் சம்பவம்

கொழும்பு, ஏப்.23
நிட்டம்புவ அத்தனகல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன் நால்வர் காயமடைந்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளங் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.


சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 27 வயதான கர்ப்பிணிப் பெண்ணொருவரும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்தப் பெண்ணுக்குச் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கும், சந்தேகநபர்களை கைது செய்வதற்கும் 2 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். 4 பேர் கொண்ட குழுவினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளில் அந்தப்பகுதிக்கு வந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.
வெயாங்கொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரே இந்த துப்பாக்கிச் சூட்டுடன் தொடர்புபட்டுள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. சந்தேகநபர், ஏற்கனவே கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர் என்று கூறப்படுகிறது. சந்தேகநபர், உயிரிழந்த வர்த்தகரின் மணல் அகழ்வு வியாபாரத்தின் ஊழியராக செயற்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது. பணக்கொடுக்கல் வாங்கல் தொடர்பிலேயே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ற-ரி5)





# புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வு

வவுனியா, ஏப்.23
சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டுவவுனியா ஓமந்தை சமுர்த்தி வங்கியால் சமுர்த்தி பயனாளிகளுக்கான விளையாட்டு நிகழ்வு நேற்று நடைபெற்றது.
வங்கியின்முகாமையாளர் இ.இரட்ணபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதேச செயலாளர் கா.உதயராசா, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.சந்திரகுமார், சிறுவர்கள், சமுர்த்திப் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் சமுர்த்தி பயனாளிகளுக்கான பாரம்பரிய விளையாட்டுக்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் நடைபெற்றதோடு அதில்வெற்றிபெற்றவர்களுக்குப்பரிசில்களும் வழங்கப்பட்டன. (ற-ரி5)



தொல் புரம் வழக்கம் பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிசேகம் நேற்று நடைபெற்றது. (ரி-4)

# முச்சக்கரவண்டிகள் திருடியவர்களுக்கு விளக்கமறியல்

அம்பாறை, ஏப்.23
அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் முச்சக்கர வண்டிகளைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட, 5 சந்தேகநபர்களையும், எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, சம்மாந்துறை நீதி வான் நீதிமன்ற பதில் நீதி வான் எச்.எம். நஸீல் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.
சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நிந்தவூர் பிரதேசத்தில், காணாமற் போன, முச்சக்கர வண்டி தொடர்பாக மேற்கொண்ட விசாரணையையடுத்து அக்கரைப்பற்று, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களில் இருந்து, 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்களிடமிருந்து 10 முச்சக்கர வண்டிகளும், ஒரு மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன.
கைப்பற்றப்பட்ட முச்சக்கர வண்டிகள் அனைத்தும் இயந்திர மற்றும் அடிச்சட்ட இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளதுடன், முச்சக்கர வண்டிகளின் பதிவு இலக்கங்களும் மாற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இயந்திர மற்றும் அடிச்சட்ட இலக்கங்களை மாற்றியதன் பேரில் 2 சந்தேக நபர்களும், திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ற-ரி5)



சமுர்த்திவங்கியின் ஏற்பாட்டில் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுவிழா கெருடாவில்விவேகானந்தாநூல்நிலையத்தில்நேற்று நடைபெற்றது. (ந,ரி4,26)

# அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலே கட்சி வளர்ச்சியடைய முடியும்

## பிரதேசசபை உறுப்பினர்களுக்கு நாவிதன்வெளி தவிசாளர் அறிவுறை

அம்பாறை,ஏப்.23
பொத்துவில் பிரதேச சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு கட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.
இவ்வாறு முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் தற்போதைய நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளருமான த.கலையரசன் தெரிவித்துள்ளார். அம்பாறை பொத்துவில் பிரதேச சபைக்குட்பட்ட கோமாரி கிராமத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது.
அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
இளைஞர்களின் நலன் கருதி தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க தொழிற்பேட்டைகளை அமைக்கவும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் பலர் எந்தவிதமான வாழ்வாதாரமும் இன்றி இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அதற்கு புலம்பெயர் தமிழர்கள் உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.
போர்க் காலங்களில் தங்களது காணிகளை வனவிலங்கு இலாகா தன்வசப்படுத்தியதால் இந்தக் கிராம மக்கள் விவசாயத்தை மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கினார்கள். அப்போது அந்த காணிகளை விடுவிப்பது தொடர்பாக அபிவிருத்தி குழு கூட்டங்களில் சுட்டிகாட்டியபோதும் அதற்கு அதிகாரிகள் தடையாக இருந்தனர் - என்றார். (ந,ரி4)





Leading Company in Jaffna needs Qualified, skilled & experienced IT Executive.

**IT EXECUTIVE** (Male/ Female)

**Requirements:**
- HND in Computer Software Engineering or Equal qualification
- Candidate should be dynamic with vast experience in the relevant fields.

**Experienced & Suitable qualified candidates are invited to sent their application with Photo to under given e-mail address.**

**e-mail: jaffnavacancy@gmail.com**

## தேங்காய் வீழ்ந்ததில் முதியவர் காயம்

சாவகச்சேரி. ஏப். 23

தடியின்உதவியுடன்பிடுங்கிய தேங்காய் தடியுடன் வந்துபிடுங்கியவரின்மூக்கையும்தலையையும்தாக்கிக் காயப்படுத்தியது. இந்தச்சம்பவம்நேற்று முன்தினம் மட்டுவில் சந்திர புரம் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த 63வயது முதியவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டது. (9)

## சந்நிதி ஆலயத்தில் உள்ள வயோதிபர்களுக்கு புத்தாடை

யாழ்ப்பாணம்,ஏப். 23

தொண்டமானாறு செல்வ சந்நிதி ஆலயத்தில் தஞ்சம் அடைந்துள்ள 165 வயோதிபர்களுக்கு புத்தாண்டை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமம் உடு புடவைகளை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டது.

ஆதரவு அற்ற இந்தவயோதிபர்களுக்கு நாளாந்தம் உணவுகளைசந்நிதியான் ஆச்சிரமம் வழங்கி வருகின்ற நிலையில் உடுபுடவைகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக ஆச்சிரம பொறுப்பாளர் அமுதசுரபி செ. மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்தார். (173)

## இலவசப் பயிற்சிநெறி

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் இலவச பயிற்சிநெறிகள்சண்டிலிப்பாய்பிரதேசசெயலகவிதாதாவளநிலையத்தில்நடைபெறவுள்ளன. கணினி வன்பொருள், எல்ஈடி பல்ப் மற்றும் பனல், கண்காணிப்புகமெராபொருத்தல், வலைத்தள வடிவமைப்பு, காளான்உற்பத்தி, உணவு உற்பத்தி ஆகிய பயிற்சிநெறிகள்நடைபெறவுள்ளதால் ஆர்வமுள்ளோர்தமது சுயவிவரங்களைஎதிர்வரும்5 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் பதிவை மேற்கொள்ளுமாறுபிரதேசசெயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மீளாய்வின் பின்னர் பலரின் சமுர்த்தி நிவாரணம் நிறுத்தம்

தென்மராட்சி ஏப் 23

தென்மராட்சிப் பிரதேசத்தில் நீண்ட காலமாக நிவாரணம் பெற்றுவந்தவர்களுக்குநிவாரணம்நிறுத்தப்பட்டு புதிதாகப் பலருக்கு நிவாரண உதவிகள்வழங்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

சமுர்த்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம்தொடக்கம்சமுர்த்திநிவாரண உதவிகள்வழங்கப்பட்டுவந்தநிலையில்அண்மையில்சமுர்த்திப்பயனாளிகளின் அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டபோது பலரின் நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இது தொடர்பாக பிரதேச சமுர்த்தி தலைமைஅலுவலகத்துடன்தொடர்பு கொண்டு கேட்டபோது:

சமுர்த்தி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் 6 ஆயிரத்து 186 பேர் சமுர்த்திநிவாரண உதவிகள் பெற்று வருகின்றனர் எனவும் அண்மையில் கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு வழங்கப்பட்ட தகைமைகளைத் தாண்டியோரின் உதவிகள் நிறுத்தப்பட்டு அவர்களுக்குப் பதிலாக பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறத் தகைமையுடைவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தனர்.

சமுர்த்தி உதவிகள் பெற்று வந்த குடும்பங்களில்அரசநியமனம்வெளிநாடு வாகனங்கள் வைத்திருத்தல் போன்ற சமுர்த்தி தகைமையை தாண்டியோரின் உதவிகள் சுற்றுநிருபப்பிரகாரம்நிறுத்தப்பட்டுபுதியவர்களுக்கு வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)

### வவுனியா நகரசபை ஆட்சி தொடர்பாக

# கூட்டமைப்புடனான பேச்சுகளைப் புறந்தள்ளி தமது நாடகத்தை அரங்கேற்றியது கூட்டணி

### வடமாகாண சபை உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சியின் வவு. மாவட்ட அமைப்பாளருமான சத்தியலிங்கம் சாடல்



வவுனியா, ஏப்.23

**தேசியக் கட்சிகளிடம் இருந்து வவுனியாவைப் பாதுகாப்பதற்காக தமிழ்க் கூட்டமைப்புஎடுத்தமுயற்சிகள் அனைத்தையும்புறந்தள்ளியிருந்தனர் தமிழர் விடுதலைக் கூட்டணியினர். அதனுடைய பங்காளிக் கட்சியான ஈ.பி. ஆர்.எல்.எவ். கட்சியினரைபேச்சுகளுக்குஅழைத்தபோது அவர்கள்நேரடியாக கலந்து கொள்ளாது இழுத்தடித்து இறுதியில் தங்களது நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளருமான சத்தியலிங்கம் தெரிவித்தார்.**

வவுனியாமாவட்ட உள்ளூராட்சிமன்றஅமைப்புக்களின்போது இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பில் மாகாண சபை உறுப்பினர் மருத்துவக் கலாநிதி ப. சத்தியலிங்கம் அனுப்பிவைத்த விளக்கத்திலேயே இவ்வாறுதெரிவித்துள்ளார்.

குறித்த விளக்கத்தில் மேலும் உள்ளதாவது:

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தல் முடிவுகளின் பின்னர் வவுனியாவில் உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றுவதற்கு பல கட்சிகள் போட்டியிட்டன. வவுனியாவைப் பொறுத்தவரை ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் இம்முறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கைமக்கள்காங்கிரஸ்கட்சியும்(இவர்கள்ஐ.தே.க.இன்யானைச் சின்னத்தில் போட்டியிட்டனர்) நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் மும்முரமாக ஈடுபட்டன.

இவர்களின் இந்த ஈடுபாட்டுக்குப் பல காரணங்கள் உள்ளன. வவுனியாவில் வவுனியா நகரத்தில் முஸ்லிம் கட்சிகளுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதோடுதமதுபலத்தைஅரசுக்குக் காட்டுவதன் ஊடாக தங்களது பலத்தையும் பதவிகளையும் அரசில் அதிகரித்தல், எதிர்வரும் மாகாணசபைமற்றும்நாடாளுமன்றத்தேர்தல்களில்வெற்றிவாய்ப்பைஅதிகரித்தல்போன்றன அவற்றில் சிலவாகும்.

இதேவேளைமகிந்தராஜபக்சதலைமையிலான பொதுஜன பெரமுன வவுனியாவில் தனித்து போட்டியிடத்தீர்மானித்தது.

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில்வவுனியாமற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற வாசிகளை நம்பியே இவர்கள் தனித்துப் போட்டியிட்டனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிலிருந்துவெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எவ், த.தே.ம.மு தமிழர் விடுதலைக்கூட்டணிஆகியனத.தே.கூட்டமைப்புக்கு எதிர் நிலைப்பாட்டோடு களமிறங்க இருந்ததும் இவர்களுக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியது.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே தமிழ்க்கட்சிகள் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாது ஒருபுறம் இருக்க பொது எதிரிகளின் பலத்தை சிதறடிப்பதை விடுத்து தங்களுக்குள்ளேயே கடுமையாகப் போரிட்டுக் கொண்டன.

குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகித்த ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான தங்களது அளவுகடந்தபழிவாங்கும்படலத்தை ஆரம்பித்தது.

பல குற்றச்சாட்டுக்களை மக்கள் மன்றத்திலே வைத்தது. தேர்தல் முடிவுகள் பல குழப்பமான சூழ்நிலைகளைஏற்படுத்தியது. கட்சிகளுக்கிடையான பேரம்பேசல்கள் ஆரம்பித்தன.

தேசியகட்சிகளின் பிடியிலிருந்து வவுனியா மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு கூட்டமைப்புக்குஇருந்தது. எனவேதான்விருப்பு வெறுப்புக்கள், கடந்தகால அரசியல் வேறுபாடுகள், பழிவாங்கும் உணர்வு எல்லாவற்றையும் ஒருபுறம் வைத்துவிட்டு தமிழ்த் தேசியக்கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைப்பது தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

குறிப்பாக தமிழர் விடுதலைக்கூட் டணி, அகில இலங்கைதமிழ்காங்கிரஸ்ஆகியகட்சிகளுடன் உடன்பாடு ஒன்று எட்டப்படும் பட்சத்தில் வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்து சபைகளிலும் பெரும்பான்மை ஆசனங்களை பெற்றவர்கள் என்ற அடிப்படையில் ஆட்சி அமைக்கக் கூடிய நிலை கூட்ட மைப்புக்கிருந்தது.

இந்தநிலையில்தேர்தல்முடிவடைந்துமுடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் ஆட்சி அமைப்பது தொடர்பில்த.தே. கூட்டமைப்பானது ஒருகொள்கைப்பிரகடனத்தை வெளியிட்டது.

ஆளும்தேசிய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியைப் பிடிப்ப தில்லை. அதாவது பதவிகளை (தவிசாளர், உபதவிசாளர்) பகிர்ந்து கொள்வதில்லை. எந்தக் கட்சி தனித்து அதிகப்படியான ஆசனங்களை பெற்றுள்ளதோ அந்தக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஏனைய கட்சிகள் கொள்கை பேதமின்றி ஆதரவு வழங்கவேண்டும் என்பதே அது.

இதனடிப்டையில் மாவட்டக்குழுக்கூட்டத்திலும் மேற்படிதீர்மானம்ஏகமனதாகஏற்றுக்கொள்ளப்பட்டது. மேற்படிதீர்மானங்களின்அடிப்படையில் வவுனியா மாவட்டத்தின் 04 சபைகளையும் த.தே.கூட்டமைப்பு ஆட்சியை பிடிப்பதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள், சுயேச்சைக்குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. சமகாலத்தில் தேசிய கட்சிகளிடம் நிபந்தனையற்ற ஆதரவு வழங்குமாறு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்த வகையில் தமிழர் விடுதலைக்கூட்டணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) உடனானபேச்சுக்கள்ஆரம்பிக்கப்பட்டன.

நேரடியாக சந்திக்கும் சந்தர்ப்பம் கோரப்பட்டது. ஆனால்துரதிர்ஷ்டவசமாகஎமதுகோரிக்கைகள் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டதோடு தேசிய கட்சிகள் மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் பொதுஜன பெரமுன போன்ற கட்சிகளுடன் அவர்களது பேரம்பேசல்கள் நடைபெற்றது என அறிய முடிந்தது.

அதன் பின்னர் வவுனியாவின் நலனில் அக்கறை கொண்ட இளைஞர்கள் மற்றும் பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு எம்முடன் உள்ள ஆபத்துக்கள் எம்மை சூழ்வதை கவனத்தில் எடுத்தேனும் கடந்தகாலகசப்புணர்வுகளைமறந்துஎமதுஎல்லைப்புற மாவட்டமான வவுனியாவைக் காப்பாற்றநாம்ஒன்றிணையவேண்டுமெனகோரப்பட்டது.எனினும்அனைத்தும்புறக்கணிக்கப்பட்டு அவர்களுடைய நாடகம் அரங்கேறியது - என்றுள்ளது (எ-21,105)

### வேலணைப் பிரதேச சபை தவிசாளரின் தலையீட்டை அடுத்து


# குறிகாட்டுவான் நயினாதீவு படகுச் சேவையாளர் பிரச்சினைக்கு தீர்வு

யாழ்ப்பாணம். ஏப். 23

சுற்றுலாப் படகுச்சேவை காரணமாக தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து குறிகாட்டுவான் - நயினாதீவு தனியார் போக்குவரத்துப் படகுச் சேவையாளர்கள் எதிர்கொண்டுவந்த பிரச்சினை வேலணை பிரதேச சபையின் தவிசாளர் கருணாகரகுருமூர்த்தியின் முயற்சியால் தீர்வு காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியூடாக மக்களுக்கான போக்குவரத்து சேவை மேற்கொண்டுவந்ததனியார்போக்குவரத்துபடகுச்சேவையாளர்கள்தமதுவருமானம்பாதிக்கப்படுவதாகதெரிவித்து வந்த நிலையில் அதற்கு பிரதேச சபையால் தீர்வு காணப்படாமையால் கடந்த வருடம் 8 ஆம் மாதத்தின் பின்னர் பிரதேசசபைக்கானவரிப்பணத்தைச் செலுத்தாது இடைநிறுத்தியிருந்தனர்.

இந்தநிலையிலேயேகுறித்தபடகுச்சேவைநிர்வாகத்தினர் மற்றும் உரிமையாளர்களுடன் பிரதேச சபை தவிசாளர் பேச்சுக்களைமேற்கொண்டதுடன் குறித்தசுற்றுலாபடகுச் சேவையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக தெரிவித்ததை அடுத்து தனியார் படகுச் சேவையாளர்கள் எதிர்கொண்டுவந்த பிரச்சினைகளுக்கு சுமுகமான முறையில்தீர்வுஎட்டப்பட்டதாகதெரிவிக்கப்பட்டது. (8)







பொன்னாலை

## வெண்கரம் படிப்பகத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணம் பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் கலந்து கொண்டு பானையில் அரிசியிட்டு வாழ்த்துரை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வின்போது. வெண்கரம் படிப்பகத்தில் கல்வி கற்று கடந்த வருடம் இடம்பெற்ற ஜி. சி. ஈ சாதாரண தரப் பரீட்சையில்சித்தியடைந்தஇருமாணவர்களுக்குதுவிச்சக்கரவண்டிகளும்மாணவர்களுக்குவிளையாட்டுஉபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

துவிச்சக்கரவண்டிகளை காரைநகரைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமான 'பபி கனடா' என்பவர் வழங்கியிருந்தார். விளையாட்டு உபகரணங்களை வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமான ஜெயகாந்தன் செந்தூரன் வழங்கியிருந்தார்.

செந்தூரனின் தாயாரும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆசிரியையுமான சுதா ஜெயகாந்தன் இந்த நிகழ்வில் கலந்துகொண்டுவிளையாட்டுஉபகரணங்களைமாணவர்களிடம் கையளித்தார்.

இந்தநிகழ்வில், வெண்கரம்செயற்பாட்டாளர்கள், ஆலோசகர்கள், மாணவர்கள், பெற்றோர், பிரதேச இளைஞர், யுவதிகள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பொன்னாலை மாணவர்களின் நன்மை கருதி கடந்த 2017ஆம்ஆண்டுசித்திரை மாதம்17ஆம்திகதிவெண்கரம் இலவசப்படிப்பகம்ஆரம்பிக்கப்பட்டது. இங்குதரம்1தொடக்கம் 11 வரையான வகுப்புக்களில் 120 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-111)

*உள்ளூராட்சி சபைகளில்*

# கூட்டமைப்பு உறுப்பினர்களின் வெற்றி பலமாகப் பிரயோகிக்கப்படுகின்றது

**யாழ்ப்பாணம், ஏப். 23**

**உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த வெற்றிகள்இன்றுபலமாகபிரயோகிக்கப்படுகின்றனஎன்றுநாடாளுமன்ற உறுப்பினரும்வலி.மேற்குப்பிரதேசஒருங்கிணைப்புக்குழுஇணைத்தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண சபைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சபா. குகதாஸ் மற்றும் வலி. மேற்கு பிரதேசசபைக்குத்தெரிவுசெய்யப்பட்ட புதியஉறுப்பினர்எந்திரி. த. துரைலிங்கம் ஆகியோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் பண்ணாகம் அண்ணாகலைமன்றத்தில்இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடம் உள்ளூராட்சி சபைகளுக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காகதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இவ்வாறானஒருகாலகட்டத்தின்தமிழ் தேசத்தின் பால் கூடுதலான ஈடுபாட்டைக்கொண்டிருந்தவடக்குமாகாண சபை உறுப்பினர் சபா. குகதாஸ் வலிகாமத்தில்இடம்பெற்றபெரும்பாலான மேடைகளில்ஏறிகடந்தகாலதமிழன் வீர வரலாறுகளையும் நடந்த உண்மைச்சம்பவங்களையும்மக்கள்முன் உணர்வு பூர்வமாகத் தெரிவித்தார்.

இதன் மூலமாக எமக்குக் கிடைத்த வெற்றிகளை நாம் இன்று பலமாகப் பிரயோகித்து வருகின்றோம்.

இந்த நிலையில் சபைகளின் ஆட்சிகளை அமைப்பதற்கு ஈ. பி. டி. பி கட்சியின் ஆதரவு நேரடியாகக் கோரப்படவில்லை. மாறாக புரிந்துணர்வு அடிப்படையில் ஒத்துழைக்குமாறே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கேட்டுக் கொண்டனர். இதனை அந்தக்கட்சியினர் பெரிய விடயமாக முன்னெடுப்பதனை விட அடிப்படையில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக. மக்களுக்கு முழுச்சேவை செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக முன்வைக்கலாம். வலி. மேற்குபிரதேசசபைக்குபண்ணாகத்தின்மைந்தன் எந்திரித. துரைலிங்கம்தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவர் கிராமிய மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்கு நிறைவான நிதானமான பொதுச் சேவையை முன்னிறுத்தியவராகக் காணப்படுகின்றார் - என்றார்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய வடமாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ்தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு என்பது சாத்தியமற்ற விடயமாகும். இன்றைய காலகட்டத்தில் கிழக்கில்கல்லோயாத்திட்டத்தின்கீழ்சிங்களக்குடியேற்றம்வகைதொகையின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான அடிப்படையில் ஒருங்கிணைந்த தீர்வு எட்டப்படமுடியாத நிலைஏற்பட்டுள்ளது.

அதேபோலவடக்கிலும்முல்லைத்தீவு மாவட்டம் மகாவலி எல்(டு) வலயத் திட்டத்திலும் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதற்கு தற்போதைய அரசும் எமது முல்லை மாவட்ட அரச அதிகாரிகளும் பிரதேச மட்ட அதிகாரிகளும் பூர்வாங்க வேலைகளை சிங்கள மக்களுக்குச் சாதகமாகச் செயற்படுத்தி வருகின்றனர்.

இதனால்தமிழர்நிலங்களில்சிங்களப் பணக்காரர் காலூன்றி எமது நிலங்களை அடைப்புச் செய்து மேலும் கொளுத்தபணத்தை தனிப்பட்டரீதியில் அள்ளிச் செல்வதற்கு எமது முல்லை மாவட்ட அரச அதிகாரிகள் முனைப்புடன்செயற்பட்டுவருவதைஇந்ததமிழ் மக்கள் உணர வேண்டும் என்றார். (21,50)



யாழ்ப்பாணம்மாவிட்டபுரம்செருக்கன்கிணற்றடி அருள்மிகு ஞானவைரவர் ஆலயத்தில் சித்திரை பரணியை முன்னிட்டு சிறப்புப் பூசை இடம்பெற்றது.

## உறுப்பினர்கள் தெரிவு

வடமராட்சி, ஏப். 23

பருத்தித்துறை வடமராட்சி வடக்குப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க சமாசத்தின் வருடாந்த பொதக்கூட்டம் பிரதேச செயலகமாநாட்டு மண்டபத்தில் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ரவிகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது இந்த ஆண்டுக்கான புதிய உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் மு. ஜெகதுவன், உபதலைவர் செள. தங்கரத்தினம், செயலாளர் ச. சுபாஜினி உபசெயலாளர் கி. கௌரிதேவி பொருளாளர் சி. சிவபாலசிங்கம், கணக்காய்வாளர் சுகந்தி மகீபன் அத்துடன் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (173)

## கற்கள் எறிந்த மூவருக்குப் பிணை

தென்மராட்சி, ஏப். 23

காணியினுள்அத்துமீறிநுழைந்துஅங்கிருந்தவீட்டின்மீதுகற்கள்எறிந்துசேதப்படுத்திய குற்றச்சாட்டில் அந்தப் பகுதியைச் சேர்ந்த மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வரணி வடக்கு கறுக்காய் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து மூவரையும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது மூவ ரும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பிணையில்செல்லஅனுமதிக்கப்பட்டனர்எனத் தெரிவிக்கப்பட்டது. (9)



## சன சமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம். ஏப். 23

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு மகமாஜி சன சமூக நிலையத்தின் 28ஆவது ஆண்டு நிறைவு விழா நிலைய மண்டபத்தில் தலைவர் வை. தன சூரியா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கிட்னர் தர்மரட்ணம், கொக்குவில் கிழக்கு காளியம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி. தங்கராசா மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மகமாஜி சனசமூக நிலையஉறுப்பினர்கள், பொதுமக்கள்எனப்பலர் கலந்து கொண்டனர்.

சனசமூக நிலையத்தின் 28 வருட பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்று முடிந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள், 2017 ஆம் ஆண்டுநடைபெற்றகல்விப்பொதுத்தராதரசாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (7)

## தென்மராட்சி பிரதேசத்தில் அரைக்கும் ஆலையும் உணவுப் பொருள்கள் பொதி செய்யும் நிலையமும்

யாழ்ப்பாணம், ஏப். 23

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தால் 5 மில்லியன் ரூபா செலவில் அரைக்கும் ஆலையும் உணவுப் பொருள்கள் பொதி செய்யும் நிலையமும் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையத்துக்கான பணிகளை மேற்கொள்ள கைதடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திடம்ஒப்படைக்கப் பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

கைதடிபலநோக்குக்கூட்டுறவுச்சங்க எல்லைப்பரப்பில்உற்பத்திசெய்யப்படும் நெல் மற்றும் தானியப் பயிர்களைக் கொள்வனவு செய்து அவற்றிலிருந்து உணவுப் பொருள்களைத் தயாரித்துபொதிசெய்துவிற்பனைக்கு விடப்படவுள்ளது. இதனால்பிரதேசத்தில் உள்ள 20 பேர் நேரடி வேலை வாய்ப்பையும்பிரதேசத்தைச்சேர்ந்த 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட உற்பத்தியாளர்கள் மறைமுகமாக வருமானங்களைப் பெறக்கூடியதாக இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் உரிய இடத்தில் கட்டடம் அமைத்து இயந்திரங்கள்பொருத்தப்பட்டு அரைக்கும்மற்றும்பொதியிடல் பணிகள் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# சுதந்திரக் கட்சியின் யோசனை மைத்திரியிடம் இன்று கையளிப்பு

கொழும்பு, ஏப். 23

கூட்டு அரசைப் பலமாக முன்னெடுத்துச் செல்வதற்கு செய்துகொள்ளும் உடன்படிக்கையில் சிறிலங்கா சுதந்திர கட்சி தயாரித்துள்ள யோசனைகளை உள்ளடக்கிய வரைவு அரச தலைவர் மைத்திரியிடம் இன்று கையளிக்கப்படும் என்று அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கூட்டு அரசு அடுத்த இரண்டு ஆண்டுகளை முன்னெடுத்துச் செல்லும் தீர்மானம் இப்போது எட்டப்பட்டுள்ளது. புதிய வேலைத்திட்டங்கள், கொள்கைகள் உருவாக்கப்படவுள்ளன. கூட்டு அரசில் பங்குகொண்டு பிரதான இரண்டு கட்சிகளையும் இணைத்த வகையில் இரண்டு கட்சிகளின் ஒருமித்த வேலைத்திட்டமாகவே இது கருதப்படுகின்றது. இதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நடவடிக்கைகளோ அல்லது சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வேலைத்திட்டங்களோ அன்றி இரண்டு கட்சிகளின் பொதுவானநடுநிலையானவேலைத்திட்டமாகவே இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்படவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நியமிக்கப்பட்டுள்ள குழுவினருக்கு இடையில் இது குறித்து ஆராயப்பட்டு அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை நாம் அரச தலைவருக்கு இன்று கையளிக்க தீர்மானித்துள்ளோம். எமது காரணிகள் குறித்து ஆராயப்பட்டு அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முன்வைக்கும் காரணிகளையும் உள்ளடக்கி அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் இறுதித் தீர்மானத்தை முன்னெடுப்பார்கள். இரு தரப்பும் இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் கூட்டு அரசின் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படும்.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் மையச் செயற் குழுக் கூட்டம் நாளை அல்லது நாளை மறுதினம் கூடவுள்ளது. இதன் போது சிறிலங்கா சுதந்திர கட்சியின் சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் புதிய அமைச்சரவை மாற்றங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன. சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மாற்றங்கள் குறித்து இன்னும் தீர்மானங்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

அரச தலைவர் நாட்டில் இல்லாத நிலையில் இந்தக் காரணிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தலைவர் இல்லாது இவற்றை எல்லாம் எம்மால் விமர்சிக்க முடியாது. சுதந்திர கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சகல சர்ச்சைகளுக்கும் இந்த வாரம் இறுதித் தீர்வு கிடைக்கும் - என்றார். (5,61)

# தீயில் எரிந்து குடும்ப பெண் பரிதாபச் சாவு

## விசுவமடுவில் துயரம்

முல்லைத்தீவு, ஏப். 23

தீயில் எரிந்த இளம் குடும்பப் பெண் சிகிச்சை பயனின்றி 8 நாள்களின் பின்னர் உயிரிழந்துள்ளார் என்று இறப்பு விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளின் கண் முன்னே கணவனே எண்ணெய் ஊற்றி தீ மூட்டியதாக விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளதாக, இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் தெரிவித்தார். தொட்டியடி விசுவமடுவைச் சேர்ந்த சிவகுமார் சிவமலர் (வயது41) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விசாரணையின் போது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக, இறப்பு விசாரணை அதிகாரி மேலும் தெரிவித்ததாவது, கடந்த 13ஆம் திகதி கணவர் போதையில் வீடு திரும்பியுள்ளார். மனைவியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். தர்க்கத்தை தவிர்க்கும் நோக்கில் மனைவி தையலில் ஈடுபட்டுள்ளார். பிள்ளைகள் வீட்டிலிருந்து வெளியேறியபோது கதவைப் பூட்டியுள்ளார். பிள்ளைகள் திரும்பி வந்து, யன்னல் வழியாக அவதானித்தபோது, தனது மனைவியை கணவர் கொளுத்த முற்பட்டுள்ளார். பிள்ளைகள் கூக்குரல் எழுப்பியுள்ளனர்.

அயலவர்களின் துணையுடன் அவர் தருமபுரம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். அங்கிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கணவனே தனக்கு தீ வைத்ததாக பொலிஸாரிடம் வாக்கு மூலமும் வழங்கிய நிலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்தார். நேற்று முன்தினம் இரவு பரிதாபகரமாக உயிரிழந்தார் என்றார். இந்தச் சம்பவம் தொடர்பில் கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். (5,105)

# மாத இறுதியில் புதிய ஒப்பந்தம்

## மைத்திரி - ரணில் பேச்சு என்கிறார் ராஜித

கொழும்பு, ஏப். 23



எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரே தலைமைத்துவத்தின் கீழ் செயற்படும் கூட்டு அரசின் புதிய வேலைத்திட்டம் உருவாக்கப்படவுள்ளதுடன் சிறிலங்கா சுதந்திர கட்சி ஐக்கிய தேசியக் கட்சி இணைந்த கூட்டு அரசின் புதிய உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஆட்சியைக் குழப்ப பல்வேறு சதித்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் தமக்கு இப்போது கிடைத்துள்ள தேர்தல் பெறுபேறுகளை வைத்துக் கொண்டு வெற்றி பெற்றதாகக் கூறி வருகின்றனர். இந்தத் தேர்தல் முடிவுகளை வைத்துக்கொண்டு அவர்களால் 2020ஆம் ஆண்டு தேர்தலை வெற்றிபெற முடியாது. எஞ்சியுள்ள இரண்டு ஆண்டுகளில் நாம் சரியாகச் செயற்பட்டால் மீண்டும் நாங்களே வெற்றி பெறுவோம்.

கடந்த மூன்று ஆண்டுகள் நகர்ந்ததைப் போல அடுத்த இரண்டு ஆண்டுகளும் நகரப்போவதில்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாட்டில் பெரிய மாற்றங்கள் இடம்பெறும். கூட்டு அரசிலிருந்து யார் வெளியேறுகின்றனர் யார் வருகின்றனர் என்ற சிந்தனை எதுவும் எமக்கு இல்லை.

வெளியேறும் நபர்கள் மூலம் ஆட்சியில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை. ஒருசிலர் மகிந்த தரப்பின் 'டீல்'களுக்கு உடன்பட்டு செயற்படுவதும் எமக்கு நன்றாகவே தெரிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றது. சிறிலங்கா சுதந்திர கட்சியும் புதிய நகர்வுகளில் பயணிக்கவுள்ளது. மீண்டும் இரண்டு தரப்பினையும் இணைக்கும் புதிய உடன்படிக்கை செய்துகொள்ளப்படவுள்ளது. ஒரே தலைமைத்துவம், ஒரே வேலைத்திட்டம், ஒரே அரசு என்ற கொள்கையில் அடுத்த இரண்டு ஆண்டுகளை நாம் ஆட்சி செய்யவுள்ளோம். அடுத்த தேர்தலில் நாம் ஒன்றாக செயற்படத் தீர்மானித்துள்ளோம். இது குறித்த நீண்ட ஆழமான கலந்துரையாடல் இப்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. புதிய அமைச்சரவை மாற்றங்களை செயற்படுத்துவது குறித்து அரச தலைவரின் செயலர் மற்றும் தலைமை அமைச்சரின் செயலர் ஆகிய இருவரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். சில தினங்களில் அரச தலைவர் மைத்திரி தலைமை அமைச்சர் ரணில் ஆகியோர் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்தை எட்டவுள்ளனர். அதன் பின்னர் அனைவராலும் ஏற்றுகொள்ளக்கூடிய அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்றார். (5,31)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்க ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு

## பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா

கொழும்பு, ஏப். 23



இலங்கை நிலையான அபிவிருத்தியை நோக்கி விரைவில் முன்னேற்றம் அடைய வேண்டுமாயின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை முற்றாக நீக்கம் செய்ய வேண்டும். 20ஆவது அரசமைப்புத் திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வரவுள்ள யோசனைக்கு ஐக்கிய தேசிய கட்சிக் முழு ஆதரவு வழங்கும் என்று பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசின் நிர்வாகத்தின் கீழ் தற்போது நாடு பல துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. இருப்பினும் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் தலைமையிலான கலப்பு ஆட்சி முறைமையின் கீழ் நிர்வாகங்கள் முறையாக இடம் பெற்றாலும் பல விடயங்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமை தாக்கங்களைச் செலுத்தி வருகின்றது.

எமது நாடாளுமன்றம் பிரிட்டன் நாடாளுமன்றத்தைப் போன்றதாகக் காணப்பட்டாலும் அதிகாரங்களில் பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தலைமை அமைச்சர் அரசின் தலைவராக காணப்படுவதால் அங்கு மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்பட்டு விடுகின்றன. ஆனால் இலங்கையில் ஒரு அரசியல் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு பல விடயங்கள் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இலங்கையில் மக்கள் மத்தியில் நல்லிணக்கம் மேம்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது. 30 ஆண்டு காலமாக இடம் பெற்ற போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆகவே நிறைவேற்று அதிகாரத்துக்கான அவசியம் தற்போது தேவையற்றதாகவே காணப்படுகின்றது. முன்னாள் அரச தலைவர் மகிந்த உட்பட தற்போதைய அரச தலைவர் இந்த நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

எட்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரத்தினை இல்லாமல் செய்ய வேண்டும் என்று யோசனையை முன்வைக்கவுள்ளது. கூட்டு எதிரணியினரும் ஆதரவு வழங்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும் தமது முழு ஆதரவை வழங்கும். இந்த விடயத்தில் எவ்வித அரசியல் நோக்கங்களும் கிடையாது - என்றார். (5,31)

# யாழிலிருந்து கஞ்சா விநியோகம்: தம்புள்ளையில் முகவர் சிக்கினார்

கொழும்பு, ஏப். 23

யாழ்ப்பாணத்திலிருந்து கேரள கஞ்சாவை கடத்திச் சென்று மொத்த, சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் முக்கிய போதைப் பொருள் முகவரை தம்புள்ளை சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கலேவெல ஏனமல்பொல பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 2 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபர் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, சிறப்பு அதிரடிப் படையினரின் வீதிச் சோதனையில் சிக்கிக்கொண்டார். அவர் சில்லறைக்கு கஞ்சா விற்பனை செய்யும் கும்பல் ஒன்றுக்கு விநியோகிக்க என்று 2 கிலோ கஞ்சாவைக் கொண்டு சென்றார் என்று விசாரணையில் தெரிய வந்தது.

சதாா்டீன் செலாப்டீன் (வயது 57) என்பவரே கைது செய்யப்பட்டார். இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழ்ப்பாணத்துக்கு தருவிக்கப்படும் கஞ்சாவை எடுத்து வந்து தம்புள்ள பகுதியில் மொத்த, சில்லறை விற்பனைக்கு சந்தேகநபர் விநியோகித்து வருபவர் என்பதும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது, என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (5)

# எல்லாப் பட்டதாரிகளுக்கும் அரச வேலை வழங்குங்கள்

## சிறிலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 23
நாட்டில் இருக்கும் அனைத்துப் பட்டதாரிகளுக்கும் பொருத்தமான அரச தொழிலை வழங்கி, வேலை தேடிப் போராடும் பட்டதாரிகளின் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தற்போது பட்டதாரிகளுக்கு இடம்பெறும் நேர்முகப்பரீட்சையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இதனை ஒரே முறைமைக்குக் கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கம் தெரிவித்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் அண்மையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அதன் செயலர் மனுல பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பாகக் கடந்த ஆண்டு மார்ச் மாதம் மைத்திரியுடன் கலந்துரையாடலை நாங்கள் மேற்கொண்டோம். அதில் பட்டதாரிகளின் தொழில் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சால் பத்திரிகை அறிவித்தல் ஊடாகப் பட்டதாரிகளிடம் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

55ஆயிரம் பட்டதாரிகள் விண்ணப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை கடந்த 16ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டு தற்போது அது மாவட்ட மட்டத்தில் இடம்பெற்று வருகின்றது. 55 ஆயிரம்பேர் விண்ணப்பித்த போதும் நேர்முகப்பரீட்சையில் சுமார் 20ஆயிரம் பேரையே இணைத்துக் கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச தகைமைகளைப் பூர்த்தி செய்யாத பட்டதாரிகள் அனைவருக்கும் அவர்களின் பட்டத்துக்குப் பொருத்தமான தொழிலை வழங்க நடவடிக்கை எடுத்துப் பட்டதாரிகளின் தொழில் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் தற்போது இடம்பெற்று வரும் நேர்முகப்பரீட்சையில் பல குழறுபடிகள் இடம்பெற்று வருகின்றன.

நேர்முகப்பரீட்சைக்கு வருமாறு அனுப்பப்பட்ட கடிதத்தில் தேவையான ஆவணங்கள் எதுவும் கோரப்படவில்லை. விண்ணதாரிகள் நேர்முகப்பரீட்சையின்போது பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழை வழங்குமாறு சில மாவட்டங்களில் அதிகாரிகள் கோரியுள்ளனர்.

விண்ணப்பதாரிகளின் பொதுப்பட்டம் அல்லது சிறப்புப்பட்டம் என்பவற்றுக்கு நேர்முகப்பரீட்சையில் புள்ளி வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் சில மாவட்டங்களில் அதற்கு புள்ளி வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டத்தை குழப்பும் நோக்கத்துடன் அல்லது தொழில் வழங்குவதை பிற்படுத்துவதற்கு இந்த நிலையை காரணமாக்குவதற்கா என்ற சந்தேகம் எழுகின்றது.

அரசு, பட்டதாரிகள் அனைவரையும் முறையான வேலைத்திட்டத்தின் கீழ் இணைத்துக்கொண்டு அவர்களுக்கு பொருத்தமான தொழிலை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (5,61)

13ஆவது திருத்தம் இருக்கும்வரையில்

# நிறைவேற்று அதிகாரத்தில் கை வைக்க வேண்டாம்

## கெஹலிய ஆலோசனை

*கொழும்பு, ஏப். 23*
*அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்காமல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறைமையை அகற்ற முடியாது. அவ்வாறு நீக்கினால் அது ஆபத்தான விடயமாக மாறலாம். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.*

அவர் மேலும் தெரிவித்ததாவது.

20 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடான நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணி நகர்வுகளை முன்னெடுத்துள்ளது. ஆனால் மாகாண சபைகள் முறைமை நாட்டில் இருக்கும் வரை நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்க முடியாது.

மாகாண சபைகள் எல்லைமீறி செயற்படும் போது அவற்றை கட்டுப்படுத்தும் அதிகாரம் அரச தலைவருக்கே இருக்கிறது.

இது தொடர்பில் கூட்டு எதிரணி இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை. சில தினங்களில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறும். இதன்போது 20ஆவது திருத்தச் சட்டம் குறித்து நாங்கள் ஒரு முடிவுக்கு வருவோம். ஆனால் ஒரு கொள்கையின் அடிப்படையில் மாகாண சபை முறைமை இருக்கும் வரையில் அரச தலைவர் முறைமையை நீக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கின்றோம் - என்றார்.

(5,61)

# நிறைவேற்று தலைமை அமைச்சர் முறைமை நாட்டைச் சீரழிக்கும்

## விஜயதாச எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 23
நிறைவேற்று தலைமை அமைச்சர் முறைமை முழுநாட்டையும் சீரழிக்கும், என்று முன்னாள் நீதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தொடர்ந்தும் நிறைவேற்று அரச தலைவர் அதி காரத்தை அதிகரிக்கவேண்டும்.

அதற்கு மாறாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைமை அமைச்சரை உருவாக்குவது பொருத்தமற்றது.

சுயநல அரசியலுக்காக நிறைவேற்று அதிகார அரச தலைவருக்குப் பதிலாக, நிறைவேற்றுத் தலைமை அமைச்சர் முறைமையைக் கொண்டுவர முனைகின்றனர். நாட்டின் உறுதிப்பாட்டுத் தன்மைக்கு நிறைவேற்று அரச தலைவர் முறைமை தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்பதுடன், அரச தலைவரின் சில அதிகாரங்களும் அதிகரிக்கப்படவேண்டும், என்றும் அவர் கூறியுள்ளார். (5)



# நிறைவேற்று அதிகாரம் நீக்கப்பட வேண்டும்

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டிலேயே நாம் தொடர்ந்தும் இருக்கின்றோம், என்று முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை நீக்குவதாகத் தெரிவித்தே 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி ஆட்சியமைக்கப்பட்டது. அந்த நிலைப்பாட்டில் தொடர்ந்தும் உள்ளோம். முன்னாள் அரச தலைவர்களான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச ஆகியோர் வாக்குறுதியளித்தபோதும் இரண்டு தடவைகள் அரச தலைவர் பதவி வகித்த அவர்களால் அது நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில், நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாகத் தெரிவித்தே மைத்திரிபால சிறிசேன பொதுவேட்பாளராக நியமிக்கப்பட்டார். அது நடைபெறவேண்டும் - என்றார். (5)




# முகநூல் மூலம் நிதி மோசடி!

## ஆயத் திணைக்களம் எச்சரிக்கை

முகநூல் ஊடாக இலங்கையில் பெரிய நிதி மோசடிகள் இடம்பெற்று வருவதாக ஆயத் திணைக்களம் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தது.

முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக லொத்தர் சீட்டால் பல்வேறு பரிசுகள் கிடைத்ததாக இலங்கையர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அதனையடுத்து அந்தப் பரிசுப் பொருள்களை அனுப்புவதற்குப் பணம் பெற்று கொள்ளும் மோசடியில் சிக்கிக் கொள்ள வேண்டாம் என்று இலங்கை ஆயத் திணைக்களம் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்தது.

கடந்த காலங்களினுள் வெளிநாட்டில் வசிப்பதாகக் கூறி வெற்றியாளர்களுக்குக் கிடைத்துள்ள பரிசை அனுப்புவதற்குப் பெரிய அளவு பணம் மோசடி செய்த சம்பவங்கள் தொடர்பில் ஆயத் திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பல்வேறு குழுக்கள் இந்த மோசடிகளில் ஈடுபட்டதாகத் தகவல் வெளியாகியது.

முகநூல் ஊடாக லொத்தர் பரிசு கிடைத்ததாகக் கூறி இலங்கைத் தொலைபேசி இலக்கத்திலிருந்து அழைப்பை ஏற்படுத்துவர். இந்தப் பரிசை விடுவித்துக் கொள்வதற்காக ஆயப் பிரிவுக்குப் பணம் செலுத்த வேண்டும் என்று வங்கிக் கணக்கை வழங்குகின்றனர். இதனால் ஏமாற்றம் அடைந்த பலர் பெருந்தொகைப் பணத்தை அந்த வங்கிக் கணக்கில் வைப்பு செய்தனர். இந்த மோசடி நடவடிக்கையின் மூலம் இலங்கையர்கள் பலர் கோடிக்கணக்கான பணத்தை இழந்ததாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (5)

### தங்கம் கடத்திய தம்பதி கைது

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் தங்கம் கடத்திய தம்பதியைக் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய ஆயப் பகுதியினர் நேற்றுக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2.355 கிலோ கிராம் (294 பவுண்) எடை கொண்ட தங்கம் மற்றும் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் இன்றைய பெறுமதி 91 இலட்சத்து 13 ஆயிரத்து 850 ரூபாவாகும். (5)

இரகசியங்களை வெளியிடத் தயார்!

# 16 பேருக்கும் அமரவீர கொடுத்துள்ள அதிர்ச்சி



கொழும்பு, ஏப். 23
அமைச்சுப் பதவிகளைத் துறந்துவிட்டு 16 பேரினது இரகசியங்களையும் வெளியிடத் தயாராக இருக்கின்றேன், என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளியேறிச்சென்ற அனைவரும் எம் மீது வெறுப்பை உமிழும் செயற்பாடுகளைச் செய்து வருகின்றனர். அடுத்த வாரத்திலிருந்து அவர்களுக்குப் பதில் வழங்கும் பணிகள் ஆரம்பமாகும். அந்தவகையில் அமைச்சுப் பதவிகளைத் துறந்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 16 பேர் தொடர்பிலான இரகசியங்கள் வெளியிடப்படும், - என்றார். (5)

# உள்வீட்டு மோதல்களாலேயே உண்மைகள் வெளிவருகின்றன

## பிரபாகரன் - கருணா மோதலுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார் ரஞ்சன் ராமநாயக்க



கொழும்பு, ஏப். 23

பிரபாகரனும் கருணா அம்மானும் முட்டி மோதிக் கொண்டமையால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மோசடிகளும் கொலைகளும் வெளிப்பட்டன. அது போன்று நாட்டைக் கொள்ளையடிக்கும் திருடர்களும் மோதிக்கொள்ளும்போது பல திருட்டுக்கள் வெளியாகும்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜீன மகேந்திரனைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நியமித்தது பெரும் தவறாகும். தலைமை அமைச்சர் ஒருபோதும் ஊழல் மோசடிகளுக்கு உடைந்தையாக மாட்டார். அர்ஜீன மகேந்திரன் செய்த தவறுக்கு ரணிலைக் குற்றவாளியாக்க முடியாது. மத்திய வங்கி மோசடி விடயத்தில் ரணில் மீது குற்றஞ் சுமத்துவதற்குச் சுதந்திரக் கட்சியினர் 16 பேருக்கும் எந்தவொரு தகுதியும் கிடையாது.

இந்த 16 பேரும் பெரிய மோசடிக்காரர்களாவர்.

மத்திய வங்கி மோசடிக்கு நானும் எதிர்ப்புத் தெரிவித்தேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தேன். தவிர்க்க முடியாத காரணங்களால் எதிராக வாக்களித்தேன்.

நான் எப்போதும் மக்களின் குரலாகவே இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். இதன்படி நான் ஒருபோதும் ஊழல் மோசடிக்காரர்களுக்கு ஆதரவாகச் செயற்பட மாட்டேன்.

பிரபாகரனும் கருணா அம்மானும் முட்டி மோதிக் கொண்டமையால் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மோசடிகளும் கொலைகளும் வெளிப்பட்டன. அது போன்று நாட்டைக் கொள்ளையடிக்கும் திருடர்களும் மோதிக்கொள்ளும்போது பல திருட்டுக்கள் வெளியாகும். தற்போது திருடர்களும்திருடர்களும்மோதிக் கொள்கின்றனர். இதன்பிரகாரமே மத்திய வங்கி மோசடி வெளியே வந்தது. அதுபோன்று திருடர்கள் மோதிக்கொள்ளும் போதுதான் இன்னும் பல மோசடிகள் வெளியாகி ஊழல் மோசடி இல்லாத நாடு தோற்றம் பெறும்.

ரணில் எப்போதும் தேர்தலில் தோற்றது கிடையாது. அதிக விருப்புவாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார். நாட்டு மக்கள் மத்தியில் தலைமை அமைச்சர் ரணில் மீது ஆதரவு குறைவாகும். கட்சியின் தலைமைத்துவத்தை ரணில் இளைய தலைமுறைக்கு வழங்க வேண்டும்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் மாத்திரம் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றால் போதாது. நாட்டில் வாழும் 2 கோடி மக்களின் ஆதரவைப் பெற்று வெற்றி பெற வேண்டும். நான் மக்களின் ஆதரவைப் பெற்றவனா என்று ரணில் தன்னைத் தானே சுய விசாரணை செய்ய வேண்டும் - என்றார். (5.61)

# அரசமைப்புப் பேரவை தொடர்ந்து இயங்கும்

கொழும்பு, ஏப். 23

நாடாளுமன்றம் முடக்கப்பட்ட போதிலும், அரசமைப்புப் பேரவை தொடர்ந்து செயற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த ஏப்ரல் 12ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம், மே 8ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தை முடக்கி வைக்கும் உத்தரவைப் பிறப்பித்தார்.

இதன் மூலம், நாடாளுமன்றத்தின் ஒழுங்குப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்த அனைத்துச் சட்டவரைவுகள் மற்றும் தீர்மானங்களும் செல்லுபடியற்றதாகி விட்டன. இந்த நிலையில், இவற்றை மீண்டும் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாயின், அவை மீண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அரசமைப்புப் பேரவைக்கு அந்த நிலை ஏற்படாது என்றும் அது தொடர்ந்தும் செயற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (5)

# சுற்றுலாவிகளுக்கு இடையூறு விளைவித்தால் நடவடிக்கை

## மிரிஸ்ஸ சம்பவம் கவலையளிப்பதாக அரசு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

இலங்கையில் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளதாகச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.



மிரிஸ்ஸவில் சுற்றுலாப் பயணிகளுக்கு இடம்பெற்ற அசௌகரியமான சூழலைக் கருத்திற் கொண்டு இவ்வாறு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

மிரிஸ்ஸ சுற்றுலாக் கடற்பகுதியில் வைத்து வெளிநாட்டுப் பெண்ணொருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். ஒல்லாந்துக் குடிமகன் தாக்கப்பட்டார். இஸ்ரேல் குடிமக்கள் 4 பேரும் தாக்கப்பட்டனர். இதனால் சுற்றுலாத் துறைக்கு ஏற்பட்ட பின்னடைவை வெற்றி கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் தெளிவுப் படுத்தும் ஊடக மாநாட்டிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் மிரிஸ்ஸவில் இடம்பெற்ற சம்பவத்தால் எமது சுற்றுலாத்துறைக்கு அபகீர்த்தி நிலமையேற்பட்டது. இப்படியான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடப்பதைத் தவிர்ப்பதற்கான பலவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. முதற்கட்டமாக மிரிஸ்ஸப் பகுதியிலிருந்தே பொலிஸ் பாதுகாப்பு வலயங்கள் பலப்படுத்தப்பட்டன. அவற்றுடன் சுற்றுலாப் பொலிஸாரின் பாதுகாப்புப் படையணியும் அனைத்துச் சுற்றுலாப் பகுதிகளிலும் அதிகரிக்கப்பட்டன.

அண்மையில் நடந்த சம்பவம் தொடர்பில் இலங்கைச் சுற்றுலாத் துறை கவலையடைகின்றது. சுற்றுலாப் பயணிகள் நடமாடும் பிரதேசங்களில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்தமையும் சுற்றுலாப் பயணிகளின் கொண்டாட்டங்கள் 24 மணிநேரம் என்று விடிய விடிய இடம்பெறுவதுமே இவ்வாறான சம்பவங்களுக்கு வழிகோருகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய அனைத்துச் சட்டநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சுற்றுலாத் துறையில் அபிவிருத்தி குறித்தும் எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக் குறித்தும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன - என்றார். (5.61)



# அரசுக்கு எதிராக எதிர்ப்பு எதிரணி உருவாக்குவதே எங்கள் நோக்கம்

## கூறுகிறார் எஸ்.பி. திசாநாயக்க

கொழும்பு, ஏப். 23

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவளித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் நோக்கம் எதிர்காலத்தில் பரந்தளவிலான ஒரு கூட்டணியை உருவாக்கிச் செயற்படுவதே.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த 16 சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் எமது எதிர்கால நோக்கம் மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப் பட்டன.

அதன் படி சுதந்திரக் கட்சி உறுப்பினர்களாக 16 உறுப்பினர்களும் ஒன்றிணைந்து பொதுவான எதிரணியாகச் செயற்படத் தீர்மானித்துள்ளோம்.

இது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை - என்றார். (5,31)

# உதயங்கவை இலங்கைக்கு அனுப்ப மறுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்



கொழும்பு, ஏப். 23

மிக் போர் வானூர்திக் கொள்வனவு மோசடி தொடர்பாகத் தேடப்படும், ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை, நாடு கடத்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மறுத்துள்ளது.

அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில் டுபாய் வானூர்தி நிலையத்தில் உதயங்க வீரதுங்க தடுக்கப்பட்டார். இதையடுத்து அவர் ஐக்கிய அரபு எமிரேட்ஸை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

எனினும், உதயங்க வீரதுங்கவை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தோல்வியில் முடிந்திருக்கின்றன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸீக்கும் இலங்கைக்கும் இடையில் நாடு கடத்துதல் தொடர்பான உடன்பாடு செய்து கொள்ளப்பட்ட போதிலும், அது நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறவில்லை. இந்த நிலையில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, அவரை நாடு கடத்துவதற்கான உத்தரவைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்த நாட்டின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் இலங்கை அதிகாரிகள் குழப்பமடைந்தனர் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டது. (5)

# சிங்கள பௌத்த வாக்குகளைத் தக்க வைக்கும் வேலைத் திட்டம் அவசியம்!

## நவீன் திசாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

சிங்கள பௌத்த வாக்குகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் நவீன் திசாநாயக்க கூறியுள்ளார்.


கண்டி தலதா மாளிகைக்குப் பயணம் செய்த அவர் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் கிராமிய மட்ட மக்கள் இருக்கின்றனர். அனைத்துத் தரப்பினருக்கும் தெளிவாக விளங்கும் வகையிலான மாற்றம் கட்சியில் ஏற்படுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டில் தான் இருக்கிறோம்.



சிங்கள- பௌத்த வாக்குகள் சிதறி உள்ளன. அந்தச் சிங்கள - பௌத்த வாக்குகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் 30ஆம் திகதிக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிகள் நிரப்பப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம் - என்றார். (5)



# இராட்சத வானூர்தி இரகசியமாகத் தரையிறங்கியதா ?

## சந்தேகம் கிளப்பும் பாகிஸ்தான் ஊடகம்

கொழும்பு, ஏப். 23

மத்தள வானூர்தி நிலையத்தில் மூன்று நாள்கள் தரித்து நின்று விட்டு, கடந்த வெள்ளிக்கிழமை மாலை புறப்பட்டுச் சென்ற ரஷ்யாவின் இராட்சதச் சரக்கு வானூர்தியான அன்ரனோவ்225, கராச்சியில் தரையிறக்கப்பட்டமை தொடர்பாகப் பாகிஸ்தான் ஊடகம் ஒன்று சந்தேகம் வெளியிட்டது.

இந்த வானூர்தி கராச்சி ஜின்னா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் இரகசியமாகத் தரையிறக்கப்பட்டதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டது.

முன்கூட்டியே திட்டமிடப்படாமல், இந்த வானூர்தி எரிபொருள் நிரப்புவதற்காகத் தரையிறக்கப்பட்டதாகவும், பணியாளர்கள் ஓய்வெடுத்த பின்னர் நேற்றுக் காலை இது, சவூதி அரேபியாவின் டமாம் நகருக்குப் புறப்பட்டுச் சென்றது என்றும் பாகிஸ்தான் சஹீன் வானூர்திகள் சேவைகள் நிறுவனம் தெரிவித்தது.

அவசரமாக எரிபொருள் நிரப்புவதற்காகவே மத்தள வானூர்தி நிலையத்தில் தரையிறக்கப்பட்டதாகவும், மீண்டும் அது கராச்சியிலும் எரிபொருள் நிரப்புவதற்காக அவசரமாகத் தரையிறக்கப்பட்டது என்றும் பாகிஸ்தான் ஊடகம் சந்தேகம்வெளியிட்டது. 640தொன்எடையுள்ள பொருள்களைச் சுமந்து செல்லக்கூடிய இந்த வானூர்தியில் கொண்டு செல்லப்படும் பொருள்கள் பற்றிய எந்த விவரங்களும்வெளியிடப்படவில்லை. (5)

# குழப்பங்களை வாய்ப்பாக பயன்படுத்துகிறது அரசு

## குற்றஞ் சுமத்துகிறது மகிந்த அணி



கொழும்பு, ஏப். 23

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கண்டிக் கலவரத்தின் போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நிறைவேற்றி விட்டார். புலம் பெயர் தமிழர் அமைப்புகளுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றி விட்டார். தற்போது அனைவரும் மறந்து விட்ட புதிய அரசமைப்பை, தற்போதைய அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றுவதில் மறைமுகமாக முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாகுவதால் நாட்டில் எவ்வித மாற்றங்களும் ஏற்படப்போவது கிடையாது. அதற்கான தேவைகள் ஏதும் தற்போது தோற்றம் பெறவில்லை. 1978ஆம் ஆண்டு அரசமைப்பைக் கொண்டே இலங்கை அரசு நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்து வந்தது. இந்த அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டே நாடு பொருளாதாரம் மற்றும் மனிதவள அபிவிருத்திகளிலும் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வந்தது

ஒரு தரப்பினரின் நலனை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நாட்டைக் கூறுபடுத்துவது பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது. வடக்கு - கிழக்கு மக்களுக்காகவே புதிய அரசமைப்பைக் கோருகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்து கூறுகின்றனர். ஆனால் வடக்கு - கிழக்கு மக்கள் புதிய அரசமைப்பு உருவாகுவது தொடர்பில் எந்தவித அக்கறையும் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிறைவேற்றியுள்ளனரா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. புதிய அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் வடக்கு - கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டே தீர்வைக் காணமுடியும்.

கூட்டு அரசில் தற்போது கருத்து வேறுபாடுகள் உறுப்பினர்களுக்கு இடையே அதிகமாகவே காணப்படுகின்றது. புதிய அரசமைப்பை உருவாக்கும் போது ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவானவர்களை விலைக்கு வாங்கி மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் இந்தப் புதிய அரசமைப்பை நிறைவேற்றி விடுவார். மக்கள் விடுதலை முன்னணியும் ரணிலுக்கு ஆதரவாகவே செயற்படும் - என்றார். (5,31)

# மைத்திரிக்கு எதிராக குற்றவியல் தீர்மானம்

## ஐ.தே.க. கூட்டு எதிரணி பேச்சு

கொழும்பு, ஏப். 23

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் குற்றவியற் தீர்மானம் கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்தனர். அது குறித்துக் கூட்டுஎதிர்க்கட்சி உறுப்பினர்களுடனும் அவர்கள் பேச்சு நடத்தினர் என்று, மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவின்றி வெற்றி கொள்ள முடியாதென ஏற்கனவே நாம் தெரிவித்தோம். மைத்திரி அதற்கு ஆதரவு வழங்கவில்லை. தீர்மானம் தோல்வியடைந்தது. இந்தப் புதிய ஆண்டில் எதிர்வரும் ஓரிரு வாரங்களில் நாட்டின் அரசியலில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் நிகழவுள்ளது.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களைக் காட்டிக் கொடுப்பார் எனவும் ஏற்கனவே நாம் தெரிவித்து வந்தோம். அவ்வாறே நடைபெற்றது. 16 உறுப்பினர்களை நிர்க்கதி நிலைக்கு உட்படுத்தினார்.

சிறிலங்காசுதந்திரக்கட்சிதற்போதுமூன்று நான்கு பிரிவுகளாகப் பிளவடைந்து சீரழிந்துள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பின்னர் அரசாங்கம் உறுதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது.


நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இருபெரும்கட்சிகளும்இணைந்துகூட்டு அரசை அமைத்தன. தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கில் ஒரு பகுதியினரே கூட்டு அரசில் அங்கம் வகிக்கின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்பவே நடவடிக்கை எடுக்கின்றனர்.

தற்போதைக்குக் கூட்டு அரசு இல்லை. எதிர்வரும் மே மாதம் எட்டாம் திகதியளவில் நாடாளுமன்றம் கூட்டப்படும் என நம்புகிறோம். அப்போது கூட்டு அரசா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் இணைந்து முன்னெடுக்கும் அரசா என்பது குறித்துச் சபாநாயகர் தீர்மானிக்க வேண்டிவரும்.

நாடாளுமன்ற அமர்வு காலம் தாழ்த்தப்பட்டது. நாடாளுமன்றுக்குள் இடம்பெற்ற நிகழ்வால் மைத்திரி நம்பிக்கையிழந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் மைத்திரிக்கு எதிராகக் குற்றவியற் தீர்மானம் கொண்டு வருவது குறித்துப் பேச்சு நடத்துகின்றனர். அந்தத் தரப்பினர்களில் சிலர் எம்முடனும் அது தொடர்பில் பேச்சு நடத்துகின்றனர்.

ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு குற்றவியற் தீர்மானம் கொண்டுவரப்படுமிடத்து கூட்டு எதிர்க்கட்சி சார்பில் நாம் ஒரு முடிவுக்கு வருவோம். மைத்திரிக்கு எதிரான குற்றவியற் தீர்மானத்தைத் தவிர்ப்பதற்காகவே நாடாளுமன்ற அமர்வு பிற்போடப்பட்டது.

கடந்த சில தினங்களில் தங்கத்துக்கான இறக்குமதி வரி பதினைந்து சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. அதுவும் தமிழ் மக்கள் தங்கம் கொள்வனவு செய்யும் அக்சயதிருதியை நாளை அண்மித்தே விலை அதிகரிப்பு ஏற்பட்டது. அந்தத் தினத்தில் தங்கம் கொள்வனவு செய்வதற்கு அதிகளவானோர் முற்கொடுப்பனவு செலுத்தினர். அதனால்வியாபாரிகள்மிகுந்தநெருக்கடியைச் சந்தித்தனர் - என்றார். (5,31)



# நம்பிக்கையில்லாத் தீர்மானம் மக்களைஏமாற்றும்வேலையே!

## சாடுகிறது மக்கள் விடுதலை முன்னணி

கொழும்பு, ஏப். 23

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வருவதாகக் கூறுவது சாத்தியமற்றது. மக்களை ஏமாற்றும் வேலை. அரசிலிருந்து வெளியேறும் வரையில் மகிந்த அணிக்கு எதிர்க்கட்சிப் பதவி வழங்கப்பட முடியாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரில்வின் சில்வா இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சி தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட்டுஎதிர்க்கட்சி கொண்டுவருவதாகக் கூறிய போதிலும் அவர்களால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியாது. அதற்கான தயார் நிலையிலும் அவர்கள் இல்லை. ஊடகங்கள் முன்னிலையில் தங்களைப் பிரபல்யப்படுத்த ஒரு சிலர் கூறும் கதைகள் என்றே நாம் இதனைக் கருதுகின்றோம்.

ஆளும் கட்சியாகவும் இருந்துகொண்டு அதே நேரம் அவர்களே எதிர்க்கட்சியாகவும் செயற்படுவது என்பது எங்குமே இடம்பெறாத இனியொரு போதும் இடம்பெற முடியாத காரியமாகும். அவர்களுக்கு எதிர்க்கட்சித் தகுதி வேண்டும் என்றால் அரசிலிருந்து வெளியேற வேண்டும்.

தாம் அமைச்சுப் பதவிகளைத் துறக்கின்றோம், எதிர்த்தரப்பில் அமர்கின்றோம் எனக்கு எதிர்க்கட்சிப் பொறுப்புக்களைத் தாருங்கள் என்று கூறுவதால் பதவிகளை வழங்க இயலாது. அது சாத்,தியமற்ற விடயமாகும்.

அரசு மறுசீரமைக்கப்படப் போவதாக அரச தலைவர் மைத்திரியே கருத்துக்களை முன்வைத்து வருகின்றார். அவ்வாறு மறுசீரமைப்புகள் இடம்பெறுமாயின் அதன் மூலமாக எதிர்க்கட்சி மாற்றங்கள் ஏற்படுமாயின் அதனை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். தனி நபர்களின் விருப்பத்துக்கு அமைய செயற்படமுடியாது.


நிறைவேற்று அரச தலைவர் முறைமையை இல்லாதொழிக்க வேண்டும்என்றநிலைப்பாட்டில் இருந்தே நாம் போராடி வருகின்றோம்.

நாடாளுமன்ற அமர்வுகளில் 20ஆம் திருத்த யோசனையாக நிறைவேற்று முறைமையை மாற்றும் திட்டத்தைக் கொண்டுவர இருந்த போதிலும் அமர்வுகள் தள்ளி வைக்கப்பட்டன.

மே மாதத்தில் 20 ஆம் திருத்த யோசனைகளை கொண்டு வருவோம் - என்றார். (5,31)

## மரண அறிவித்தல்

### மதியழகன் பத்மராசா (பப்பா)



முகாம் வீதி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மதியழகன் பத்மராசா (பப்பா) கடந்த 21.04.2018 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் மதியழகன் - லீலாவதி தம்பதிகளின் அன்பு மகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**முகாம் வீதி, ஊர்காவற்றுறை**

(CS/15944)(11,17)

---

இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ் புதுக்கிய பதிப்பு

## வெளியீட்டு விழா

இடம் : செகராச சேகரப்பிள்ளையார் ஆலய மண்டபம்
காலம் : 25.04.2018 புதன்கிழமை
நேரம் : பி.ப. 5.மணி

### நிகழ்ச்சி நிரல்

தேவாரம் :
தலைமையுரை : திரு.ம.பா.மகாலிங்கசிவம்
வரவேற்புரை : திரு.த.மனோஜ்குமார்
வெளியீட்டுரை : பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் (துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)
ஆய்வுரை : சிவத்தமிழ் வித்தகர் திரு.க.சிவமகாலிங்கம்
நன்றியுரை : திருமதி க.மகாலிங்கசிவம்

**விநாயகப் பெருமான் அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

குறிப்பு: வெளியீட்டு விழாவில் கிடைக்கும் நிதி ஆலய வளர்ச்சிக்காக நிருவாகத்தினரிடம் ஒப்படைக்கப்படும்.

விழாக்குழுவினர்

(cs.15861)(13.17)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக நிதிக்கிளையில் கடமையாற்றும் **திருமதி ரஜிதா சித்தார்தர்** அவர்களின் அன்புத் தந்தை **இராசையா இராசரெத்தினம்**



அவர்கள் 20.04.2018 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தமையையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், சங்கானை.**

---

# காணவில்லை



தர்மகுலசிங்கம் ச.ச.நிலையம் வல்வெட்டியைச் சேர்ந்த **சேதுலிங்கம் பெண் விமலாதேவியை (சுசி) 18.04.2018 இல்** இருந்து காணவில்லை. **இவர் நாலுபிள்ளைகளின் தாயாவார். வயது 49.** இவர் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் தகவல் தரவும்.

**077 581 3625, 076 913 1881**

(CS/15946)(11.17)

---

## வீட்டுக்குவந்து கற்பித்தல்

ஆங்கிலம் - அனைத்துத் தரத்தினருக்கும்
கணக்கீடு - ஆங்கிலம்/ தமிழ் - O/L, A/L
குடியுரிமை - ஆங்கிலம் / தமிழ்
புவியியல் - ஆங்கிலம் / தமிழ்
சுகாதாரக் கல்வி - ஆங்கிலம் / தமிழ்

**077 331 6402**

---

## விற்பனைக்குண்டு

பந்தல் சேவைக்குரிய பந்தல்கள், கதிரைகள், மணவறை Set மற்றும் ஏனைய பொருள்கள் உடன் விற்பனைக்குண்டு.


**077 233 7998**

---

## மரண அறிவித்தல்கள்

### இராசையா இராஜசெல்வம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)**



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கோப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராஜசெல்வம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) 20.04.2018 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவரான சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜீவாவின் அன்புக்கணவரும் சத்தியசெல்வனின் அன்புத்தமையனும் லதர்சன் (விரிவுரையாளர்- ATI Jaffna) லகீசன், லவீனா ஆகியோரின் அன்புத்தந்தையும், நிஷங்கனின் அன்பு மாமனாரும் விலோஜனா வின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2018) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்குளடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராஜவீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

தகவல் : **குடும்பத்தினர்.**
**077 626 8319**

---

## மரண அறிவித்தல்



**பிறப்பு** 03 . 03 . 1944

**இறப்பு** 22 . 04 . 2018

### திருமதி குணமணிதேவி இராசரத்தினம்

**(ஓய்வு பெற்ற ஆசிரியை, சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை)**

சுதுமலை வடக்கு, சுதுமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணமணிதேவி இராசரத்தினம் நேற்று (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா சௌபாக்கியவதி தம்பதியரின் அன்புபுதல்வியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் இராசரத்தினத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி கமலாதேவி, கோபாலகிருஷ்ணன் மற்றும் சிதம்பரநாதன், கார்த்திகேசு காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற மகேசன் மற்றும் திருநாவுக்கரசு, பகவதி, சகுந்தலாதேவி, சிவயோகம் ,சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான இராசமணி புவனேஸ்வரி மற்றும் சோதி, ஜெயராணி, சிவபாலன், நிர்மலா ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மதவடி ஒழுங்கை,**
**சுதுமலைவடக்கு, சுதுமலை.**

**தகவல்:**
**கணவர் (இராசரத்தினம்)**
**077 302 4449**

---

### திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை

(முன்னாள் பங்காளர், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ் கொச்சிக்கடை)



**பிறப்பு** 20.07.1928 **இறப்பு** 21.04.2018

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் தெய்வானைப்பிள்ளை கடந்த (21.04.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் கந்தையா (சாமி கந்தையா) கணபதிஅம்மாள் தம்பதியரின் மூத்த மகளும் செம்பாட்டை சேர்ந்த சங்கரப்பிள்ளை சிவகாமி தம்பதியரின் இளைய மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (முன்னாள் பதுளை வர்த்தகர் SSS) அவர்களின் அன்புமனைவியும் திருவருளின் (முன்னாள் பங்காளர், ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ் கொச்சிக்கடை) அன்புத்தாயாரும் உமாதேவியின் அன்பு மாமியும் சதாசிவம் (வர்த்தகர், நாத்தாண்டியா) ராஜலக்சுமி தம்பதியரின் சம்மந்தியும் காலஞ்சென்றவர்களான சதாசிவம், வைத்திலிங்கம், பாக்கியம், சோமசுந்தரம், பொன்னம்பலம் (நமசிவாயம்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிதம்பரப்பிள்ளை (மலேசியன்பென்சானியர்), தெய்வானைப்பிள்ளை, இலட்சுமி, தங்கம்மா, சின்னக்குட்டி. வள்ளிப்பிள்ளை, பொன்னம்பலம், கந்தையா, பொன்னம்மா, ராஜலக்சுமி, பாலாமணி, சிவசம்பு ,பரஞ்சோதி, மனோன்மணி ஆகியோரின் அன்புமைத்துனியும் உமாகாந்தன் - வினோதினி(லண்டன்), அருட்செல்வம்-தனலக்சுமி(லண்டன்)கேமப்பிரசன்னா - நாகதர்சினி (T.Prasanna Pvt.Ltd ,கொழும்பு). ரஜிதா - செந்தில்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் தீபிகன், அபிராமி, அக் ஷயன் ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது கொழும்பு இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (24.08.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 8 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.06, 46 ஆவது ஒழுங்கை,**
**வெள்ளவத்தை, கொழும்பு 06.**

**தகவல்:**
**மகன் - சு. திருவருள் - 078 671 9724**
**மருமகள் - உமாதேவி - 078 3720 823,**
**உமாகாந்தன் -0044 87985306698,**
**அருட்செல்வம் - 0044 7532 758 812,**
**கேமப்பிரசன்னா - 077 340 5752,**
**ரஜிதா - 0044 7728739978**

தங்க நகைகளை அபகரிக்கத் திட்டப்பட்ட

## கொள்ளையரின் திட்டங்கள் அனைத்தையும் முறியடித்துத் தப்பித்த பெண்

எழுதுமட்டுவாழில் சம்பவம்

தென்மராட்சி, ஏப்.23

தாலிக் கொடி உள்ளிட்ட தங்க நகைகளை அணிந்திருந்த பெண்ணை மடக்கி நகைகளை அபகரிக்க கொள்ளையர்கள் பலவாறு முயற்சித்த போதும் அந்தத் திட்டங்கள் அனைத்தையும் முறியடித்து சாதுரியமாகத் தப்பித்துள்ளார் குடும்பப் பெண்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள ஆலயமொன்றுக்குச் சென்றுவிட்டு சைக்கிளில்தனிமையில்வீடுதிரும்பியுள்ளார்பெண் ஒருவர். அவர் தாலிக் கொடி உள்ளிட்ட தங்க நகைகளை அணிந்திருந்தார். தனிமையில் அந்தப் பெண்ணிடம் இருந்து நகைகளைக் கொள்ளையிடுவதற்கு இனம் தெரியாத நபர்கள் முயற்சித்தனர். மோட்டார்சைக்கிளில்இருவர்பெண்ணைப் பின் தொடர்ந்துள்ளனர்.

அதைஅவதானித்தபெண்அங்குள்ள கடையினுள் சென்று பொருள்கள் வாங்குவதுபோல்பாசாங்குசெய்துள்ளார். இதன் போது கொள்ளையர்கள் மறைந்துள்ளனர். சாலையில் நடமாட்டமில்லாததை அறிந்த பெண் மீண்டும் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீடு சென்றுள்ளார்.

எனினும் கொள்ளையர்கள் விடாது ஒழுங்கையொன்றினூடாக மோட்டார் சைக்கிளில் வந்து நகைகளை அபகரிக்க முற்பட்டுள்ளனர். இதன் போது சைக்கிளிலிருந்து குதித்து அந்தப்பெண்அருகில்உள்ளகுடியிருப்புக்குள் சென்று கூக்குரலிட்டுள்ளார்.

அயலவர்கள் விடயத்தைக் கேட்ட போது சம்பவத்தைக் கூறியுள்ளார். அங்கிருந்தவர்கள் வெளியே வந்த போது இருட்டில் நின்ற மோட்டார் சைக்கிள்அங்கிருந்துஓடித்தப்பித்தது என்று தெரிவிக்கப்பட்டது. நகைகளை அபகரிக்க கொள்ளையர்கள் வகுத்த திட்டங்கள் அனைத்தும் முறியடிக்கப்பட்டன. அங்கிருந்து பெண் பாதுகாப்பாக வீடு சென்றார் என்று கூறப்பட்டது. குறித்தபகுதியில்சாலை விளக்குகள் செயலிழந்து காணப்படுவதால் திருடர்கள், கொள்ளையர்கள் தப்பியோட இலகுவாகவுள்ளது.

எனவே அங்கு சாலைவிளக்குகளை அமைத்து தரவேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர். (21,9)

# தமிழரின் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சக்திகளுடன் விக்கி கூட்டுச் சேர்ந்தால் மக்கள் தக்க பாடம் புகட்டுவர்

சிவமோகன் எம்.பி தெரிவிப்பு

**வவுனியா, ஏப்.23**

**தமிழர்களைச் சிதைத்து ஒற்றுமையைக் குலைப்பதற்காகச் சில சக்திகள் கங்கணம் கட்டி நிற்கின்றன. அதற்குத் துணை போவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் முன்வருவாராக இருந்தால் அவருக்குரிய பதிலடி மக்களாலேயே வழங்கப்படும். இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்**

உள்ளூராட்சிசபைகளின்ஆட்சி அமைப்புத்தொடர்பாகஊடகவியலாளர்கள் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

வவுனியா நகரசபையில் ஒரு மோசடித் தனமான முறையில் ஆட்சியைக்கைப்பற்றியுள்ளார்கள்என்றுநிச்சயமாகச்சொல்லலாம். நேரடியாக வெற்றி பெற முடியாத கட்சிகளைக் கூட்டிணைத்து போனஸ் ஆசனங்களின் மூலம் ஆட்சியமைக்கப்பட்டுள்ளது. இது தவறானது. இதனால்எதிர்காலத்தில்இந்தத் தேர்தல் முறை மாற்றப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கிறது. தமிழர்கள் மட்டும் தான் ஆளவேண்டும் என்ற கருத்து என்னிடம் இல்லை. முஸ்லிம் அங்கத்தவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். இயலுமானால் சிங்கள மக்களையும் அரவணைத்தே செல்ல வேண்டும். ஏனெனில் வவுனியாவானது 3 இன மக்களையும் கொண்ட ஒரு பிரதேசமாக இருக்கிறது.

ஆனால் அங்கு ஜனநாயகத் தன்மைபேணப்படவேண்டும். எதிர்காலத்திலே புதிய சபைகளிலே வரவு - செலவுத்திட்டம் முன்வைக்கப்படும் போது தொங்கு சபைகளாகக் காணப்படும் சபைகள் அனைத்தும் பெரும் குத்துவெட்டினுள் சிக்கி உருக்குலையக்கூடியநிலைமை உள்ளது - என்றார்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் புதிய அரசியல் பிரவேசம் தொடர்பாக ஊடகவியலாளர்களால்கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், விக்னேஸ்வரன் தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்டவர். நாடு விடுதலை பெற்றபோது தென்னிலங்கை சார்ந்த தமிழர்கள் தான் எமது உரிமைகளை அடமானம் வைத்தார்கள். பிரித்தானியர் காலத்திலே எமக்கு ஒரு சரியான தீர்வைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டவர்கள் இந்தத் தென்னிலங்கைத் தமிழ் தலைவர்களே. அத்துடன் பொய்மையின் செயற்ப்பாடுகளே அவர் செய்து வருகிறார். ஆன்மிகம் என்ற பூச்சுப்பூசிக் கொண்டு அவரதுசெயற்பாடுகள்அனைத்தும்தவறாகத்தான் இருக்கிறது. வடக்கு மாகாண சபையில் எத்தனை கணக்கறிக்கைகளை அவர் இதுவரை செய்திருக்கிறார். வருடாவருடம் அதனைச் செய்திருந்தால் இந்த அமைச்சுக்களின் மீது மோசடி என்பது வந்திருக்காது. இன்னும் கிளறிப் பார்க்கப் போனால் இவரின் மீதுள்ள பெரிய தவறுகள் அனைத்தும் வெளியில்வரும். எனவே மக்களால் பெற்றுக் கொண்டகடமையைச்சரியாக நிறைவேற்ற வேண்டும். இல்லாவிடில் ஒதுங்கி விடவேண்டும் - என்றார். (21,110)

267 வெற்றிடங்கள் உள்ள நிலையில்

## வடக்கில் கிராம அலுவலர் பதவிகளுக்கு 197 பேரின் பெயர்களே தெரிவாகியுள்ளன

யாழ்ப்பாணம் ஏப் 22

வடக்குமாகாணத்தில்267கிராமஅலுவலர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்ட கிராம அலுவலர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலில்197பேரின்பெயர்களேவெளியாகியுள்ளன. இதனால் 70 பதவிகள் மீண்டும் வெற்றிடமாகவே உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டலுவல்கள்அமைச்சால்அனைத்து மாவட்டங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 668 கிராம அலுவலர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலுமிருந்தும் 197 பேரின் பட்டியல் வெளியாகியுள்ளது.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளில் 77 பேரும் மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேசசெயலர் பிரிவுகளில் 28பேரும்வவுனியாமாவட்டத்தில்3பிரதேச செயலர்பிரிவகளில்30பேரும்முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேசசெயலர் பிரிவுகளில் 44 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் 18 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டள்ளது.

யாழ்ப்பாணமாவட்டத்தில்ஊர்காவற்றுறை, சங்கானை, சண்டிலிப்பாய் மருதங்கேணி, காரைநகர் ஆகிய பிரதேச செயலர்; பிரிவுகளுக்கு தலா 3 பேர் வீதமும் தெல்லிப்பளை, கோப்பாய், வேலணைஆகியபிரதேச செயலர் பிரிவுகளுக்கு தலா 5 பேர் வீதமும் உடுவில்பிரதேசசெயலர்பிரிவுக்கு8பேரும் கரவெட்டிபிரதேசசெயலர்பிரிவுக்கு6பேரும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு 4 பேரும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு 11 பேரும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு 7 பேரும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு 9 பேரும் நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரிவுக்கு இருவரும் தெரிவாகியுள்ளனர்.

மன்னார்மாவட்டத்தில்மன்னார்9, மாந்தை மேற்கு 6, நானாட்டான், முசலி தலா 5, மடு 3, வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு 5, வவுனியா 16, வெங்கலச்செட்டிகுளம் 9, முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், ஒட்டுசுட்டான் தலா 4 மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு தலா 8, கரைதுறைப்பற்று 17, வெலி ஓயா 3, கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி4, கண்டாவளை2, கரைச்சி 4, பூநகரி9எனஉள்நாட்டலுவல்கள்அமைச்சால் வெளியிடப்பட்ட கிராம அலுவலர் தெரிவுப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (9)

## நேர்முகத் தேர்வுக்கு கடந்த 5 நாள்களில் 653 பட்டதாரிகள் கலந்துகொண்டனர்

வவுனியா மாவட்ட செயலகத்திலுள்ள மனித வள வேலைவாய்ப்புத் திணைக்களத்தில் கடந்த திங்கட்கிழமை 16ஆம் திகதியிலிருந்து கடந்த வெள்ளிகிகழமை வரை 653 பட்டதாரிகளுக்கு நேர் முகத் தேர்வு இடம்பெற்றுள்ளது என்று வவுனியாவைச்சேர்ந்த மனிதவள வேலைவாய்புத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்ட செயலகத்தினூடாக வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு கடந்த திங்கட்கிழமை 16ஆம் திகதியிலிருந்து இடம்பெற்று வருகிறது. அதன்படி கடந்த வெள்ளிக்கிழமை மாலை வரை 653 பட்டதாரிகள் நேர் முகத் தேர்வுக்கு சமூகமளித்துள்ளனர். இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி வரையும் பட்டதாரிகளுக்கு மனிதவள வேலைவாய்ப்புத் திணைக்களத்தில் நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது. எனவே கடந்த நாள்களில் நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கத் தவறிய பட்டதாரிகள் உடனடியாக நேர்முகத்தேர்வுக்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் - என்றார். (21)

வெசாக் மற்றும் பொசன் பண்டிகைக் காலங்களிலும்

# உணவுப் பாதுகாப்பு: பி.எச்.ஐ. கண்காணிப்பு அவசியம்

சுகாதாரப் போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23

வெசாக்மற்றும்பொசன்பண்டிகை காலங்களில் பொதுமக்களுக்குச் சமைத்து வழங்கப்படும் உணவு வகைகளின் பாதுகாப்பு மற்றும் சுகாதார நலன்களைக் கண்காணிக்கப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைப்பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நடுவண் சுகாதார போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சரத் அமுனுகமவே இவ்வாறு அறிவித்தலை அனைத்து சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளார்.

கடந்த மாதம் ஊர்காவற்றுறைப் பகுதியில்ஆலயமொன்றில்வழங்கப்பட்ட உணவினை உண்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள்பாதிப்புக்குஉள்ளாகிமருத்துவமனைகளில்சிகிச்சைபெற்றதையடுத்து சுகாதாரத் திணைக்களத்தினர் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்எனசுகாதாரப்பிரிவினர் தெரிவித்தனர்.

உற்சவ காலங்களில் ஆலயங்களில்அன்னதானம்வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் அவை பொதுமக்களுக்குப்பாதிப்புஏற்படாதிருக்கும் வகையில் இருக்க வேண்டுமெனவும்அன்னதானத்துக்குப் பயன்படுத்தும் நீர் மற்றும் சமையல் மேற்கொள்ளும் இடங்கள் போன்றவை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கண்காணிக்கப்படுமாயின் பொதுமக்களுக்கு பாதிப்புஏற்படாதிருக்க வழிவகுக்குமெனவும்சுகாதாரப்பிரிவினர்தெரிவித்தனர். உற்சவகாலங்களில்அன்னதானத்துக்குஏற்பாடுகள்மேற்கொள்ளும்போதும்மண்டபங்களில் மங்கல நிகழ்வுகள் மேற்கொள்ளும் போதும் சுகாதாரப்பகுதியினருடன்தொடர்புகொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். அத்துடன் இவ்வாறான நிகழ்வுகளுக்கு சமையல் வேலையில் ஈடுபடும் தனிநபர்களும், தமது பிரதேசசுகாதார மருத்துவஅதிகாரிஅலுவலகத்தில்மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (21,9)

சிறுபோகப் பயிர்ச்செய்கையில்

## காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வது எப்படி?

சிறப்பு வேலைத்திட்டம் இன்று முல்லைத்தீவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஏப்.23

காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளத்தக்க வகையில் சிறுபோக பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான சிறப்பு விவசாய ஊக்குவிப்புவேலைத்திட்டம்ஆரம்பிக்கப்படவுள்ளது.

'ஒன்றாய்எழுவோம்இச்சிறுபோகத்தை வெல்வோம்' எனும் தொனிப்பொருளில் அரசதலைவரின் வழிகாட்டலில் 2018ஆம் ஆண்டுக்கானசிறுபோகப்பயிர்ச்செய்கையில் உச்ச அளவிலான உற்பத்தியைபெற்றுக்கொள்வதற்கான சிறப்பு விவசாய ஊக்குவிப்பு வேலைத்திட்டம் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும்கொழும்புகமத்தொழில் அமைச்சு, வடமாகாணவிவசாயஅமைச்சு,மாவட்டச்செயலகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்திஅலுவலகம், பிரதிவிவசாயப் பணிப்பாளர் பணிமனை மற்றும் விவசாய சம்மேளனங்களது பங்களிப்புடன்இன்று23ஆம்திகதியில் இருந்து 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பயன்படுத்தக்கூடிய சகல விவசாய நிலங்களிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல், பாதகமான காலநிலைத் தாக்கத்தை வெற்றிகொள்ளக்கூடியவிவசாய வழிமுறைகள், உற்பத்தி அளவை அதிகரிப்பதற்கான வழிவகைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் சிறந்த விவசாய செயற்பாடு நடைமுறைப்படுத்தல் எனும்விடயங்களைஉள்ளடக்கியதாக வேலைத்திட்டம் அமையவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்ப தற்காக நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களுக்கும்ஒவ்வொருபிரதிநிதியைக்கமத்தொழில்அமைச்சு நியமித்துள்ளது. வடமாகாணத்தின் இணைப்பாளராக பிராந்திய ஆராய்ச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் எஸ். ஜே.அரசகேசரிநியமிக்கப்பட்டுள்ளார் என்று அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுநாளை23ஆம்திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள விவசாயப்பயிற்சி நிலையத்தில் காலை10மணிக்குநடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாகவடமாகாணவிவசாய அமைச்சர் கந்தையா



சிவநேசன்,திணைக்களங்களின்மாகாணப்பணிப்பாளர்கள், பிரதிப்பணிப்பாளர்கள், மாவட்ட மட்ட அமைப்புக்கள், மாவட்டமட்ட உயரதிகாரிகள்,கமநலஅபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தொடர்ந்துமன்னார்மாவட்ட உயிலங்குளம்மாவட்டவிவசாய பயிற்சி நிலையத்தில் 24ஆம் திகதி காலை 9 மணிக்கும்,மறுநாள்25ஆம் திகதிகாலை9மணிக்குவவுனியா மாவட்ட முருகனூர் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திலும், 26ஆம்திகதி காலை9மணிக்குயாழ்ப்பாணம் தெல்லிப்பழையிலும், மறுநாள்27ஆம்திகதிகாலை 9மணிக்குகிளிநொச்சிசிவநகர்பகுதியிலும்வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (எ-113-112)

## திறந்து வைக்கப்பட்டு அடுத்த நாளே பிடுங்கப்பட்ட கட்சியின் பெயர்ப்பலகை

நல்லூரில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.23

நல்லூர்ப் பிரதேச சபை எல்லைப் பரப்புக்குள் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட கட்சி அலுவலகம் ஒன்றின் பெயர்ப் பலகை நேற்று அதிகாலை பிடுங்கிச் செல்லப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபையில் போட்டியிட்டுப் புதிதாக வெற்றியீட்டிய பெண் உறுப்பினர் ஒருவர் தனது கட்சியின் பெயரில் ஓர் அலுவலகத்தை வீட்டில் ஆரம்பித்து அதற்கான பெயர்ப் பலகையையும் வீதியில் நட்டார். இதற்கான நிகழ்வுகள் நேற்று முன்தினம் மிகவும் பிரமாண்டமாக இடம்பெற்றது.

இந்தநிலையில்புதிதாகதிறக்கப்பட்டகட்சிஅலுவலகத்துக்குநேற்றுக் காலையில் சென்றவர்களுக்குப் பெருத்த ஏமாற்றமே மிஞ்சியது. அதாவதுமுதல்நாள்திறந்துவைக்கப்பட்டபெயர்ப்பலகைஇரவோடு இரவாகவே கட்சியினால் பிடுங்கிச் செல்லப்பட்டுள்ளது.

வீதியோரம்நடப்பட்ட அந்தப்பெயர்ப்பலகையானதுசபையின்எந்தவொரு அனுமதியும் இன்றியே அமைக்கப்பட்டது என்று தெரியவந்துள்ளது. (21,105)

முல்லைத்தீவில்

# ரூபா 160 கோடியில் குடிதண்ணீர்த் திட்டம்

அடுத்த மாதங்களில் வேலைகள் ஆரம்பம் என்கிறது தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை

**முல்லைத்தீவு, ஏப்.23**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் குடிதண்ணீர்த்தட்டுப்பாட்டைப்போக்கமாவட்டத்தில் நீர்வழங்கல் வடிகால் அமைப்பு செய்வதற்கான நிதியாக 160 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான செயற்பாடுகள் அடுத்து வரும் மாதங். களில் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் மூன்று ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன. அதில் வற்றாப்பளை வீதியின் அருகில் உள்ள ஒரு ஆழ்துளைக் கிணற்றில் இருந்து கடந்தஆறுமாதகாலமாகநிலத்தடி நீர் வெளியேறிக்கொண்டு இருக்கின்றது. இது தொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகால்அமைப்புச் சபையின் மாவட்ட முகாமையாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் திட்டத்தின் மூலம் முல்லைத்தீவு நகரை அண்டிய 24 கிராமங்களைச்சேர்ந்த 8ஆயிரம் குடும்பங்கள் தண்ணீரைப் பெற்றுப் பயனடையவுள்ளனர். இதற்காக தண்ணீரூற்று பகுதியில் நீரினைப் பெற்றுக்கொள்வதற்கான 67மீற்றர்ஆழத்தில்மூன்றுஇடங்களில் கிணறுகள் அடிக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று அதிகளவு நீர் ஊற்றுப் காரணமாக நீரை வெளியில்தள்ளிக்கொண்டிருக்கின்றது. இந்தநீர் இன்னும்சிலநாள்களில் நின்றுவிடும் குறிப்பிட்ட இடங்களில் இருந்து தண்ணீரை 3ஆம் கட்டடைப்பகுதியில் உள்ள தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுஅங்கிருந்து நீராவிப்பிட்டியில்உள்ளநீர்த்தாங்கிக்கு ஏற்றப்பட்டு அதில் இருந்து மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. இது முல்லைத்தீவு மாவட்டத்துக்குக் கிடைத்த ஒரு வரமாகக் காணப்படுகின்றது. இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கே இன்னும் குடிதண்ணீர் விநியோகம் நடைபெறவில்லை. இதற்கான நிதியை உலக வங்கி கொடுக்கின்றது.

இந்தநிதியைப்பெறுவதற்குபெரிய பிரயத்தனம்செய்து தற்போது அரசால் அதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. மகிழ்ச்சிக்குரிய செய்தியாகஇதுகாணப்படுகின்றது. இனிவரும் மாதங்களில் இதற்கானபணிகளைஒப்பந்ததாரர்கள் ஏற்கவுள்ளனர்-என்றார். (21,ரி3)

## சரியானபதில்கிடக்கும்வரையில் கூட்டங்களைப் புறக்கணிப்போம்

மிகை ஊழியர்களாக வடக்குப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட அதிபர்கள் முடிவு

யாழ்ப்பாணம்.ஏப்.23

மிகை ஊழியர் என்ற அடிப்படையில் வடக்குப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட அதிபர்களாகிய நாம்பல்வேறுவகையிலும்பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே எமது கோரிக்கைகளுக்குச் சரியான பதில் கிடக்கும் வரையில் நாம் மாதாந்தக் கூட்டங்களுக்கு சமூகம் கொடுக்க மாட்டோம் என்று பாதிக்கப்பட்ட அந்த அதிபர்கள் கவலை தெரிவித்தனர்.

வலய மட்டங்களில் இடம்பெறும் அதிபர்களுக்கானகூட்டங்களுக்கு செல்லாமை தொடர்பாக அவர்களுடன் தொடர்பு கொண்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குமாகாணத்தில் போர்ச்சூழலில் கடமை நிறைவேற்று அதிபர்களாக நாம் பாடசாலைகளில் கடமையாற்றினோம். அதி கஸ்டப் பிரதேசங்களில் சேவை மனப்பாங்குடன் நாம் கடமையாற்றினோம். இதனை அடிப்படையாக கொண்டு 2012 ஆம் ஆண்டு மிகை ஊழியர் அடிப்படையில் 343பேருக்குஅதிபர்நியமனங்கள் கிடைக்கப்பெற்றன. அதன் பின்னர் நாம் ஒவ்வொரு பாடசாலைகளிலும் அதிபர் தரம் 3.2 களில் சேவையாற்றினோம். ஆனால் கடந்தவருடஇறுதிமுதல்பல்வேறு இன்னல்களுக்கும்முகம்கொடுத்து வருகின்றோம்.

அதிபர்களுக்கு வழங்கப்படும் மேலதிகபடி எமக்கு நிறுத்தப்பட்டுள்ளது.புதியசேவைப்பிரமாணக் குறிப்பின்படி தற்போது 2ஆயிரத்து 50 முதல், 6 ஆயிரம் வரை பாடசாலைகளின் தரத்துக்கு ஏற்ப அதிபர்களுக்குமேலதிகபடிவழங்கப்படுகின்றது.

ஆனால்எமக்குஅது வழங்கப்படுவதில்லை. 2017ஆம் ஆண்டின் இறுதி வரை வழமையான மேலதிக படி எமக்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளது. 6வருடங்களுக்குஒருமுறைஅதிபர்களின்தரம்அதிகரிக்கப்படுகின்றது. நாம் 3, 2தரங்களிலேயே தற்போதும் உள்ளோம். எமக்குத்தரம்அதிகரிப்புஇல்லை. அத்துடன் பாடசாலை இடமாற்றமும் இல்லை.

இவ்வாறான பல்வேறு காரணங்களால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். அதிபர்களுக்குவழங்கப்படும்சலுகைகள்எமக்கும்வழங்கப்பட்டாலே நாமும் சந்தோசமாகச் சேவையாற்ற முடியும்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளைச்சந்தித்துக்கலந்துரையாடினோம். அவர்கள்எந்தமுயற்சியும் எடுக்கவில்லை. முயற்சிகள் எடுப்பதாகவும் தெரியவில்லை.

புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் படி சம்பளத்தை மட்டும் பெற்றுக்கொள்ளுவதற்கு முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேலதிக படிகள் இல்லை என்று தெரிவித்துள்ளனர். இடமாற்றம் கேட்டால் ஆசிரியராக மாற்றம் பெற்றுத்தருகின்றனர்.

ஆகவே எமக்குச் சரியான பதில் கிடக்கும்வரையில்நாம்மாதாந்தக் கூட்டங்களுக்கு சமூகம்கொடுக்க மாட்டோம்-என்றனர். (21,7)

### முதன்மை வீதிகள் மூன்றின் வேலைகள் ஜூலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஏப்.23

சீரமைப்புக்காகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தின் மூன்று முதன்மை வீதிகளின் சீரமைப்பு வேலைத்திட்டங்கள் எதிர்வரும் ஜூலை மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான யாழ்ப்பாணம் - பொன்னாலை-பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி, வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகாட்டுவான் வீதி ஆகியவையே இவ்வாறு சீரமைக்கப்படவுள்ளன.

மொத்தமாக 88 கிலோமீற்றர் நீளமான இந்த வீதிகள் வெளிநாடு மற்றும் உள்நாடு முதலீட்டின் மூலம் கடன் அடிப்படையில் 17ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளன.

கடன் அடிப்படையில் வேலைகள் ஒரு நிறுவனத்துக்கு வழங்கப்படும். இதற்கான செலவீனங்களை வேலைகள் நிறைவடைந்தவுடன் கொழும்பு அமைச்சு மீளச் செலுத்தும். இதற்கான கேள்வி கோரல் நடைபெற்று வருகின்றது என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (21.7)

## கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் கைது

கொழும்பு, ஏப்.23
பலகொலைச்சம்பவங்களுடன்தொடர்புடையகுற்றச்சாட்டில் ஐவர் நேற்று சிலாபம் மது ஒழிப்புப் பிரிவால் கைதுசெய்யப் பட்டனர்.
பிங்கிரியப் பகுதியில் உள்ள வீடொன்றில் தலைமறைவாக இருந்த நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர்களிடமிருந்து கூரிய ஆயுதங்களும், ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருள் களும் கைப்பற்றப்பட்டன. வென்னப்புவப்பகுதியில் இடம் பெற்றபலகொலைச்சம்பவங்களுடன்தொடர்புடையவர்கள் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்தச் சம் பவம் தொடர்பானமேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



பொகவந்தலாவ லெச்சுமி மேற்பிரிவு தோட்ட சிறி முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம் நேற்று இடம் பெற்றது. இந்தச் சிறப்பு பூசை வழிபாடுகளில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற்றனர். (ற-ரி5)





## கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய 72ஆவது தேசிய மாநாடு

மட்டக்களப்பு, ஏப்.23
கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத் தின்72ஆவதுதேசியமாநாடுநேற்று முன்தினம் மாலை தன்னாமுனை மியானிமண்டபத்தில் மட்டக்களப்பு மறைமாவட்டக்கத்தோலிக்கஇளை ஞர்ஒன்றியஇயக்குநர்அருட்தந்தை ஜெரிஸ்டன்வின்சன்தலைமையில் நடைபெற்றது.
இந்தநிகழ்வில் முதன்மை விருந்தி னராகயாழ்ப்பாணம்மறைமாவட்ட ஆயரும், தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் பொறுப்பா ளருமான ஆயர் கலாநிதி ஜெஸ்டின் ஞானப்பிரகாசம்ஆண்டகை, மட்டக் களப்பு மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத் தின் இயக்குநர்அருட்தந்தைமல்கம் பெரேரா மற்றும் அனைத்து மறை மாவட்டகத்தோலிக்கஇளைஞர்ஒன் றியங்களின் இயக்குனர்கள், இளை ஞர்கள்எனப்பலரும்கலந்துகொண் டனர்.
நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாநாடு தொடர்ச்சியாக 3 நாள் கள் நடைபெறவுள்ளன. (ற-ரி5)

# அரசு கற்ற பாடத்தை மறந்தால் இன்னும் மக்கள் கற்பிப்பார்கள்

### எச்சரிக்கிறார் கிழக்கின் முன்னாள் முதலமைச்சர்



மட்டக்களப்பு, ஏப்.23

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இழுத்தடித்து வந்து கடைசியில் ஒருவாறு நடத்தி முடித்துத் தோல்வி யில்துவண்டுபோயுள்ளஅரசுகற்றுக்கொண்டபாடத்தை மறந்தால் இன்னமும் இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும்.இவ்வாறு கிழக்குமாகாணமுன்னாள்முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமத் தெரிவித்தார்.**

இதுதொடர்பாகநேற்றுவிடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே குறிப்பி டப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது.
இந்தநல்லாட்சிஅரசைஅரசதலை வர் பொறுப்பெடுத்துக் கொண்ட தும் அவரது 100 நாள் வேலைத் திட்டத்தினூடாகஜனநாயகவிழுமி யங்களுக்கு மதிப்பளிக்கப்படும் எனபெரும்எதிர்பார்ப்புமக்களிடம் இருந்தது. ஆனால், அவ்வாறான எதிர்பார்ப்புக்களுக்கு முக்கியத்து வம் வழங்கப்படாதது ஒருபுறமி ருக்க ஏற்கெனவே இருந்து வந்த ஜனநாயக முறைமைகள் கூட மங்கி மறையும் அளவுக்கு காட்சி கள் அரங்கேறின. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வந்து கடைசியில் மக்களின் அதிகரித்த வற்புறுத்த லின்பேரில்தேர்தல்நடத்தப்பட்டது. மக்களின்தீர்ப்புக்கும்ஜனநாயகப் பண்புகளுக்கும் மதிப்பளிக்காது நடந்துகொண்டால்மக்கள்என்ன பிரதிபலிப்பை வெளியிடுவார்கள் என்பதை கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அரசுக் குத்தெளிவாகஉணர்த்தியுள்ளன. இந்தக்கற்றுக்கொண்டபாடத்தை மறந்து விட்டு உள்ளூராட்சி மன் றத் தேர்தலை இழுத்தடித்ததைப் போன்று மாகாண சபைத் தேர்த லையும் அரசு பிற்போட நினைத் தால்மக்கள் அதற்கும் தக்க பதிலடி கொடுப்பார்கள். எனவே, கூட்டு அரசுக்கு மக்கள் முன் முகம் கொடுக்க முடியாமல் போகலாம். அத்தகையதொரு சூழ்நிலைக்கு மக்களை ஆளாக்காது ஜனநாயக விழுமியங்களை மதித்து அரசு உடனடியாக பழைய முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.
நல்லாட்சி என்று கூறுகின்ற இந்த அரசின் மீது மக்கள் படிப்பாக நம் பிக்கை இழக்கும் சூழ்நிலைக்கு இனவாதமும்இன்னபிறசெயற்பா டுகளும் மாறிவிட்டிருக்கின்றன.
சமகாலத்திலும் எதிர்காலத்திலும் நாட்டைக்கட்டியெழுப்பும்குறுகிய, அண்மித்த மற்றும் நீண்ட காலத் திட்டங்கள்எதுவுமின்றிநல்லாட்சி அரசு தட்டுத் தடுமாறுகின்றது என் றார். (ற-ரி5)



ஈரான் நாட்டின் அனுசரணையோடு அல் முஸ்தபா பன்னாட்டுப் பல்கலைக் கழகத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட வுள்ள அரசறிவியல்வெளிவாரிப்பட்டப்படிப்பில் இணையும் மாணவ, மாணவிகளின் பதிவுகளும் ஆவணங்கள் கையளிப்பும் நேற்று பதுளை சரஸ்வதி தேசியக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (ற-ரி5)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.23
கலேவெலஏனமல்பொத பிரதேசத்தில்கேரளகஞ்சா வைத்திருந்த குற்றச்சாட் டில் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.
உந்துருளியில் 2 கிலோ கிராம் கேரள கஞ்சாதொ கையுடன் பயணித்துக் கொண்டபோதே நேற்று முன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனத்தெரிவிக்கப்பட்டது.
57 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள் ளார்எனவிசாரணைகளி லிருந்து தெரியவந்துள் ளது.
சந்தேகநபர் நேற்று தம் புள்ளைநீதிவான்நீதிமன் றில் நேற்று முற்படுத்தப் பட்டார்எனப்பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

## சிகரெட்டுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப்.23
சட்டவிரோதமான முறை யில் டுபாயிலிருந்து சிக ரெட்தொகையைகொண்டு வந்தஒருவர் நேற்றுசுங்க அதிகாரிகளால்கைதுசெய் யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடமிருந்துஒரு மில்லியன் ரூபா பெறுமதி யான சிகரெட்தொகைகள் கைப்பற்றப்பட்டன.
45 வயதுடையவரே இவ் வாறு கைது செய்யப்பட் டுள்ளார் என விசாரணை களிலிருந்து தெரியவந் துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர் பானமேலதிக்விசாரணை களை சுங்க அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்ற னர். (ற-ரி5)

# சிறைச்சாலையில் புத்தாண்டு விழா





மட்டக்களப்பு, ஏப்.23
மட்டக்களப்புசிறைச்சாலையில்நேற்று சித்திரைப் புத்தாண்டுவிழா நடைபெற்றது.
மட்டக்களப்பு சிறைச்சாலையின் முதன்மை அத்தியட்சகர் கே.எம். எச்.யு.அக்பர் தலைமையில் நடைபெற்ற இந்தப் புத்தாண்டு விழா வில், சிறைக் கைதிகள் பலரும் பங்குபற்றி, பல்வேறு பாரம்பரிய கலை கலாசார விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.
இந்தவிழாவில், மட்டக்களப்புசிறைச்சாலையின்பதில்சிறைச்சாலை ஆணையாளர் ஆர்.மோகனராஜ், மட்டக்களப்பு லயன்ஸ் கழகத் தலைவர் எல்.ஆர்.டேவிட், கலாநிதி ஏ.செல்வேந்திரன், மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் கே.கருணாகரன் உட்பட அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் மற்றும் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் நலன்புரி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-ரி5)




# எலிசபெத் 92 'நொட் அவுட்'

லண்டன், ஏப். 23
பிரிட்டன் ராணி எலிசபெத் நேற்று முன்தினம் தனது 92ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.
இரண்டாம் எலிசபெத் பிரிட்டன் உட்பட 16 இறைமையுள்ள நாடுகளின் அரசியாக உள்ளார். லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் இவர் வாழ்கின்றார்.
இவர் 54 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட கொமன்வெல்த்தின் தலைவரும் ஆவார்.
எலிசபெத் 1926ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி லண்டனில் பிறந்தார்.
இரண்டாம் உலகப் போரின்போது பொதுச்சேவைகளில் ஈடுபட்டார். 1947ஆம் ஆண்டு எலிசபெத், எடின்பரோ கோமகன் பிலிப்பை மணந்தார்.
இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். இவரது முடி சூட்டும் விழா 1953ஆம் ஆண்டு நிகழ்ந்தது. (ம)

# ரொஹிங்ய அகதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தமைக்காக கொமன்வெல்த் மாநாட்டில் பங்களாதேஷுக்குப் பாராட்டு

லண்டன், ஏப். 23
ரொஹிங்ய அகதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தமைக்காக பங்களாதேஷுக்கு கொமன்வெல்த் மாநாட்டில் வைத்து பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.
பௌத்த நாடான மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்களுக்கு எதிராக மியன்மார் இராணுவத்தால் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதையடுத்து சுமார் 6 லட்சம் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் அயல் நாடான பங்களாதேஷுக்குச் சென்று குடியேறினர்.
அவர்கள் அனைவரையும் சுமார் 10 மாதங்களாக பராமரித்து வருகிறது பங்களாதேஷ் இதையடுத்தே பங்களாதேஷுக்கு கொமன்வெல்த் மாநாட்டில் வைத்து பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. (ம)






வான் பார்வையில் வண்ணவண்ணக் 'காப்பெற்' விரிக்கப்பட்டதைப் போன்று இந்த ஒளிப்படம் தென்படலாம். ஆனால், "இது மலர்களின் உற்பத்தி நிலையம்" என்றால் அதை உங்களால் நம்ப முடிகிறதா?. ஆம், அங்கு தெரிகின்ற அத்தனை வர்ணங்களும் விதம்விதமான மலர்கள். நெதர்லாந்தில் உள்ளது இந்த மலர் உற்பத்திச்சாலை. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்த ஒளிப்படத்தை வெளியிட்டது. (ம)

# ஒன்பது ஆயுததாரிகள் ரஷ்யாவில் கொலை

மொஸ்கோ, ஏப். 23
ரஷ்யாவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட ஒன்பது ஆயுததாரிகளை அந்த நாட்டு பொலிஸ் சுட்டுக் கொன்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ரஷ்யாவின் டாக்ஸ்டேன் பகுதி இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கும் பகுதியாகும்.
இந்தப் பகுதியில் அமைதியை சீர்குலைப்பதற்காக சில பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாகப் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அந்தப் பகுதியில் உள்ள டெர்பெண்ட் நகரில் பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.
இதில் இரண்டு இடங்களில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதை பொலிஸார் கண்டுபிடித்தனர். சரணடையுமாறு பொலிஸார் கோரிக்கை வைத்ததும், ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். பொலிஸ் தரப்பால் நடத்திய பதில் தாக்குதலிலேயே அவர்கள் கொல்லப்பட்டனர். (ம)

# தலைநகர் டமஸ்கஸை கைவிடுகிறது கிளர்ச்சிக் குழு

டமஸ்கஸ், ஏப். 23
சிரிய அதிபர் அசாத்துக்கு எதிரான கிளர்ச்சிக் குழு, தலைநகர் டமஸ்கஸைக் கைவிட்டு வெளியேறச் சம்மதம் தெரிவித்தது.
சிரிய அதிபர் அசாத் சியா பிரிவைச் சேர்ந்தவர். அவருக்கு எதிராகச் சன்னி பிரிவைச் சேர்ந்த ஆயுதக் குழு போராடி வருகிறது. அசாத் பதவி விலக வேண்டும் என்பதே இந்த ஆயுதக் குழுவின் முதன்மைக் கோரிக்கை.
அலெப்போ, கவுட்டா, டௌமா, பல்மைரா, இட்லிப், டமஸ்கஸ் ஆகிய கிளர்ச்சிக் குழுவின் பிடிக்குள் இருந்த முக்கிய நகர்கள்.
அலெப்போ, இடலிப், பல்மைரா ஆகிய நகர்கள் கடந்த வருடம் சிரிய அரசால் மீட்கப்பட்டது.
இந்த வருடம் கவுட்டா, டௌமா நகர்களின் பெரும்பகுதி சிரிய ஆயுதக் குழுவின் பிடிக்குள் வந்துள்ளது.
இவ்வாறிருக்க டமஸ்கஸில் இருந்து தாமாக வெளியேற ஆயுதக் குழு சம்மதம் தெரிவித்துள்ளதாக அறியவருகிறது. (ம)




# 4 பலஸ்தீனர்கள் சாவ



டெல்அவிவ், ஏப். 23
காசாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலஸ்தீனர்கள் நால்வர் உயிரிழந்ததை அடுத்து அங்கு பதற்றநிலை இரட்டிப்பாகியுள்ளது.
பலஸ்தீனர்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிவரும் ஹமாஸ் அமைப்பால் காசா பகுதியில் கடந்த மாதத்தின் இறுதிப்பகுதியில் நடத்தப்பட்ட பேரணியின் போது, இஸ்ரேல் படையினர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டனர். இஸ்ரேலின் தலையீட்டையும், தாக்குதலையும் கண்டித்து சுமார் 10ஆயிரம் பலஸ்தீனர்கள் காசாவில் கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போதும் இஸ்ரேல் படைகளால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. சுமார் 16 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இதையடுத்து பலஸ்தீனர்களும் யூதர்களும் (இஸ்ரேலியர்கள்) செறிந்து வாழும் பகுதிகளான காசா, மேற்குக் கரை, ஜெருசலேம் உள்ளிட்ட இடங்களில் பலஸ்தீனர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அந்தப் பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மேலும் 4 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இதையடுத்து காசாவில் பதற்றநிலை இரட்டிப்பாகியுள்ளது. (ம)



# அணுவாயுத, ஏவுகணை சோதனை மையங்களை மூடுமாறு கிம் உத்தரவு

பியாங்யாங், ஏப். 23
உலகை மிரட்டிவரும் வடகொரியாவில் இனி அணு ஆயுதங்கள், ஏவுகணை சோதனைகள் நடைபெறாது என அந்த நாட்டு அதிபர் கிம் ஜோங் உன் அறிவித்தார். அத்துடன் முக்கிய அணுவாயுச் சோதனை மையங்கள் சிலவற்றையும் மூடுமாறு அவர் உத்தரவிட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களையும், ஐ.நா. சபையின் வரைமுறைகளையும் மீறி ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்திவந்தது வடகொரியா. இதனால் வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா இணைந்து சில தடைகளை விதித்திருந்தன. ஐரோப்பிய நாடுகள் சிலவும் தனித்தனியாக பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தன. எனினும் வடகொரியா எதற்கும் அஞ்சாமல் தனது ஏவுகணைச்சோதனைகளைதொடர்ந்து கொண்டே வந்தது. எவரும் எதிர்பாரா விதமாக தென்கொரியாவில் அண்மையில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடரில் வடகொரியா கலந்து கொண்டது. அத்துடன் "பகையை மறந்து தென்கொரியாவுடன் புதிய அத்தியாயம் எழுதத் தயார்" என்றும் வடகொரிய அதிபர் கிம்ஜோங் உன் அறிவித்தார். இதற்கு அமெரிக்கா வரவேற்புத் தெரிவித்தது.



இந்தப் பின்னணியில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் -கிம்ஜோங் உன் இடையிலான சந்திப்புக்கும் அடுத்த மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தச் சந்திப்பின் போது தன்னால் விதிக்கப்படும் அணுவாயுதச் சோதனை தொடர்பான நிப ந்தனைகளுக்கு வடகொரியா மறுத்தால் பேச்சில் இருந்து உடனடியாக வெளியேறுவேன் என்று ட்ரம்ப் அண்மையில் அறிவித்திருந்தார். இவ்வாறிருக்க ஏவுகணைச் சோதனைகள் இனி இடம்பெறாது என்று அறிவித்த அதிபர் கிம் ஜோங் உன் வடகொரியாவில் செயற்படும் முக்கிய ஏவுகணைச் சோதனை மையங்களை மூடுமாறும் உத்தரவு பிறப்பித்தார். கிம் ஜோங் உன்னின் இந்த அறிவிப்பின் மூலம் வடகொரியா - அமெரிக்கா இரண்டுக்கும் இடையிலான பேச்சு சாதகமாக முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அணுவாயுதச் சோதனைகள் நிறுத்தப்படும் என்ற வடகொரியாவின் அறிவிப்புக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வரவேற்புத் தெரிவித்தார். "கிம் ஜோங் உன்னின் அறிவிப்பு வடகொரியாவுக்கு மட்டும் இல்லாது உலக வளர்ச்சிக்கும் உதவும்" என்று ட்ரம்ப் குறிப்பிட்டார். (ம)

## வு; காசாவில் பதற்றநிலை




## கடலளவு சாதனை இது!

காகிதக் கப்பல் செய்து தண்ணீரில் விடுவது என்றால் எல்லாக் குழந்தைகளுக்கும் பிடிக்கும். ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த 8 வயது பெர்குசன், 5 வயது ஹாரி என்ற இரு சகோதரர்கள் சேர்ந்து ஒரு சிறிய கப்பலை உருவாக்கினார்கள். கடந்த ஆண்டு மே மாதம் இந்தக் கப்பல், கடலில் விடப்பட்டது. மழை, காற்று, புயல், பேரலை என்று எல்லாவற்றையும் சமாளித்து இன்றும் கடலில் அழகாகத் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது அது.

இவர்களின் ஆர்வத்தைக் கண்டதும் பெற்றோருக்கு மகிழ்ச்சியாகிவிட்டது. உடனே தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து கொடுத்தார்கள். பெரியவர்கள் செய்தது போலவே



அத்தனை நேர்த்தியாகக் கப்பல் தயாரானது. இதைக் கடலில் மிதக்க விட வேண்டும் என்று சகோதரர்கள் கோரிக்கை வைத்தவுடன், கப்பல் மிதப்பதற்குத் தேவையான எடையை அதிகப்படுத்தினார்கள். தகவல் தொடர்பு கருவியை இணைத்தனர். பீட்டர்ஹெட் கடல் பகுதியில் மிதக்க விட்டனர். தற்போது கப்பல் கயானா நாட்டுப் பகுதியில் தென் அமெரிக்கக் கண்டத்தில் மிதந்துகொண்டிருக்கிறது. 'அட்வஞ்சர்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தச் சிறிய கப்பல் அவ்வப்போது கரையைத் தொடுவதும் உண்டு. அப்போது கரையில் உள்ளவர்கள் "கரை ஒதுங்கினால் மீண்டும் கடலில் விட்டு விடுங்கள் " என்று எழுதப்பட்டிருக்கும் செய்தியைப் படித்துவிட்டு மீண்டும் கடலுக்குள் விட்டுவிடுகிறார்கள். கடலளவு சாதனையல்லவா இது. (ம)



## அன்புக்கு பூனையும் அடிமை!

தென் கரோலினாவில் உள்ள வீடொன்றில் வசித்த "டாபி" என்ற பூனையை, அதன் உரிமையாளர் இன்னொருவருக்கு வழங்கிவிட்டார். 12 மைல் தொலைவில் இருந்தது அந்த புதிய வீடு. டாபிக்கு ஏற்கெனவே வளர்த்தவர்களை விட்டுப் பிரிந்து இருக்க முடியவில்லை. யாரும் கவனிக்காத நேரம் பார்த்து, வீட்டை விட்டு வெளியேறியது. 12 மைல்கள் நடந்து பழைய வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டது. டாபியைக் கண்டவுடன் வீட்டில் உள்ளவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். தங்களை விட்டுப் பிரிய மனம் இல்லாத டாபியை, தாங்கள் கொடுத்து விட்டோமே என்று குற்றவுணர்வு அடைந்தனர். இ[illegible] டாபியை யாருக்கும் கொடுக்க இயலாது என்று கூறிவிட்டனர். (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# உண்மையை உரக்க உரைக்கும் அறிக்கை

பெரும் எதிர்பார்ப்புகளுடனும் மேற்குலக ஆதரவுடனும் பதவிக்குக் கொண்டு வரப்பட்ட மைத்திரி – ரணில் ஆட்சியின் செய் நேர்த்தியை, நேர்மையை, செயற்றிறனை, முக்கிய பிரச்சினைகளை அது கையாளும் திறனைப் புட்டுப் புட்டு வைத்திருக்கிறது அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கை. ஆட்சிக்கு வந்து 2 வருடங்களின் பின்னர் நிலமை எப்படியிருக்கிறது, இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவந்த போது எதிர்பார்க்கப்பட்ட விடயங்களில் அது சாதித்திருப்பவை எவை என்பதைக் குறுக்கு வெட்டுமுகமாகக் காட்டும் அறிக்கையாக அதனைக் கொள்ளலாம். .

அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களத்தால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்கா வெளியிடும் தன்னிச்சையான அறிக்கை இது. அதன் 2017ஆம் ஆண்டுக்கான அறிக்கை இலங்கை தொடர்பான பல உண்மையான நிலவரங்களைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

அந்த அறிக்கை பல விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றபோதும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய பல விடயங்களும் இருக்கின்றன.

1. தமிழர்கள் படையினரால் துன்புறுத்தப்படுவதும் அரசின் பாகுபாடுகளும் 2017ஆம் ஆண்டிலும் தொடர்கின்றன. தன்னை நல்லாட்சி என்றும் கூறிக்கொள்ளும் அரசினாலேயே இவை தொடர்கின்றன.

2. சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், போரின் போதும் அதன் பின்னரும் குற்றம் இழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கும் போக்குத் தொடர்கின்றது.

3. காணாமற்போனோர் குறித்த பணியகத்தை உருவாக்கியதைத் தவிர, நிலைமாறுகால நீதி நடவடிக்கைகளில் அரசு மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தையே எட்டியுள்ளது.

4. போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தினர் மற்றும் துணைப் படையினர் தண்டிக்கப்படாத நிலை தொடர்கின்றது.

5. படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசும் நீதிமன்றங்களும் தயங்குகின்றன.

6. கண்காணிப்பு என்கிற போர்வையில் சிவில் சமூகத்தினரைப் படையினர் அச்சுறுத்துகின்றனர் அல்லது துன்புறுத்துகின்றனர்.

7. படையினரின் பிடியில் உள்ள காணிகளை விடுவித்து இராணுவமய நீக்கம் செய்யப்படுவது மிக மெதுவாகவே நடக்கிறது.

8. மத ஆக்கிரமிப்பு இடம்பெறுவதாகச் சிறுபான்மை மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகிய முக்கிய விடயங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இந்த அரசு ஆட்சிக்கு வந்தது முதல் தமிழர்கள் தரப்பால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்த கோரிக்கைகள். இவற்றைச் செயற்படுத்துவது இனங்கள் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கும் மிகத் தேவையானது என்றும் தமிழர் தரப்பு வலியுறுத்தி வந்திருக்கிறது. ஆனால் பௌத்த, பேரினவாத மனோநிலையில் இருந்து இறங்கிவராததாக இருக்கக்கூடிய இந்த அரசும் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றவோ கவனத்தில் எடுக்கவோ இல்லை என்பதையே அமெரிக்காவின் அறிக்கை தெளிவுபடுத்துகின்றது.

தமிழர்களினதும் உலக நாடுகளினதும் இத்தகைய கரிசனை மீது தாம் முழுமையான நடவடிக்கை எடுப்போம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுட்பட பன்னாட்டுச் சமூகத்திடம் உறுதியளித்துத்தான் தன்னை உலக நாடுகள் முன் ஓர் இணக்க அரசாக, நல்லரசாக நிலைநிறுத்திக்கொண்டது கொழும்பு. ஆனால், ஆண்டாண்டு காலமாகத் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு வருவதைப் போலவே பன்னாட்டுச் சமூகமும் ஏமாற்றப்படுவதை இந்த அறிக்கை இடித்துரைக்கிறது.

இந்த அறிக்கை மீது கொழும்பு அரசுக்கு எந்தக் கடப்பாடும் இல்லை. இந்த அறிக்கை வெளிவந்திருப்பதற்காக கொழும்பு அரசின் போக்கு மாறிவிடும் என்றும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் அமெரிக்காவின் கொள்கை வகுப்பில் இந்த அறிக்கை முக்கிய தாக்கத்தைச் செலுத்தும் வல்லமை கொண்டது. ஏனெனில், அறிக்கை குறிப்பிடும் விடயங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காகக் கொழும்பு அரசுக்குக் கடும் அழுத்தத்தைக் கொடுக்கும் கடப்பாடும் உரிமையும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளுக்கு இருக்கிறது. ஏனெனில் இந்த நாடுகள் பலவும் சேர்ந்துதான் தமிழர்களின் ஆயுதப் பலத்தை அழித்தொழிப்பதற்குக் கொழும்பு அரசுக்குத் துணைபுரிந்தன. அதனால் தமிழர்களின் வாழ்வுரிமையைக் காப்பாற்றவும் பேணவும் வேண்டிய கடப்பாடு இந்த நாடுகளுக்கு உண்டு. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு மட்டும் தமது அழுத்தத்தை வரையறுத்துக்கொள்ளாது, அறிக்கை குறிப்பிடும் விடயங்களில் உண்மையான முன்னேற்றங்களைக் கொழும்பு காட்டுவதற்கு ஏதுவான நடவடிக்கைகளையும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் எடுக்கவேண்டும். கொழும்பு அரசைத் தட்டிக்கொடுத்து தமது நலன்களை மட்டும் கவனித்துக்கொள்வதோடு அவை நின்றுவிடக்கூடாது. அப்படிச் செய்தால் உலக நாடுகளின் மனித உரிமைகள் குறித்து அவை பேசுவதில் எந்தப் பயனும் இல்லாமல் போய்விடும்.

# இளைஞர் சக்தி ஒன்றுதான் கூட்டமைப்பின் தேவையும்

இந்துமதி

இளைஞர்களை அதிக அளவில் உள்வாங்குவதன் மூலமாக கூட்டமைப்புக்கு புதிய குருதியைப் பாய்ச்சி இளமைத் துடிப்புடன் இயங்க வைக்க முடியும். இளைஞர்களே நாட்டின் எதிர்காலச் சிற்பிகள் என்ற வகையில் அரசியலில் அவர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது.


## இளைஞர்களின் சக்தி இமாலய சக்தி

இளைஞர்களின் பேரரெழுச்சி 1967 ஆம் ஆண்டு இந்தியாவின் தமிழ் நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அண்ணா தலைமையில் வீறுகொண்டு எழுந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளம்படையினர், பழம் பெரும் காங்கிரஸ் கட்சியை ஆட்சிப் பீடத்தில் இருந்து வெளியேற்றினர். கர்மவீரர் என அழைக்கப்பட்ட முதுபெரும் தலைவரான காமராஜர் தமது சொந்தத் தொகுதியிலேயே தோற்கடிக்கப்பட்டார். திராவிடக்கட்சியொன்றின் ஆட்சி தமிழ்நாட்டில் மலர்ந்தது. தேசியக்கட்சிகள் எவ்வளவோ முயன்றும் அங்கு ஆட்சியை அமைக்கமுடியவில்லை. ஆனால், எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசியலில் இளைஞர்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. சில மூத்த அரசியல்வாதிகள் தமது வாரிசுகளான இளைஞர்களை அரசியலில் இறக்குவதோடு தமது காரியம் முடிந்து விட்டதெனக் கருதுகின்றனர். இதுவொரு மிகத் தவறான செயற்பாடாகும்.

இந்தமுறை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகளின்படி தவிசாளர் பதவிகளில் இளைஞர்கள் சிலர் நியமிக்கப்பட்டமையை ஒரு நல்ல ஆரம்பமாகக் கொள்ளலாம். ஆனால் விடயம் இத்துடன் முடிந்துவிடவில்லை. அடுத்து இடம் பெறவிருக்கும் மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும். பழைய முகங்களைப் பார்த்துப் புளித்துப் போன மக்கள் புதுமுக இளைஞர்களுக்கு ஆதரவு வழங்கவே செய்வார்கள்.

## கூட்டமைப்பு தொடர்பான விமர்சனங்கள் தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த வல்லவை

கூட்டமைப்புத் தொடர்பாகத் தவறான கருத்துக்கள் தாராளமாகவே விதைக்கப்பட்டு வருகின்றன. பிரச்சினைகளால் சூழப்பட்டிருக்கும் மக்கள் இதை நம்பவே செய்கின்றனர். இதன் விளைவாக வாக்கு வங்கியில் வீழ்ச்சி ஏற்படுகின்றது. படித்த இளைஞர்களுக்கு சமூகத்தின் மத்தியில் எப்போதுமே மதிப்பு உண்டு. இவர்கள் சரியான விடயங்களையே கூறுவார்களெனவும் மக்கள் நம்புகின்றனர். ஆகவே இளைய சமூகத்தினரைக் கவரும் வகையில் கூட்டமைப்பின் திட்டங்கள் வகுக்கப்



படல் வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். கூட்டமைப்பின் கொள்கைகளையும், திட்டங்க ளையும் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் இளைஞர்களை பரப்புரைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். இவற்றின் மூலமாக கூட்டமைப்புத் தொடர்பானதொரு நம்பிக்கையை மக்களின் மனங்களில் நிலைநிறுத்த முடியும்.

> எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசியலில் இளைஞர்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. சில மூத்த அரசியல்வாதிகள் தமது வாரிசுகளான இளைஞர்களை அரசியலில் இறக்குவதோடு தமது காரியம் முடிந்து விட்டதெனக் கருதுகின்றனர். இதுவொரு மிகத் தவறான செயற்பாடாகும்.

தேர்தல்களின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்கின்ற சக்தியாக இளைஞர்களின் வாக்குகளே காணப்படுகின்றன. ஆகவே, இளம் சமூகத்தினரது வாக்குகளைக் கவரும் வகையில் கூட்டமைப்பு செயற்பட வேண்டும். வேலையில்லாத பிரச்சினை இளைஞர்கள் மத்தியில் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது. வேலையில்லாமை இவர்களை மன விரக்திக்குள் தள்ளிவிட்டது. இந்த நிலையிலுள்ளவர்கள் எதைச் செய்வதற்கும் தயங்க மாட்டார்கள். ஆகவே கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் வேலை வாய்ப்புக்களை இளைஞர்கள் யுவதிகளுக்குப் பெற்றுக்கொடுக்கும் செயற்றிடங்களை வகுத்து அவற்றை செயற்படுத்துவிக்கத் தக்க முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறு படிப்படியாகச் செயற்படும் போது இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பின்மையைக் காலப் போக்கில் நீக்கிவிட முடியும். இது கூட்டமைப்பின்பால் அவர்களுக்கு ஈர்ப்பை ஏற்படுத்தும்.

## தமிழர் அரசியலில் பிரகாசிக்கத் தவறிவரும் இளம் சமூகத்தினர்

முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்சவும், தற்போதைய தலைமை அமைச்சரான ரணில் விக்கிரமசிங்கவும் மிக இளவயதில் அரசியலுக்கு வந்தவர்கள். இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் அவர்கள் விளங்கினார்கள். பின்னர் படிப்படியாக உயர்ந்து நாட்டின் அரசியலில் உச்சிப்படிகளைத் தொட்டார்கள். ஆனால் தமிழர்கள் மத்தியில் அவ்வாறான இளைஞர்களைக் காண முடியவில்லை. பழைய முகங்கள்தான் திரும்பத் திரும்ப நினைவுக்கு வருகின்றன. இந்த நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

இளைஞர் சக்தியைப் பயன்படுத்துவதில் கூட்டமைப்பு இனியும் மெத்தனமாக இருக்க முடியாது. தமிழர்களின் ஒரே சக்தி கூட்டமைப்பே என்பதை நிரூபிக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இதையொரு அரிய சந்தர்ப்பமாகவும் கருத வேண்டும் இளைஞர்களின் உதவியுடன் வளமானதொரு எதிர்காலத்தை கூட்டமைப்பு உருவாக்குமென எதிர்பார்ப்போம்.

சேரலாதன்



# மீண்டுமொரு முறை எட்ட முடியாத தொலைவில் முதலமைச்சர் பதவி

> கடந்த தடவை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கப்படும்வரை வடபகுதித் தமிழர்கள் விக்னேஸ்வரன் குறித்து பெரிதாக எதுவும் அறிந்திருக்கவில்லை. இவரும் போர் இடம்பெற்ற வேளையில், குறிப்பாக மிகப்பெரும் இடப் பெயர்வின்போது தமிழ்மக்கள் அனுபவித்த துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ளவுமில்லை.

வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் யார்? என்பது தொடர்பான ஊகங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. கூட்டமைப்பின் சார்பில் முதல மைச்சராகப் போட்டியிடுவதற்கான வாய்ப்பு சி.வி. விக்னேஸ்வ ரனுக்கு மீண்டும் வழங்கப்பட மாட்டாதென கூட்ட மைப்பின் பேச்சாளரான எம்.ஏ சுமந்திரன் அறிவித்தன் பின்னார் இந்த விடயம் சூடுபிடிக்க ஆரம்பித்து விட்டது.

சி.வி. விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்பட மாட்டாரென்பது ஏற்கனவே தெரிந்த ஒரு விடயம்தான். விக்னேஸ்வரனுக்கும் இது நன்கு தெரியும். கூட்டமைப்பில் இருந்து கொண்டு அதற்கு எதிராகச் செயற்படுகின்ற ஒருவர் கூட்டமைப்பின் ஆதரவு தமக்குக் கிடைக்குமென எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இதனால்தான் முதலமைச்சர் வேட்பாளராக தாம் மீண்டும் போட்டியிடுவேன் எனக் கூறியமை இங்கு குறிப்பிடத் தக்கது. ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல் உரிமைகள் சகலருக்கும் வழங்கப்பட்டுள்ளன. விக்னேஸ்வரனும் இதற்கு விதிவிலக்கானவரல்ல. அடுத்த தடவையும் முதலமைச்சர் வேட்பாளராக அவர் போட்டியிட முடியும். ஆனால் கூட்டமைப்பின் வேட்பாளராகத் தாம் போட்டியிட வேண்டுமென அவர் கோரமுடியாது. அவ்வாறு தெரிவிப்பதற்கான தகுதியை அவர் எப்போதோ இழந்து விட்டார்.

### முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கப்படும் வரை மக்களால் அறியப்படாதிருந்தவர் விக்னேஸ்வரன்

கடந்த தடவைமுதலமைச்சர்வேட்பாளராக நியமிக்கப்படும்வரை வடபகுதித் தமிழர்கள் விக்னேஸ்வரன் குறித்து பெரிதாக எதுவும் அறிந்திருக்கவில்லை. இவரும் போர் இடம்பெற்ற வேளையில், குறிப்பாக மிகப்பெரும் இடப்பெயர்வின்போது தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ளவுமில்லை. வட பகுதியை இவர் பிறப்பிடமாகக் கொண்டிருந்தபோதிலும், பெரும்பாலான காலம் தென்பகுதிகளிலேயே தமது வாழ்க்கையைக் கழிக்க நேர்ந்தது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விரும்பியிருக்காது விட்டால் முதலமைச்சர் பதவிக் கதிரையில் இவரால் அமர்ந்திருக்கவே முடியாது. இது தொடர்பாக மாகாணசபை உறுப்பினரொருவர் வேடிக்கையாகத் தெரிவிக்கும்போது மருதானையில் தேடுவாரற்றுக் கிடந்த பழைய இரும்பை சம்பந்தன் வடபகுதி மக்களின் தலைகளில் சுமத்திவிட்டார் என்றார். ஆரம்பத்தில் இது வொரு வேடிக்கையான கருத்தாக இருந்தபோதிலும் காலப்போக்கில் உண்மையாகி விட்டது.

### வடக்குமாகாணசபை அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உறுதியாகச் செயற்படாதவர் முதலமைச்சர்

விக்னேஸ்வரன் உயர்நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்தவர் என்ற வகையில் நீதியையும், நியாயத்தையும் அவரிடம் மக்கள் எதிர் பார்த்தனர். ஆனால் மாகாண சபையில் நடந்தவற்றைப் பார்க்கும் போது அவர்அவற்றை மறந்து விட்டவர் போன்று நடந்துள்ளார். ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணைகள் எதுவும் இதுவரை இடம் பெறவில்லை. இந்த நிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் மீதும் மோச டிக்கு ற்றச்சாட்டு க்கள் சுமத்தப்ப ட்டுள்ளன. இவை தொடர்பாகவும் முதலமைச்சர் மௌனம் காத்து வருவதால் ஆளுநர் இதில் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது வடக்கு மாகாண சபைக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த வடபகுதித் தமிழர்களுக்கும் பெரும்அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆரம்பத்தில் முன்னாள் மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் மீதே ஊழல்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. ஆனால் ஏனைய அமைச்சர் ஒருவருக்கு எதிராக விசாரணைக் குழுவையும் நியமித்தார். பின்னர் அதன் அறிக்கையைப் பெற்று ஏனைய மாகாாண அமைச்சர்களையும் பதவி விலகி விடுமாறு நிர்ப்பந்தித்தார். அவர்களும் பதவி விலகினார்கள். பின்னர் புதிய அமைச்சர்களை முதல மைச்சரே நியமித்ததாக. தற்போது அவர்களும் ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ள னர்.

### தமக்கான தமிழ்மக்களது ஆதரவு குறித்து தப்புக் கணக்குப் போட்டுள்ள முதலமைச்சர்

தமிழ் அரசுக்கட்சியினால் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது தமிழ் அரசுக்கட்சிக்குஎதிரானவர்கள் ஒன்று திரண்டு அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். இதைக் கண்டு மனம் குளிர்ந்த முதலமைச்சர், மக்கள் அனைவரும் தம்பக்கம் நிற்பதா கத் தவறாக எடை போட்டது மட்டுமல்லாது, உணர்ச்சிகரமான உரையொன்றையும் அங்கு ஆற்றினார். ஆன்ால் மாற்றுத்தலைமை தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றபோது அவரை முக்கியமான கட்சித் தலைவர்கள் ஆதரித்ததாகத் தெரியவில்லை. தற்போது கூட இதே நிலைதான் காணப்படுகின்றது. விக்னேஸ்வரன் தனித்துக்கட்சியொன்றை அமைத்தோ அல்லது வேறு எவருடனாவது கூட்டுச் சேர்ந்தோ முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிட முடியும். ஆனால் சென்ற தடவை போன்று அவருக்கு மக்களது பேராததரவு கிடைக்குமென அவர் எதிர்பார்க்கமுடியாது. மக்கள் இவரைப் பற்றி நன்றாகவே புரிந்து கொண்டு விட்டார்கள். வேலைப்பளுவைக் காரணம் காட்டி முக்கியமான ஜெனிவாக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத இவர், முல்லைத்தீவில் இடம்பெற்ற சிங்களக் குடி யேற்றங்களுக்கு எதிராக மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் பலவிதமான எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் கூட்ட மைப்புக்கே வெற்றி கிடைத்துள்ளது. விக்னேஸ்வரனும் மறைமுகமான எதிர்ப்பைக் கூட்டமைப்புக்கு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. என்னதான் வியூகங்கள் வகுத்துச் செயற்பட்டாலும், விக்னேஸ்வர னால் மீண்டும் முதலமைச்சருக்கான கதிரையில் அமர முடியாது என்பதே யதார்த்தம்.

ஆசிரியருக்கான கடிதம்

## காந்தி தேசத்தினது மற்றொரு சாபக்கேடு

யூதஇனத்தையே அழித்தொழிக்கக் கங்கணம் கட்டிச் செயற்பட்டதன் மூலம் உலகவரலாற்றில் இடம்பிடித்தவன் ஜேர்மனிய சர்வாதிகாரிஹிட்லர். அடங்க மறுத்த ஜப்பானை அடக்கியொடுக்க இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் மீது அணுகுண்டுத் தாக்குலை நடத்தி தனது முகத்தில் தானே கறையை ஏற்படுத்திக் கொண்டது அமெரிக்கா.

அந்த வரிசையில் இலங்கை அரசை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நோக்கில் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கி இலங்கை அரசுக்கு எதிராக அவர்களைப் போராடவைத்து இலங்கை அரசைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது இந்திய அரசு. பின்னர் பூகோள அரசியல் மாற்றத்தை கருத்தில் கொண்டு அதே தமிழ்ப் போராளிகள் மீது போர் தொடுத்து சூட்சுமமான விதத்தில் அவர்களை நலிவுபடுத்தியதும் வரலாறு. வல்லரசு நாடுகளோ, பலம் மிக்க நாடுகளோ ஏனைய நாடுகள் மீது நடத்திய அத்துமீறல் அழிவுகளின் எச்சங்கள் இலேசில் அழிந்துபோவதில்லை. காலமாக அவை தொடரவே செய்கின்றன.

இப்போது நிலமை என்ன வென்றால் காந்தி தேசத்துப் படைகள் விட்டுச் சென்ற எச்சம் பார்த்தீனியம் தமிழர் பகுதிகளில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் பற்றிப் பெருகி பெரும் சமுதாயப் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. காந்தி தேசத்துப் படைகள் விதைத்துவிட்டுப்போன பார்த்தீனியத்தால் ஈழத்தமிழ் இனம் சிறுகச்சிறுக கண்ணுக்குப் புலப்படாத வகையில் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருவதை எமது தமிழ்ப் புத்திஜீவிகள் பலர் சுட்டிக்காட்டி எச்சரித்து வந்தனர். தொடர்ந்தும் எச்சரிக்கின்றனர்.

தமது காணிகளில் காணிகளை அண்டியுள்ள பகுதிகளில் பற்றிப் பரவி பெருக்கிக்காணப்படும் பார்த்தியத்தை குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் அழித்தொழிக்காது விட்டால், குறித்த காணிகளின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடர்ந்து சிறைத்தண்டனை வழங்க சட்டத்துக்குப் பொறுப்பான தரப்பினர்கள் ம்முடிவு செய்து அது குறித்து பொது மக்களுக்கும் அறிவுறுத்தி வருகின்றனர். பார்த்தீனியம் அழிக்கப்பட வேண்டியதொன்று.

*வி.தம்பிராசா*

இரா. நிஷாந்தன்



# இன்றைய விஞ்ஞானத்தில் ஆன்மிகத்தின் வகிபங்கு

இன்றைய நவீன காலம் தனில் விஞ்ஞானத்தின் பெரு வளர்ச்சியினால் உலகம் சுருங்கி எமது கைகளுக்குள் சுழன்று கொண்டிருக்கின்றது. தொழிநுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புக்கள் நாளுக்கு நாள் நடந்து கொண்டிருக்கின்றன. நவீன சாதனங்களின் பயன்பாடுகள் அதீத பயன்பாட்டினைப் பெற்று வருகின்றன. இதனால் உலகின் எந்த மூலையில் எது நடந்தாலும் அதனை நாம் இருந்த இடத்தில் இருந்தவாறே நொடிப் பொழுதில் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் அவற்றை எம்மால் பார்வையிடவும் முடிகிறது. இவையனைத்தும் விஞ்ஞானத்தின் பெரும் வளர்ச்சியின் காரணமாக கண்டறியப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்ற தன்மைகளைக் கொண்டு விளங்கு கின்றன.

ஆனால் இன்றைய விஞ்ஞானத்தில் அமைவுறுகின்ற சில கண்டுபிடிப்புக்கள் மற்றும் விஞ்ஞானம் சார்ந்த செயற்பாடுகள் இன்றைய விஞ்ஞானத்தின் துணை கொண்டே கண்டறியப்பட்டுள்ளன என நாம் கருதி வருகின்றோம். ஆனால் இத்தகு செயற்பாடுகள் அனைத்தும் இந்து மத ஆன்மிகத்தின் வாயிலாக இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆதாரபூர்வமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய விஞ்ஞானத்தின் சில கண்டுபிடிப்புகளுக்கு இத்தகு ஆன்மிகத்தின் தன்மைகளே உறுதுணையாக அமைந்துள்ளன என்பதும் உண்மையே. அத்தகு ஒருசில உதாரணங்களை இங்கு கண்ணுறுவோம்.

### வானூர்தியின் பயன்பாடு

இன்று வான்வழிப் போக்குவரத்தானது சிறப்புற நடைபெற்று வருகின்றது. இத்தகு வான்வழிப் போக்குவரத்திற்கு உதவுகின்ற வானூர்திகள் இன்றைக்கு பல வருடங்களுக்கு முன்பு குறிப்பாக 1903ஆம் ஆண்டளவில் ரைட் சகோதரர்களால் கண்டறியப்பட்டது என்பதை நாம் அறிவோம். ஆனால் ரைட் சகோதரர் வானூர்தியைக் கண்டுபிடிப்பதற்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்துமதம் தனில்வானூர்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஆன்மிக ரீதியில் கூட நிரூபிக்கப்பட்டுள்ளது. இராமாயணத்தில் புஷ்பக வானூர்தி பற்றிய தகவல் அமைவுறுகின்றது. இலங்கையின் அரசனாக விளங்கிய இராவணன் பயன்படுத்திய வானூர்தி இந்த புஷ்பக வானூர்தி. இதைக் குபேரன் என்பவனிடம் இருந்து இராவணன் தன் வலிமையால் தன்வசப்படுத்தினான். இந்த புஷ்பக வானூர்திலேயே இராவணன் சீதையைக் கடத்திச் சென்று இலங்கையின் அசோகவனத்தில் சிறை வைத்தான் என்பதும் இராம இராவண போர் முடிவடைந்த பின் இராமன் சீதையை சிறை மீட்டு மீண்டும் அயோத்தி திரும்பியதும் புஷ்பக வானூர்தியிலேயே என்பதும் இராமாயணத்தில் வெளிப்படும் கருத்தாடலாகும். ஆக, இராமாயண காலத்திலேயே ஆகாயத்தில் பயணம் செய்யக் கூடிய வானூர்தியின் பயன்பாடு இருந்துள்ள தன்மை பிற்காலத்தில் விஞ்ஞான ரீதியில் பற்பல வானூர்திகள் உருவாக்கப்படுவதற்கு துணை புரிந்துள்ளமை உண்மையே. ஆனால் இது கற்பனை என யாரும் கருதினால் வானூர்தியின் பயன்பாடு ஆன்மீக ரீதியில் இருந்துள்ளமையை இராமாயணம் மட்டுமன்றி இருக்கு, வேதம், மற்றும் ஆய கலைகளில் ஆகாயப் பிரவேசம், ஆகாய கமானம் என்பன ஆதாரம் செய்கின்றன.

> இன்றைய விஞ்ஞானத்தில் அமைவுறுகின்ற சில கண்டுபிடிப்புக்கள் மற்றும் விஞ்ஞானம் சார்ந்த செயற்பாடுகள் இன்றைய விஞ்ஞானத்தின் துணை கொண்டே கண்டறியப்பட்டுள்ளன என நாம் கருதி வருகின்றோம். ஆனால் இத்தகு செயற்பாடுகள் அனைத்தும் இந்து மத ஆன்மிகத்தின் வாயிலாக இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆதாரபூர்வமாக செயற்படுத்தப்பட்டுள்ளன.

### தொலைக்காட்சியில் ஊடுறும் நேரலை

இன்று நாம் எல்லோரும் தொலைக்காட்சி பார்வையிடுகின்றோம். தொலைக்காட்சி இல்லாத இடமோ, இல்லமோ எங்கும் இருக்காது. அத்தகு தொலைக்காட்சியில் திரைப்படங்கள், தொடர் நாடகங்கள், செய்திகள், பாடல்கள், பல்சுவை நிகழ்ச்சிகள் என பலவற்றை நாம் காண்கின்றோம். இத்தகு நிகழ்ச்சிகளில் சில நிகழ்வுகள் நேரலையாக ஒளிபரப்பப்படுகின்றன. குறிப்பாக ஒரு இடத்தில் நடைபெறும் நிகழ்வினை சம நேரத்தில் தொலைக்காட்சி வழியே நேரடியாக அதனை நாம் கண்டு களிக்க முடியும். இத்தகு நேரலையில் கிரிக்கெட் போட்டிகள் குறிப்பிடத்தக்கவையாகும். உதாரணமாக இந்தியாவில் நடைபெறும் ஒரு கிரிக்கெட் போட்டியை நாம் சம நேரத்தில் இருந்த இடத்தில் இருந்தவாறே தொலைக்காட்சி வழியே நேரலையாக கண்டு மகிழ்கின்றோம். இது விஞ்ஞானத்தின் வியத்தகு வளர்ச்சிப் படிமுறையாகும். ஆனால் இத்தகு நேரலைச் செயற்பாடானது இன்றைக்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தொலைக்காட்சி இன்றியே பார்வையிடப்பட்டுள்ள தகவல் மகாபாரத்தில் அமைவுறுகின்றது. மகாபாரத்தில், பாண்டவர் மற்றும் கௌரவர்களுக்கிடையில் பாரதப் போரானது குருசேத்திரம் எனும் போர்க் களத்தில் நடைபெற இருந்த சமயம், அஸ்தினாபுரம் எனும் குரு வம்சத்தவர் நாட்டிற்கு வேதவியாசர் வருகை தருகின்றார். அஸ்தினாபுரம் என்பது குருசேத்திர போர்க் களத்தில் இருந்து பல மைல் தொலைவில் அமைந்துள்ள ஓர் நாடாகும். அஸ்தினாபுரம் வந்த வேதவியாசர், அரசன் திருத ராட்டினனிடம், அரசே, நடைபெறவுள்ள குருசேத்திரப் போரினைக் காண விரும்பி னால் நான் தமக்கு ஞானக்கண் பார்வையை அளிக்கின்றேன். அதன் வாயிலாக இங்கிருந்த படியே போர்க் களத்தின் நிகழ்வுகளை கண்டு கொள்ள முடியும் என உரைத்தார். அதற்கு அரசன் திருதராட்டினன், தனக்கு வழங்க விரும்பும் ஞானக்கண் பார்வையினை தன் ஆலோசகன் சஞ்ஞயனுக்கு வழங்கும் படி வேண்டினார். அதன்படி வியாசரும் திவ்ய திருஷ்டியினை சஞ்ஞயனுக்கே வழங்கிச் சென்றார். அதன்படி ஞானக்கண் பார்வையினைப் பெற்ற சஞ்ஞயன் அரச சபையில் அரசனுக்கு அருகில் இருந்தவாறே போர்க்களத்தில் நிகழும் நிகழ்வுகளை அரசனுக்கு நேரடியாக கண்டு கூறுவதைப் போலவே தெரிவித்தான். இத்தகு செயற்பாடு நாம் இன்று தொலைக்காட்சிகளில் காணும் நேரலைச் செயற்பாடுகளுக்கு முன்னுதாரண மாக இருந்துள்ளது. ஆன்மீக ரீதியில் இத்தகு செயற்பாடு ஊடுற்றிருப்பது ஆதாரமாக உறுதியாகின்றது.

### அஸ்திரப் பயன்பாடும் நவீன ஆயுதங்களும்

இன்றைய நவீன தொழில் நுட்ப வளர்ச்சிப் படிமுறையில், பீரங்கிகள், ஏவுகணைகள், அணுகுண்டுகள், மற்றும் ரொக்கட் என்பவற்றின் பயன்பாடு அதிகளவில் உள்ளன. இவை இரு நாடுகளுக்கு இடையில் போரானது நிகழும் போது பயன்படுத்தப்படுகின்றன. இவற்றால் பெரும் அழிவுகளும் நிகழுகின்றன. உதாரணமாக ஒரு ஏவுகணையை ஒரு இடத்தில் இருந்து ஏவினால் அது பல மைல் தூரத்திற்கு அப்பால் சென்று விழுகிறது. இது மட்டுன்றி ஆகாயத்தில் பறக்கும் போர் வானூர்திகளைக் கூட நிலத்தி லிருந்து ஏவுகணை அல்லது உயர்தர பீரங்கிகள் துணை கொண்டு தாக்கி அழிக்க முடியும். இத்தகு செற்பாடுகள் எல்லாம் விஞ்ஞானத்தில் மட்டுமே அமைவுறுகின்றன என நாம் எண்ணக் கூடும். ஆனால் இத்தகு செயற்பாடுகளுக்கு முன்னோடியான செயற்பாடுகள் நம் ஆன்மிகத் தன்மையில் இழையோடியிருக்கின்றன என்றால் நாம் அதை நம்பியே ஆக வேண்டும். ஆன்மிகத்தில் இதிகாசங்கள் மற்றும் புராணங்களில் அஸ்திரப் பயன்பாடு எனும் தன்மையினை நாம் கண்ணுற முடியும். அதாவது இதனை வில்வித்தை எனக் குறிப்பிட முடியும். ஆரம்ப கால குருகுலக்கல்வியில் தனுர் வித்தை (வில்வித்தை) இடம் பெற்றுள்ளது. வில்லின் நாணில் அம்புகளை வைத்து இலக்கினை நோக்கி எய்கின்ற தன்மை இதுவாகும். சாதாரணமாக வில்லில் வைத்து எய்யப்படும் அம்புகளுக்கு மேலாக சக்தி பொருந்திய அம்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை அஸ்திரங்கள் என அழைக்கப்டுகின்றன. இவை சக்தியும், வலிமையும் கொண்டமைந்தமையாக விளங்குகின்றன. இத்தகு அஸ்திரங்கள் தெய்வங்களின் சக்தி பொருந்தியனவாக அவர்களின் பெயர்கள் கொண்டே அழைக்கப்படுகின்றன. அவற்றை நோக்கும் போது,

பாசுபாதஸ்திரம் சிவன், நாராயணஸ்திரம் - விஷ்ணு, பிரம்மாஸ்திரம் - பிரம்மா, ஆக்னேயஸ்திரம் - அக்கினி, சூரி யாஸ்திரம் - சூரியன், வருணாஸ்திரம் - வருணன், இந்திராஸ்திரம் - இந்திரன், நாகாஸ்திரம் - நாகராஜன், இவ்வாறு பல திவ்ய அஸ்திரங்கள் பற்றிய குறிப்புகள் வெளிப்படுகின்றன. இவை போர்களின் போது இறுதிக் கட்டங்களில் எய்யப்படுவதாகும். குறிப்பாக இவை ஒவ்வொன்றும் பேரழிவினை ஏற்படுத்தக் கூடிய தன்மை கொண்டவை. இவற்றைத் தடுக்கக் கூடிய எதிர்ச் சக்திகளும் இல்லை என்றே கூறலாம். உதாரணமாக பிரம்மாஸ்திரம் என்பது, இலக்கினை மொத்தமாக அழிக்கக் கூடிய வலிமை படைத்தது எனவும், நாராயணஸ்திரம் என்பது எண்ணற்ற சக்கரங்கள் வடிவில் எதிர்ப்படும் இலக்கினை அழிக்கும் தன்மை கொண்டது எனவும், பாசுபாதஸ்திரம் பெரும் பிரளயத்தினை ஏற்படுத்தக்கூடியது எனவும் இந்த அஸ்திரங்களின் தன்மை பற்றி புராணங்கள் தெளிவுறுத்துகின்றன. இவ்வாறான அஸ்திரங்களின் பயன்பாடானது பிற்காலத்தில் நவீன ஆயுதங்களின் பயன்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது என்றால் அது உண்மையே.

ஆகவே, இத்தகு கருத்தாடல்கள் வாயிலாக, இன்றைய நவீன விஞ்ஞானத்தில், ஊடுறும் சில செயற்பாடுகள் நம் ஆன்மிக ரீதியில் எம் முன்னோர்களால் ஆராய்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை கண்டு கொள்ளலாம். இவையெதுவும் கற்பனையோ, கட்டுக்கதைகளோ அல்ல என்பதைனை எமது இந்துமத புராணங்கள் இதிகாசங்கள் மற்றும் இதர நூல்கள் வாயிலாக ஆதார ரீதியாக அறிந்து கொள்ளலாம்.

நாளை
**24.04.2018**
செவ்வாய்க்கிழமை
சித்திரை 11
திதி: நவமி பி.ப. 02.02
நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப.05.22
சுபநேரம்: 10.30–12.00 வரை
ராகுகாலம்: 03.00–04.30

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா வைத்திலிங்கம்

யாழ்ப்பாணம் நல்லூர் தெற்கு, அரியாலை நாவலர் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா வைத்திலிங்கம் 21.04.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவகுரு வைத்திலிங்கத்தின் (புகையிரத நிலைய அதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்வர்களான நடராசா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), பத்மாவதி (கனடா), மகேஸ்வரி (லண்டன்), சிவானந்தன் (ஆஸ்திரேலியா), சிவராசா (கனடா), சிவகுமார் (கனடா), சிவகுருநாதன் (சுவிஸ்), சிவபூசமலர் (லண்டன்), சிவநேசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயாரும் மாலினி (யா/ நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாசாலை, உபஅதிபர்), கனகராஜா, தர்மபாலன், விக்னேஸ்வரி , பிறேமினி, ராணி, லதா, ரட்ணகுமார், மீரா ஆகியோரின் அன்பு மாமியும் தாட்சாயினி, சுவேதா, பிருந்தா (ஆசிரியர், யா/ மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலயம்), நந்தீசன், சிவசக்தியன், மயூரன், ஜெகான், ஜெசி, அனுசியா, அருண்குமார், அஞ்சலா, நினுஜா, அனிற்ரா, சிந்துஜா, அருமிஸ், அனோஜன், சரண்யா, ஜெய்சன், மயூரி, கஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், நீகன், அஸ்ரின், மகன்யா ஆகியோரின் அன்புப்பூட்டியும், கணபதிப்பிள்ளை, யோகம்மா, சுந்தரவல்லி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் அரியாலை செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**427 , நாவலர் வீதி ,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS/15945)(11,17) **021 222 9893**

## மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 05 . 1924



இறப்பு 22 . 04 . 2018

### திருமதி மேபல் அரியமலர் போல்

வடக்கு புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேபல் அரியமலர்போல் நேற்று (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அழகரட்ணம் (அழகரப்பு - வடக்கு புன்னாலைக்கட்டுவன்) ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அராலியைச் சேர்ந்த திரு.திருமதி நாகேந்திரா போல் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வில்லிப் போலின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மணிபோனே, குணரட்ணம், எட்வேட், புஸ்பிதம்பையா, பிரின்ஸ் ரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வண அன்டனி அரியரட்ணம் போல் (முன்னாள் அதிபர் - வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி) மற்றும் ஞானி எட்வேட், செல்லாபோல், யோகிபோல் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான ராயூ எட்வேட், வினோதினி போல், குஞ்சுப்பிள்ளை மற்றும் அருள் மலர்போல் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகான் - டில்ஷானி, மில்ரோய் - அனுஜா, ஜெபஜோதி - வண. சுதர்சன், ரீனா - ஜெகன், கேபிறிஜல் - ஆன், சாள்ஸ் - பிரேமிகா, யோகான் - துஷாரா, டிலோ - இயேசு, ஜெராட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெசிக்கா, ருக்சிக்கா, அக்கேஸ், ஐஸ்வரி, அஞ்சலி, மத்தியு, ஜோயெனா, சிந்தியா, அன்ரு ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (24.04.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக வட்டுக்கோட்டை கதிற்றல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சீ.எல்.ஐ. குருமனை,**
**கே.கே.எஸ்.வீதி, இணுவில், சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/15942)(11,17) **021 224 2668, 077 627 2109**

# மரண அறிவித்தல்



## திருமதி
## மயில்வாகனம் புவனேஸ்வரி

**பிறப்பு** **01-06-1922**

**இறப்பு** **18-04-2018**



யாழ். பாண்டியந்தாழ்வு (ஈச்ச மோட்டை) பிறப்பிடமாகவும், இராசாவின் தோட்டத்தை வாழ்விடமாகவும், தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்தவருமாகிய திருமதி மயில்வாகனம் புவனேஸ்வரி 18-04-2018 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சரஸ்வதி தம்பதிகளின் அருமை மகளும், வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம்(வர்த்தகர், தேவதயாளன் ஸ்ரோர் உரிமையாளர்- குருநாகல்) அவர்களின் அருமை மனைவியும், அருட்செல்வானந்தன்(அருள்- லண்டன்), பொற்சபானந்தன்(ஆனந்தன்- பிரான்ஸ்), தேவதயானந்தன்(தயா- அவுஸ்திரேலியா), புட்கரானந்தன்(கிருபா- பிரான்ஸ்), கருணநாதன்(கருணா- பிரான்ஸ்), தர்மானந்தன்(தர்மா- இலங்கை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செம்பொற்சோதி(ரதி), சறோஜா(சறோ), ஜெயராணி(ஜெயா), சித்ரா, சிவதர்ஷினி(சிவா), சாந்தினி(சாந்தி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லவன், தினைற், காயத்திரி தனுஷன், கஜன், கஜனி, தீபன், லாவண்யா, லக்ஷ்மன், தனுஜன், விவேகா, அனித்தா, சஜித், நிலா, கிருஷ்ணா, அபிசேக், டிலுக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், றியா, மாலன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை 24-04-2018 மு.ப. 9.30 முதல் 1.30 வரை Rookwood Cemetery, 43 East St, Lidcombe NSW 2141, Australia வில் பார்வைக்காக வைக்கப்பட்டு, பி.ப. 1.00 மணிக்கு தகனக் கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

அருள் : பிரித்தானியா +447960769690, ஆனந்தன் : பிரான்ஸ் +33658704546,
தயா : அவுஸ்ரேலியா +61405080912, கருணா : பிரான்ஸ் +33603120945,
தர்மா : இலங்கை +94773051259, தேவ தயானந்தன் : அவுஸ்ரேலியா +61298633727

### வேலையாள் தேவை

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் தனியார் விவசாயப் பண்ணையில் பகுதியாகவோ, முழு நேரமாகவோ கூலி வேலை செய்வதற்குத் தொழிலா-ளர்கள் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

**077 271 9661** (CS/15946)(11,17)

### வேலையாள்கள் தேவை

மேசன், காப்பென்டேர்ஸ், வெல்டேர்ஸ், அலுமினிய வேலை செய்பவர்களும், பிளம்பிங், எலக்ட்ரீசியன்கள், கம்பி வேலை, பெயின்டிங் மற்றும் இதர வேலைகளிற்கு வேலையாள்கள் கம்பளை, கொழும்பு வேலைத்தளங்களிற்கு தேவை.

தொடர்பு - 071 397 5695, 071 435 6437, 076 424 2090


## நீங்கா நினைவுகளில்...

**21ஆம் ஆண்டு** **4ஆம் ஆண்டு**



**அரியதுரை புவனேஸ்வரி**
தோற்றம்:- 07.12.1926
மறைவு:- 14.05.1997

**வேலுப்பிள்ளை அரியதுரை**
தோற்றம்:- 01.08.1926
மறைவு:- 21.02.2014

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்களை ஆளாக்கி வாழ வழி சமைத்த எம் அன்புத் தெய்வங்களை இந்நாளில் நினைவு கூருகிறோம்


**சென் பெனடிக்ற் வீதி, அரியாலை.**

**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(CS/15935)(11,17)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை அப்பாசாமி



தோற்றம் 03.07.1930 மறைவு 21.04.2018

சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், ஈவினை தெற்கு புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை அப்பாசாமி 21.04.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, நாகலிங்கம், மாணிக்கம் மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நேசமலர் மற்றும் நேசசிவம், சண்முகநேசன் (இ.போ.ச. நடத்துநர்), நேசகுணம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சத்தியபாலன் மற்றும் தேவறஞ்சன், இசைச்செல்வி, காலஞ்சென்ற சிவரூபன் ஆகியோரின் மாமனாரும், யசோதரன் (லண்டன்), கிரிதரன் (கனடா), ஜோய் வினோதினி, ஜஸ்மின், ஜோன்சன், குணாளன் (யாழ் இந்துக் கல்லூரி மாணவன்), அனாமிகா (ஜேர்மனி), அமரனாத் (ஜேர்மனி), அபிராம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், யஸ்மின் நேசா (லண்டன்), பிரவன் (லண்டன்), மீரா சூ (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.**


**தகவல் குடும்பத்தினர்.**

**077 826 4729** (CS/15954)(11,17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

### வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுச்சங்க பரிசோதகர், நரசிங்கவைரவர் கோயில் பூசாரி)



கடந்த 24.03.2018 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் மரணச்செய்திகேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் வைத்தும், கண்ணீா அஞ்சலிப் பிரசுரங்கள் செய்தும் பதாகைகள் காட்சிப்படுத்தியும், தமது அனுதாபத்தை தெரிவித்தோருக்கும், இரங்கல் உரையாற்றியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் இன்று (23.04.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விலும் இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**டச்சு வீதி,**
**சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 1929 • 09 • 01



மறைவு 2018 • 04 • 22

### திருமதி. தர்மலிங்கம் அமுதம்

(இளைப்பாறிய ஆசிரியை)

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், முல்லைப்பிலவை வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி. தர்மலிங்கம் அமுதம் அவர்கள் (22-04-2018) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு, இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா, பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தபாலதிபர் திரு கந்தையா தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், பொன்னம்பலம், சுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி, முத்தாச்சி, மனோன்மனி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற தபாலதிபர் செல்வரட்ணம், Dr. சாரதாதேவி (New Zealand), காலஞ்சென்ற சாவித்திரி (ஆசிரியர்), சிவமணிதேவி (New Zealand), Dr. சரோஜாதேவி (England), பத்மநாதன் (New Zealand) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், மற்றும் Dr. விக்னேஸ்வரி (கொழும்பு), தவராசா (இ.போ.ச - கல்லாறு), மங்களேஸ்வரி (கொழும்பு), சாந்தமலர் (England), லலிதாம்பாள் (யோகம்), கதிர்காமநாதன் (S.K.T. Nathan - Switzerland), விமலநாதன் (Switzerland), கௌரியம்பாள் (England), ஞானாம்பாள் (கொழும்பு), அருட்செல்வி (England) மற்றும் தயாநிதி (கல்லாறு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (23-04-2018) காலை 10.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : மக்கள், மருமக்கள் - 0112363628**



# இன்றைய நாள்

**மேடம்:** முக்கியமான பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். இலாபம் சுமாராக இருக்கும். வருமானம் மிதமாக இருக்கும்.

**இடபம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழிலில் நவீன மாற்றம் செய்வீர்கள். இலாபம் சீராக இருக்கும். பிள்ளைகளின் வழியில் செலவு ஏற்படலாம். மனைவி வழி உறவினரால் நன்மை உண்டாகும்.

**மிதுனம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் சிறந்து விளங்கும். ஆதாயம் அதிகரிக்கும். தாயின் தேவையை பூர்த்தி செய்வீர்கள்.

**கடகம்:** உழைப்பின் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். வருமானம் பெருகும். பெண்கள் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவர். அரசு வகையில் ஆதாயம் கிடைக்க வாய்ப்புண்டு.

**சிங்கம்:** குடும்ப பிரச்னையில் நல்ல தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** மன குழப்பம் தீர வழிபாட்டில் ஈடுபடுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். ஒவ்வாத உணவு களைத் தவிர்க்கவும்.

**துலாம்:** வெகுநாள் குழப்பம் சரியாகும். வாழ்வில் முன்னேற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர அதிகம் உழைப்பீர்கள். லாபம் உயரும்.

**விருச்சிகம்:** அக்கம் பக்கத்தினரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு சராசரியாக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**தனுசு:** அன்றாட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். இலாபம் திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மகரம்:** திட்டமிட்ட செயல் நிறைவேற கவனம் தேவை. குடும்பத்தினரின் ஆதரவால் நன்மை உண்டாகும். சக தொழில் சார்ந்தவரிடம் வீண் விவாதம் வேண்டாம்.

**கும்பம்:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலக்கு பூர்த்தியாகும். உபரி பணவரவால் கடன் சுமை குறையும்.

**மீனம்:** நண்பரால் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். வருமானம் பெருகும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.




## ஏப்ரல் மாத இறுதியில்

# 'பாஸ்கர் தி ராஸ்கல்'

மம்முட்டி-நயன்தாரா நடிப்பில் மலையாளத்தில் வெளியாகி வரவேற்பைப் பெற்ற படம் 'பாஸ்கர் தி ராஸ்கல்'. இதன் தமிழ் மறுதயாரிப்பில் அரவிந்தசாமி மற்றும் அமலாபால் நடித்துள்ளார்கள். மலையாளத்தில் இயக்கிய சித்திக் தான் 'பாஸ்கர் ஒரு ராஸ்கல்' என்ற பெயரில் தமிழிலும் இயக்கினார்.
இரு குழந்தைகளின் பெற்றோர்களாக அரவிந்தசாமியும் அமலாபாலும் இதில் நடித்துள்ளார்கள். படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் கடந்த மார்ச் 20ஆம் திகதி படம் வெளியாகும் என சொல்லப்பட்டது. எனினும் படம் வெளிவரவில்லை. தற்போது 'பாஸ்கர் ஒரு ராஸ்கல்' படத்தை வரும் ஏப்ரல் 27ஆம் திகதி வெளியிட முடிவு செய்திருக்கிறார்கள் படக்குழுவினர்.



**பெண்கள் துணிக்கடையில் கேட்கும் இரண்டு விசயம்.....**

இந்த டிசைன்ல வேற கலர் இருக்கா....!
இந்த கலர்ல வேற டிசைன் இருக்கா.....!!












## வகுப்பறையில் மாணவர்கள் செய்யும் அட்டகாசம்

**ஆசிரியை:** பிள்ளைகளே, நான் உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கப்போறேன். அதுக்கு நீங்க பதில் சொல்லணும்.
**மாணவர்கள்:** சரி ரீச்சர்...
**ஆசிரியை:** ஏன் பெண்கள் மட்டும் பரீட்சையில் அதிகமா மார்க் வாங்குகிறாங்க? ஏன் ஆண்கள் வாங்குவதில்லை?
**மாணவன்1:** அதுக்குத் தானே மார்க்குக்கு தமிழ்ல "மதிப்-பெண்" என பெயர் வச்சுருக்கீங்க. நாங்க அதிகமா மார்க் வாங்கணும்னா அதை "மதிப்-ஆண்" (மதிப்பாண்) என மாத்துங்க.
(திடீரென்று இன்னொரு மாணவன் எழும்பி மீக ஆவேசமா பதில் சொல்கிறான்)
**மாணவன்2:** ரீச்சர், இந்த கல்விக் கடவுள் சரஸ்வதியை வேற டிப்பாட்மென்டுக்கு மாத்திட்டு, புதுசா ஆம்பள கடவுள போடுங்க. சரஸ்வதியம்மா எப்போதுமே பசங்களுக்கு சப்போர்ட் பண்றதில்ல.
**ஆசிரியை:** ???????????

**கணவன்:** உனக்கு அக்பரைப் பற்றித் தெரியுமா??
**மனைவி:** இப்போ என்ன அவருக்கு??
**கணவன்:** அவருக்கு மூன்று மனைவிகள்.
**மனைவி:** அதனால??
**கணவன்:** எனக்கு இன்னும் இரண்டு மனைவிகளுக்கான வாய்ப்பு இருக்கிறது.
**மனைவி:** உங்களுக்கு பாஞ்சாலியைப் பற்றித் தெரியுமா?
**கணவன்:** என்ன செல்லம்.. இப்படி பட்டுன்னு டென்ஷ ஆகுற...



# பல்வேறு வகையான மிருகங்களின் கூட்டுக் குடும்பம்

ஒரு மிருகக்காட்சிச் சாலையில் இரண்டு ஓநாய்கள் 'ஒரு பழுப்பு நிறக் கரடி' மூன்று மரநாய்கள், ஆறு செந்நாய்கள், ஆறு நரிகள் ஒன்றாகக் கூட்டுக் குடும்பம்போல ஒரு பெரிய கூண்டில் வசித்து வந்தன. அவை வளர வளர ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டு சில மடிந்து விடும் என்று சிலர் கூறினர். ஆனால் அது பொய்யாகி விட்டது.

ஆண்டுகள் ஓடின. இந்தப் பல்வேறு மிருகங்களின் ஒற்றுமை மனித சமுதாயத்துக்கே படிப்பினையாக அமைந்தது. இந்த மிருகக் கூட்டத்துக்கு பெண் ஓநாய் ஒன்று தலைமை தாங்கியது. எப்பொழுதுமே அமைதி காக்கப்பட்டதால் தலைவிக்குத் தலைவலியே இல்லை. சாப்பாட்டு வேளையில் பூசல் எற்படும் போலத் தெரிய வந்தால் பெண் ஓநாய் தனது அகல வாயைத் திறந்து பெரிய கோரப் பற்களைக்காட்டி பயமுறுத்தும். இதனைப் பார்த்து தகராறு பண்ணும் கரடி கூட பின்வாங்கி விடும். சில சமயம் நரிகள். இருப்பதிலேயே பெரிய மாமிசத் துண்டுகளாகப் பார்த்து எடுத்துக் கொள்ளும். ஆனால் பாரபட்சமற்ற ஓநாய்த்தலைவி அந்தத் துண்டுகளைப் பிடுங்கி வைத்து விடும் மரநாய்கள் மற்றத் தோழர்களோடு மிகவும் ஒற்றுமையாய் இருந்தனவாம். எப்பொழுதாவது சண்டை ஏற்பட்டால் ஓநாய்த் தலைவி சட்டென்று தலையிட்டு சண்டைக்கு அணை போடுவாள். வெவ்வேறு மிருகங்களுக்கிடையேயுள்ள இந்த அதிசய ஒற்றுமை அவைகள் குட்டியிலிருந்தே ஒன்றாக இருந்ததால்தான் ஏற்பட்டது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். ஒரு நரி பெண் ஓநாயை மெத்தை போல கருதி அதன் மீது படுத்து உறங்குமாம். என்னே ஒற்றுமை! மிருகங்கள் பல்வேறு விதமானவை. மனிதர்களோ ஏதோ விதமானவர்கள். ஒற்றுமையாக இருக்கும் போது எம்மால் மட்டும் ஏன் முடியாது. நல்லதை யாரிடமிருந்தாகிலும் நாம் கற்றுக் கொள்ளலாம். அது குழந்தை என்றாலும் சரி, கிளி என்றாலும் சரி.



# ஆமையின் ஆசை

ஒரு குளத்தில் ஓர் ஆமை வசித்து வந்தது. அதற்கு வானத்தில் பறக்க வேண்டும் என்று நீண்ட நாள்களாக ஆசை இருந்தது.


அது எந்தப் பறவையைக் கண்டாலும் "எனக்கு பறக்க கற்றுத் தாருங்கள்" என்று கெஞ்சிக் கேட்கும். ஒரு நாள் ஆமை சிட்டுக்குருவி ஒன்றைக் கண்டது. அது குருவியிடம் "எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டது. "உதவியைச் சொல். முடியுமானால் செய்கின்றேன்" என்று குருவி சொன்னது. "உன்னைப் போல் உலகைச் சுற்றி வர எனக்கு ஆசை. பூமியில் ஊர்ந்து ஊர்ந்து எனக்கு அலுத்து விட்டது" என்றது ஆமை.

"ஆமையாரே! பறக்க முடியாது. அதற்கு வானத்தில் பறந்து பயிற்சி செய்யவேண்டும்" என்று கூறி சிட்டுக் குருவி பறந்து போனது. மற்றொரு நாள் ஆமை காகம் ஒன்றைக் கண்டது. ஆமை சிட்டுக்குருவியிடம் கேட்டது போலவே காகத்திடமும் கேட்டது. காகம் "நீரோ பெரியவர் உம்மைத் தூக்கிக் கொண்டு என்னால் பறக்க முடியாது. மன்னித்துக் கொள்ளும்" என்றது.

இன்னொரு நாள் ஆமை கழுகு ஒன்றைக் கண்டது "கழுகு அண்ணாவே என்னை மேலே தூக்கிச் செல்லுங்கள். நான் விடச் சொல்லும் இடத்தில் என்னை விட்டு விடுங்கள். நான் எமது மெதுவாகப் பறக்கக் கற்றுக் கொள்கிறேன்! என்று கூறியது. ஆமையின் வேண்டு கோளை கழுகு ஏற்றுக் கொண்டது. கழுகு ஆமையைத் தனது கால்களால் தூக்கிக் கொண்டு வானத்தில் பறந்தது. ஆமை விட நினைத்தது போல் வான வெளியில் விட்டது.

ஆமை வேகமாக நிலத்தை நோக்கி வந்தது. நல்ல வேளை அது ஒரு குளத்திற்குள் தொப்பென்று விழுந்தது. "தரையில் அல்லது பாறையில் விழுந்திருந்தால் சிதறி இருப்பேன்" என்று அது எண்ணியது. இதன் பின்பு ஆமை பறக்கும் ஆசையைக் கைவிட்டது. ஆசைக்கும் ஓர் அளவுண்டு என்பதை அது உணர்ந்து கொண்டது.

# வர்ணம் தீட்டுவோம்



# மணல் வீடு

கோடி கோடி பணத்தினால்
மாடி வீடு கட்டுவர்
கோடி கோடி மணலினால்
வீடு நாங்கள் கட்டினோம்

செங்கல் தேவையில்லையே
சீமெந்தும் தேவையில்லையே
எங்கள் வீட்டைக் கட்டிட
இரும்பும் தேவையில்லையே

ஐந்து நிமிட
நேரத்தில்
அழகு மிக்க
வீட்டினைச்
சந்து பொந்து
இன்றியே
குந்தி நாங்கள் கட்டினோம்
கடலின் அலைகள் வீட்டினைக்
கரைத்திட்டாலும் பயமில்லை
உடனே புதிய வீட்டினை
உவகையோடு கட்டுவோம்

ஏடு படிக்கும் யாவரும்
கூடி வீடு கட்டினோம்
வீடு உடைந்து போகுமுன்
ஓடி வந்து பாருங்கள்



# ஆங்கிலம் பேசலாம் வாங்க



1. Mind your business.
உன் வேலையை பார்.

2. Whats their next move?
அவர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

3. He is good for nothing fellow.
அவன் ஒன்றுக்கும் உதவாதவன்.

4. Believe me.
என்னை நம்பு.

5. Help yourself.
உனக்கு நீயே உதவி செய்து கொள்.

6. Put out the light.
விளக்கை அணைத்துவிடு.

7. Keep the sandals out.
செருப்புகளை வெளியேவிடு.

8. You are quite obstinate.
நீ மிகவும் அடம் பிடிக்கிறாய்.

9. Is the doctor in?
டாக்டர் உள்ளே இருக்கிறாரா?

10. Do you have a tea or coffee?
உனக்கு டீ வேண்டுமா காப்பி வேண்டுமா?

11. Are you mad?
நீ என்ன பைத்தியமா?

12. He is an eccentric fellow.
அவன் ஒரு விசித்திரமான மனிதன்.

13. She is an impertinent girl.
அவள் மரியாதை தெரியாத பெண்.

14. I am fond of cycling.
எனக்கு சைக்கிள் ஓட்டுவதில் விருப்பம்.

15. Hurry up please.
சீக்கிரம் புறப்படுங்கள்.

16. We shall go together.
நாம் சேர்ந்து போவோம்.

17. We strayed.
நாங்கள் வழியை மறந்துவிட்டோம்.

18. My watch has stopped.
என் கடிகாரம் நின்று விட்டது

19. Is it late?
நேரமாகி விட்டதா?

20. Is there any phone call for me?
எனக்கு ஏதாவது போன் வந்ததா?

21. What post do you hold?
நீங்கள் என்ன பதவியில் இருக்கிறீர்கள்?

22. He absconded.
அவன் தலைமறைவாகி விட்டான்.

23. This is against the law.
இது சட்ட விரோதமானது.

24. I shall be glad to get rid of him.
அவன் ஒழிந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்.

25. When do you go to bed?
நீ எப்போது தூங்கச் செல்வாய்.

## ஊழல்...

வராக அடையாளம் காணப்படுபவர்கள் மீது, முறையான முழுமையான விசாரணை நடத்தப்பட்டு குற்றச்சாட்டுப் பத்திரம் தயாரிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும், உயர் அதிகாரிகள் சிலர் இதனால் தண்டனைகளிலிருந்து தப்பித்து தொடர்ந்தும் பதவிகளில் உள்ளனர் என்ற குற்றச்சாட்டும் நிலவி வரும் நிலையிலேயே இந்தத் தீர்மானம் வடக்கு அவைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 121ஆவது அமர்வு எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி மேற்படி தீர்மானத்தை சபைக்கு கொண்டு வரவுள்ளார்.

அவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாண சபையின் ஆளுகைக்கு உட்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகார சபைகள் மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களில் நடைபெற்ற ஊழல்கள், மோசடிகள், முறைகேடுகள், நிதி கையாடல்கள் சம்பந்தமாக பல விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. அந்தக் குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு பல பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த பரிந்துரைகள் சம்பந்தமாக இதுவரை எந்தவிதமான ஆக்க பூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வடக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் நிறைவடைய இன்னும் சில காலமே உள்ளது. இது சம்பந்தமான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்க ஏற்ற ஒழுங்குகளை செய்ய வேண்டும் என்று இந்த சபையை கோருகின்றேன் என்றுள்ளது. (5.8)

## தமிழர்களிடம்...

புங்குடுதீவில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் தலைவர்கள் சம்பந்தன், மாவை. சேனாதிராசா, முதலமைச்சர் விக்னேஸ்வரன், சுமந்திரன் மற்றும் நீதிபதி இளஞ்செழியன் ஆகியோரின் பாதுகாப்புக்கு சிங்களப் பொலிஸாரே அமர்த்தப்பட்டுள்ளார்கள். அவர்களால் ஏன் தமிழ் பொலிஸாரை பாதுகாப்புக்கு அமர்த்த முடியாது?

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றே விரும்புகின்றனர். வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மகன் யாரைத் திருமணம் முடித்தார். சிங்களத் தலைவர் வாசுதேவ நாணயக்காரவின் மகளையே அவர் திருமணம் முடித்தார். நாட்டின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மனைவி தமிழ்ப் பெண். மகிந்த ராஜபக்சவின் தங்கையை முடித்தவர் தமிழர் நடேசன். அதனால்தான் சொன்னேன், மகிந்த ராஜபக்ச உங்களுடைய மச்சான் என்று. வெள்ளவத்தையில் சென்று பாருங்கள், அங்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. கோயில்களைக் கட்ட முடியும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் வேல் எடுத்து வரும் போது இராணுவத்தினரே அங்கு உள்ளனர். தென்னிலங்கையில் பௌத்த விகாரைகளில் இந்து தெய்வ விக்கிரகங்களே உள்ளன. புத்தரும் இந்துக் கடவுளும் அமைதியாக ஒற்றுமையாக உள்ள போது, அவற்றை வழிபடும் மக்களே சண்டை பிடிக்கின்றனர் என்றார்.

இதே கருத்துக்களை வடக்கு மாகாண ஆளுநர் குரே இதற்கு முன்னரும் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## இராணுவத்தினர்...

படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் பயிற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினரே வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு திடீரென சுவாசப்பிரச்சினை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. கடும் வெப்பத்தால் அதிக நீர் இழக்கப்பட்டு மயங்கிய நிலையிலேயே அவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. அனைவரும் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விடுதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஒருவருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (21,110)

## நான்...

துங்க.டிலான் பெரேரா என்ற நபர் மக்கள் ஆணைமூலம் நாடாளுமன்றத்துக்கு வரமுடியாதவர். எனது ஆட்சிக்காலத்திலும் தேசியப் பட்டியல் வழங்கப்பட்டது. தற்போது மைத்திரியின் கருணையால் மீண்டும் சபைக்கு வந்துள்ளார்.

என்னை அன்று புகழ்ந்து பேசியவரும் அவர்தான். என்னைவிட ஒரு சிறந்த ஆட்சியாளர் இல்லையென்றும் வர்ணித்தார். இன்று என்னை பழுதடைந்த நூடில்ஸ் எனக் கூறுகிறார். இந்தப் பழுதடைந்த நூடில்ஸ்தான் பலமானதொரு ஆட்சியைக் கவிழ்த்தது என்பதை டிலான் மறந்துவிடக்கூடாது - என்றார். (5)

## சங்கானை...

எனப்படும் கருவிமூலம் மாலை எடுத்து வரப்பட்டு கலசத்துக்கு அணிவிக்கப்பட்டது. (5)

## ஐ.தே.கவின்...

ருந்து அறியமுடிகின்றது.

தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் அமைச்சரவையில் முழுமையானதொரு மறுசீரமைப்பை செய்வதற்கு அரச தலைவர் உத்தேசித்திருந்தாலும், அமைச்சுகளுக்கான துறைஒதுக்கீடு அறிவியல்பூர்வமாக இடம்பெறவேண்டும் என்பதற்காக அதை தற்காலிகமாக அரச தலைவர் ஒத்திவைத்தார்.

அமைச்சர்களின் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பில் மதிப்பீடுசெய்து, யார் யாருக்கு எத்தகைய அமைச்சுகள் வழங்கப்படவேண்டும் என்பது குறித்து அறிக்கையொன்றை வழங்குமாறு தனது செயலருக்கு மைத்திரி பணிப்புரை விடுத்திருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி தரப்பிலிருந்தும் மாதிரிப் பட்டியலொன்றைக் கேட்டிருந்தார்.

இதன்பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சியால் வழங்கப்பட்ட முதல்பட்டியலே நிராகரிக்கப்பட்டுள்ளது. தொழில் மற்றும் சமுர்த்தி அமைச்சுகளை ஐக்கிய தேசியக் கட்சி கோரியிருந்ததுடன், முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியி ருந்தது. லண்டனில் இருந்தவாறே மேற்படி கோரிக்கையை அரச தலைவர் மைத்திரி நிராகரித்துள்ளாரென அறியமுடிகின்றது.

இதன்பின்னர் மீண்டுமொரு பட்டியலை ஐக்கிய தேசியக் கட்சி கையளித்தது என்றும், அதற்கு மைத்திரி தரப்பு இணக்கம் வெளியிட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. (5)

## இராணுவத்தின்...

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆய்வுகள் முடிய முன்னரே, இராணுவத்தின் 49 பேர் கொண்ட அணியொன்று கடந்த பெப்ரவரி மாதம் லெபனானுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதையடுத்து, ஏனைய அணிகள் லெபனானுக்கு அனுப்பப்படுவதை ஐ.நா. அமைதிப் படைச் செயலகம் தடுத்திருந்தது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா. அமைதிகாப்பு நடவடிக்கைப் பணியகப் பேச்சாளர் நிக் பேர்ன்பக், மனித உரிமைகள் ஆய்வுக்குட்படுத்தப்படாமல், லெபனானுக்கு அனுப்பப்பட்ட 49 இராணுவத்தினர் குறித்து உடனடியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏற்கனவே லெபனானுக்கு அனுப்பப்பட்ட 49 இராணுவத்தினர் தொடர்பாக இந்த ஆய்வுகளில் மனித உரிமை கரிசனைகள் எழுப்பப்பட்டால், அவர்களைத் திருப்பி அழைக்குமாறு அரசு கேட்டுக் கொள்ளப்படக் கூடும். அத்துடன், அரசின் செலவிலேயே வேறு நபர்களை அனுப்பும் நிலையும் ஏற்படும், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இந்த விடயம் தொடர்பில் ஆட்சேபனை எழுப்பியிருந்தது. இதற்குப் பதிலளித்த இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க, ஐ.நா. அமைதிப் படைக்கு அனுப்பும் படையினரின் மனித உரிமைகளை ஆய்வுக்கு உட்படுத்துவது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இராணுவம் இன்னமும் ஒப்பந்தம் கைச்சாத்திடவில்லை என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## தமிழரின்...

இந்தியப் பத்திரிகையாளர் தி.ராமகிருஸ்ணன் எழுதிய 'ஓர் இனப்பிரச்சினையும் ஓர் ஒப்பந்தமும்' என்ற நூல் அறிமுக விழா நல்லூரில் உள்ள முகாமையாளர் சங்கத்தில் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகவே வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன. பின்னர் காலப்போக்கில் அரசின் மாற்றங்களால் அவை நீதிமன்றத்தின் ஊடாகப் பிரிக்கப்பட்டன. இரண்டு நாடுகளுக்கு இடையிலே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மாற்றமடையும் போது அதில் சம்பந்தப்பட்ட நாடான இந்தியாவும் அக்கறை காட்டவில்லை. வடக்கு கிழக்கு மாகாணம் ஒப்பந்தத்தின் பிரகாரம் இல்லாது பிரிந்தது.

வடக்கு கிழக்கு மாகாணம் பிரிக்கபட்டதன் விளைவாக தற்போது கிழக்கு மாகாணம் பெரும்பான்மை சமூகத்தின் பிடிக்குள் சிக்கிவிட்டது. இப்போது வடக்கு மாகாணத்தையும் குறிவைத்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளபட்டு வருகின்றன. சிங்கள அரசு தனது நிகழ்ச்சி நிரலை அன்றைய காலத்தில் இருந்து இன்று வரை மாற்றவில்லை. அவர்களின் திட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.

நாம் ஆரம்ப காலத்தில் இருந்து இறுதியாக முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படும் வரை இந்தியாவையே நம்பினோம்.

7 கோடி தமிழ் மக்களைக் கொண்ட தமிழ் நாட்டுக்கு தனியான அரசு அமைக்கப்பட்டு அதிகாரப் பரவலாக்கம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இங்குள்ள எமக்கு என்ன வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் இரண்டு காரணிகளுக்காக செய்துகொள்ளப்பட்டது. அதில் ஒன்று எமது இனத்தின் பிரச்சினைக்குத் ஒரு தீர்வை கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தியாவின் பாதுகாப்புக்காகவுமே இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

ஆனால் இன்றோ தென்னிலங்கையில் சீனாவின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. இதே ஆதிக்கம் தமிழ் தரப்பிடம் இருந்து வடக்கு கிழக்கு மாகாணங்கள் பறிபோனால் இங்கும் ஏற்படும். எனவே எமது மாகாணங்கள் பறிபோனால் எமக்கு மட்டும் பாதிப்பல்ல. அது இந்தியாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்பதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தமது அயலுறவுக் கொள்கையில் மாற்றத்தை கொண்டு வரவேண்டும் - என்றார். (5.8)

## முல்லைத்தீவுக்...

நேற்றுப் பிற்பகல் கடற்கரைப் பிரதேசத்தைச் சுத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டபோதே சங்கு கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.

சங்கின் வெளிப்புறத் தோற்றம் பூசனிக்காய் போன்று காணப்படுகின்றது என்றும், [illegible]குதி ஒரு பறவை போன்று விசித்திரமாகக் காணப்படுகின்றது என்றும் மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சங்கு விலை மதிக்க முடியாதது என்றும் மீனவர்கள் கூறுகின்றனர். (ற)

## அமைச்சரவை...

கள் தொடர்பாக ஒழுங்குகள் கடந்த புதன்கிழமை நிறைவடைந்தன.

இதையடுத்து பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க பிரிட்டன் சென்றிருந்த அரச தலைவருக்கு அந்த அறிக்கை உடனடியாகவே தொலைநகல் மூலம் அனுப்பப்பட்டது.

அத்துடன், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலர் சமன் ஏக்கநாயக்கவிடமும் அந்த அறிக்கையின் பிரதி கையளிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின்படி கூட்டு அரசில் 48 அமைச்சர்களை நியமிக்கமுடியும்.

அரச தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தலைமை அமைச்சரின் செயலருடன் இணைந்து புதிய அமைச்சர்களுக்கான துறைகளை ஒதுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன, என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த வாரத்துக்குள் அமைச்சரவை மாற்றம் நடைபெறும் என்றும், பெரும்பாலும் நாளை செவ்வாய்க் கிழமையாக இருக்கலாம் என்றும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. முக்கிய அமைச்சுகள் கைமாறக்கூடிய அறிகுறிகள் இருப்பதாகவும் அறியமுடிகின்றது. (5)

## வடக்கு...

னின் நூல் அறிமுக விழா நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டு வரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகவே மாகாண சபை முறைமை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. நாட்டில் உள்ள ஏனைய மாகாண சபைகள் உருவாகுவதற்கும் இந்த ஒப்பந்தமே அடிப்படைக் காரணமாகும். இதனை எமது தமிழ் அரசியல்வாதிகள் கூட பெருமையாகக் கூறியதை நாம் அறியவில்லை.

ஆரம்பத்தில் வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்து இருந்தது. அப்போது இருந்த மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள், பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் ஆட்சி செய்த பிள்ளையான் போன்றவர்களிடம் இருந்த உத்வேகம் இப்போதைய வடக்கு மாகாண அரசிடம் இல்லை. இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தாது விடுத்துவிட்டு கொழும்பு அரசு தடை போடுகின்றது, அவர்கள் ஒன்றையும் தருகின்றார்கள் இல்லை, விடுகின்றார்கள் இல்லை என்பதைக் கூறுவதிலேயே இருக்கின்றனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கொண்டு வரப்பட்ட போது இங்குள்ள அனைத்து தரப்புக்களும் எதிர்த்தனர். ஆனால் இப்போது மனம் வருந்துகின்றனர். ஏனெனில் இந்த ஒப்பந்தம் தான் இன்றுவரை எம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. இப்போதைய எமது ஏக்கம் மீண்டும் இந்திய இராணுவம் வர வேண்டும் என்று பயணிக்கின்றது.

இந்த நாட்டில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை சிங்களப் பேரினவாத சக்திகள் உட்பட முழுத் தரப்பும் எதிர்க்கவில்லை. அனைத்து தரப்புக்களும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை அதிகரிக்க வேண்டும் என்றே கோரிக்கை விடுத்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் அவர்கள் எமக்கு ஒன்றையும் தரமாட்டார்கள், நம்ப முடியாது என்று நம்பிக்கை இல்லாத எதிர்மாறான சிந்தனை இருந்தால் எம்மால் எதனையும் பெறமுடியாது.

முன்னைய காலத்தில் இந்தியாவுக்கு எதிரி நாடுகளாக அமெரிக்காவும், பாகிஸ்தானும், இஸ்ரேலும் காணப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமக்கான தீர்வையும் தனது பாதுக்காப்பையும் உறுதிப்படுத்த ஒப்பந்தம் இடம்பெற்றது. ஆனால் இப்போது இந்த நாடுகள் இந்தியாவுடன் நட்பாக இருக்க சீனா என்ற புதிய எதிரி இந்தியாவுக்கு உருவாகியுள்ளது. இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை இந்தியா விரும்பாது. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சரியாக பயன்படுத்தினால் எமக்கான தீர்வில் முன்னேற்றமான இலக்கை அடையலாம் - என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா, பேராசியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை, பொறியியல் கலாநிதி க.விக்னேஸ்வரன் ஆகியோரும் இதே கருத்துக்களை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(5.8)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தைச் சேர்ந்த
**மதியழகன் பத்மராசா**
**(பப்பா)**
கடந்த (21.04.2018) சனிக் கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருககும் குடும்பத்தினருக்கு எமதுஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் :**
**அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகம்,**
**ஊர்காவற்றுறை.**

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சகாதேவன்



நவக்கிரி வித்தகபுரத்தைப் பிறப்பிடமாகவும் நிச்சாமம் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சகாதேவன் 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற நாகலிங்கம் நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், குகராஜ், கஜீபராஜ் (சுவிஸ்), ஜெனு, டனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினிதேவி, றஞ்சினிதேவி, சந்திரகுமார் (ஜேர்மன்), பத்மினிதேவி, லீலா தேவி, காலஞ்சென்ற சிவகுமார், சுசிலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவலிங்கம், தேவராசா, காலஞ்சென்றவர்களான வனிதாதேவி, திருநாவுக்கரசு, பிரபாசேகர் மற்றும் ரவி, சந்திரன், ஜெயந்தி, காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் அடா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23.04.2018 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

(IN 006557)(10)

**தகவல்: குடும்பத்தினர்**

# பூண்டின் அற்புதப் பயன்கள்

பூண்டு, சமையலில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இது வெறும் சுவைக்காக மட்டுமே அல்ல. பல்வேறு உடல் பிரச்சினைகளுக்கும் மருத்துவ குணமுள்ள இந்தப் பூண்டு உதவுகிறது. அழகுக்கும் பூண்டு பல்வேறு பயன்களை அளிக்கிறது. பூண்டு ஆரோக்கியத்திற்கு எப்படி உதவுகிறது என்று இப்போது பார்ப்போம்:

**இதய ஆரோக்கியம்**

பூண்டு உடலில் கொழுப்பின் அளவுகளைக் குறைக்க உதவும் ஆன்டிஆக்சிடன்ட் பண்பு கொண்டதாகும். குருதியில் சர்க்கரை அளவுகளை சீராக வைத்துக் கொள்ளவும் குருதி அழுத்தத்தையும் சீராக வைக்க பூண்டு உதவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பூண்டை அதிகமாக வேகவைத்தால், அதிலுள்ள ஊட்டச்சத்துகள் இழக்கப்படும், வாய்ப்புள்ளது. உயர் குருதிஅழுத்தம், நீரிழிவுநோய், குருதிக்குழாய்க் கட்டி (த்ராம்போசிஸ்) பல்வேறு நோய்களைத் தடுக்கவும் சில நோய்களுக்கு சிகிச்சையளிக்கவும் பூண்டு உதவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புற்றுநோய்**

புற்றுநோயை எதிர்த்துப் போராடவும் பூண்டு உதவுகிறது. புற்று நோய்க்கு எதிரான உடலின் இயற்கையான பாதுகாப்பு அமைப்புகளை பலப்படுத்தும் சல்பர் சேர்மங்கள் பூண்டில் உள்ளன. கணையப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், குடல் புற்றுநோய் போன்ற சில வகைப் புற்றுநோய்கள் வரும் அபாயங்கள் குறைவதற்கும் ஒருவர் உட்கொள்ளும் பூண்டின் அளவுக்கும் தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

**காய்ச்சலுக்கு நல்லது**

காய்ச்சலுக்குப் பச்சைப் பூண்டு மிகவும் நல்லது. ஆன்டிபயாட்டிக் பண்புகளும் வைரஸ் எதிர்ப்புப் பண்புகளும் நிறைந்துள்ள பூண்டு ஆன்டிஆக்சிடன்ட்டாகவும் செயல்படுகிறது. பூண்டை தினமும் உட்கொள்ளலாம். இது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதால் உடல்நலக் குறைவுகள் எதுவும் ஏற்படாமலே தடுத்துக்கொள்ள உதவும். மூக்கடைப்பு இருந்தால், ஒரு பல் பூண்டை மென்று சாப்பிடலாம்.

**அழகுக்கு**

பூண்டில் உள்ள அலிசின் சருமத்திற்கு மிகுந்த நன்மைகளை அளிக்க வல்லது. பூஞ்சான் எதிர்ப்பு மற்றும் முதுமை எதிர்ப்புப் பண்பும் பூண்டிற்கு உள்ளது. ஒரு பூண்டை வெட்டி சருமத்தில் பிரச்சனை உள்ள பகுதியில் தேய்க்கலாம். முகப்பருக்களைப் போக்க மட்டுமின்றி, பருக்கள் போன பிறகு அவற்றின் வடுக்கள் உண்டாவதற்கான வாய்ப்பையும் குறைக்க பூண்டு உதவுகிறது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 22.03.2018 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி மகேஸ்வரி ஆறுமுகசாமி**



தோற்றம் 26.07.1948 மறைவு 22.03.2018

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (23.04.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு தொலைபேசி மூலமும் நேரிலும் ஆறுதல் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**இல.326, சோலையம்மன் கோயிலடி,**
**டச்சு வீதி, மீசாலை.**

(IN/6555)(11.17)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### மேரிமாகிறேட் ஐயாத்துரை (சந்திரவதனா)

யாழ்ப்பாணம் அச்சக வீதி ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட மேரிமாகிறேட் ஐயாத்துரை (சந்திரவதனா) 22.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை சூசைப்பிள்ளை லில்லி அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் ராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற மறைக்கல்வி நிலைய லிகிதர்), புவனேஸ்வரி, பரமேஸ்வரி (பாலர் பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவடல் இன்று (23.04.2018) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் நல்லடக்கத்திற்காக புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் Hardware நிறுவனத்திற்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. (தென்மராட்சி பிரதேசத்தில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு - 077 225 0149**

## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் மரியநாயகம்



தாயின் மடியில் 1935.09.20 இறைவன் அடியில் 2018.04.22

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானப்பிரகாசம் மரியநாயகம் (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை கத்தரீன் தம்பதியரின் அன்பு மகளும் யோசேப்பு மரியம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற யோசப் ஞானப் பிரகாசத்தின் அன்புமனைவியும் அருட்தந்தை அற்புதறாஜா அ.ம.தி (பங்குத்தந்தை இலுப்பைக்குளம்) .அற்புதராணி (பிரான்ஸ்), அற்புதராணி (பிரான்ஸ்), அற்புதஜெயசீலன், அற்புதஞானசீலன் (அஞ்சல் அலுவலகம் சுன்னாகம்), அற்புதமரியசீலன் (படப்பிடிப்பாளர்) ஆகியோரின் அன்புத்தாயும் அம்புறோஸ் மரியரட்ணம் (பிரான்ஸ்), கில்டா, ஜெறூட், றுபினா அன்ரோய், மேரிபிறெண்டா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கச்சேரி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புமாமியும் ஷாத்றீன் (பிரான்ஸ்), பேர்ணபேத் (பிரான்ஸ்), நோயல் (பிரான்ஸ்), வேஜினி (பிரான்ஸ்) ,ஜோசந் லௌறா (தி.கு. க. மடம் இளவாலை) பிரட்றிக் ஜோய் (சுன்னாகம் றோ.க. பாடசாலை), ஜெறி, போப்ஸ் (பத்திரிசியார் கல்லூரி), ஜெறி அல்விஸ் (பத்திரிசியார் கல்லூரி), ஞானஷரோன், ஞானமக்ஸ்வெல் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், வெலிசோர், ஆபரணம் மாக்கிறுட் .ஞானமலர் ஆகியோரின் அன்புச்சகோதரியும் அருட்பிரகாசம் சுகிர்த அலங்காரம் ஆகியோரின் மைத்துனியும் அருட்திரு ஜெறோம் அ.ம.தி (றோம்) இன் மாமியும் அருட்திரு அல்றின் அ.ம.தி (டென்மார்க்) இன் சிறியதாயும் அருட்திரு கிறிஸ்ரி, நிர்மலநாதன் அ.ம.தி இன் பேர்த்தியும் அருட் றொபின்சன் ஜோப் இன் மாமியும் ஆவார்.

அன்னாரின்இறுதிஅஞ்சலிநிகழ்வுகள்(24.04.2018)செவ்வாய்க்கிழமைமு.ப.9மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்க இரங்கல் திருப்பலி சுன்னாகம் புனித அநதோனியார் ஆலயத்தில் மு.ப.10 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு அவரது புகழுடல் சுன்னாகம் புனித அந்தோனியார சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளளவும்.

**077 506 4412**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**அருட் திரு அற்புதராஜா (அ.ம.தி)**

### சலூன் வாடகைக்கு

தபா்றகட்டைச்சந்தி அரியாலையில் இயங்கு நிலையில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் அதன் உபகரணங்களுடன் வாடகைக்குண்டு.

**தொடர்பு - 077 5498 790**

### விற்பனைக்கு

அல்சேஷன் குட்டிகள் 45 நாள் நிரம்பிய உயர்தர குட்டிகள், வான்கோழிகுஞ்சு, வாத்து குஞ்சு. 2 மாத, 3 கிழமை ஊர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 592 5085**

## மரண அறிவித்தல்

### இராமநாதி கதிரவேலு



யாழ். புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதி கதிரவேலு நேற்று (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதி இளையபிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கேஸ்வரியின் அன்புக்கணவரும் நிதிமுருகனின் அன்புச்சகோதரரும் ரதிதேவி, கமலநாதன், வனிதா, காந்தரூபன், வசந்தகுமார், சசிக்குமார், கனகரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன், தனலட்சுமி, நந்தகுமார், மலர்ராணி, எமில்சசிகலா, மரியசிறிதேவி, சர்மிலா ஆகியோரின் அன்புமாமனாரும் கஜி, ஜெகா, தனுசா, சாலு, கோபி, லோஜி, ராஜ், யுகன், தர்சிகன், சுயா, அட்சயன், நிறோ, நிருசன், தீபன், யது, பிறின்ரி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் கேரதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 5449 409,**
**077 869 3929, 077 712 3023**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## இது புதுசு

பெண்களுக்கான கழுத்து மாலை வகைகள் சில சந் தைக்கு அறிமுகமாகியுள் ளன. இவை 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



# கோடையில் ஐஸ் தண்ணீர் அருந்தலாமா?



கோடை வெயிலின் வெம்மையைத் தணிக்க வழக்கத்தைவிட அதிகமாக நீர் அருந்தவேண்டியது அவசியம். இதை எல்லா மருத்துவ முறைகளுமே வலியுறுத்துகின்றன. ஆனால் "ஐஸ் தண்ணீர் குடிக்க லாமா?" என்று கேட்டால், "தாரா ளமாகக் குடிக்கலாம்" என்றே சொல்லலாம். அதனால் பெரிதாக எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டு விடாது என்றே அலோபதி மருத்துவம் சொல்கிறது. வெயிலில் வியர்க்க விறுவிறுக்க அலைந்து திரிந்து, வீடு திரும்பும் நாம் பலர் ஐஸ் தண்ணீர் அருந்துவதையே வழக்கமாகக்கொண்டிருக்கிறோம். குளிர்சாதனப் பெட்டியில் அப்படியே எடுத்துக் குடிப்பவர்களும் இருக்கிறார்கள். இதனால் உடல்நிலையில் கொஞ்சம் மாற்றம் ஏற்பட்டாலும், அதன் பிறகு இயல்புநிலைக்குத் திரும்பிவிடுவோம். காரணம், எமது உடல்நிலைக்குத் தகுந்தவாறு அது மாற்றப்பட்டுவிடும். எனவே, ஐஸ் தண்ணீர் குடிப்பது ஒன்றும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. செயற்கைக் குளிர்பானங்கள் வேண்டுமானால் சிலருக்குப் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

அதுபோல குளிர்ந்த நீரில் குளிப்பதால் பிரச்சினைவராது என்பதைவிட, பயன்களே அதிகம் கிடைக்கின்றன. குளிர்ந்த நீரில் குளிப்பதால் உடலிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். காலையில் குளிர்ந்த நீரில் குளிப்பது விழிப்புணர்வை அதிகரிக்கும். சுவாசம் நிதானமாக இருப்பதால், சுறு சுறுப்பாகச் செயல்பட முடியும். மன உளைச்சல், மனஅழுத்தத்தை உருவாக்கும் ஹார்மோன்களின் அளவு குறையும். உண்ணும் உணவு எளிதாகச் செரிமானமாகி நச்சுத்தன்மைகளை வெளியேறச் செய்யும். சருமத்தை இறுகச் செய்து, வயோதிகத்தைத் தள்ளிப்போட உதவும். கோடைக்காலத்தில் குளிர்ந்த நீரில் குளிப்பது மிகவும் நல்லது. குளிர்ந்த நீரை அருந்துவதாலோ, குளிர்ந்த உணவுகளை உண்பதாலோ சளிக்குக் காரணமான வைரஸ் கிருமிகள் உருவாகாது. குளிர்ந்த நீர் அல்லது உணவால் அலர்ஜி இருந்தால் மட்டுமே ஒருவருக்குப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 794
சீட்டிழுப்பு திகதி 2018.04.21 சனிக்கிழமை
E 01 11 23 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,428,976/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்
## 60th Birthday
## திருவாட்டி மலர்மதி பாலகிருஷ்ணன்



எமது சுற்றத்தாருடன் இணைந்து 32 ஆண்டு காலமாக பாசத்தையும், நேசத்தையும், நல் ஆலோசனையினையும் வழங்கி எமக்கு வழிகாட்டியாக எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய எமது இல்லத்தரசி திருவாட்டி மலர்மதி பாலகிருஷ்ணன் அவர்களின் 60 ஆவது பிறந்த நன்நாளில் அவரை வாழ்த்துவதில் பூரிப்படைவதுடன் மூன்று மாவட்டங்களில் ஒன்பது பாடசாலைகளில் 42 ஆண்டு காலமாக அதிபராக, ஆசிரியராக தனது நற்சேவையினை வழங்கியதுடன் எப்போதும் எமது குடும்பம் சார்ந்த அனைத்து செயற்பாடுகளிலும் அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற எமது மணிவிழா நாயகி எல்லாம்வல்ல இறைவனின் ஆசியுடன் அவரது குடும்பத்துடனும் அவரது சுற்றத்தாருடனும் தனது ஓய்வு காலத்தில் மகிழ்ச்சியுடனும் ஆரோக்கியத்துடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துவோர்:- மைத்துனிமார், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(சின்னத்தம்பி செல்லம்மா குடும்பத்தினர்)
விரவாணி, வாதரவத்தை, புத்தூர்.
(CS/15950)(11,17)

ROLEX HOTEL
பின்வரும் வேலையாள்கள் தேவை
1. சமையல் உதவியாளர்
2. றோல் போடுபவர்
3. உணவு பரிமாறுபவர்
4. பார்சல் கட்டுபவர்
5. கொத்து ரொட்டி, பிரைட் ரைஸ் போடுபவர்
6. தேநீர் தயாரிப்பாளர்
ஆண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்
077 846 1024, 077 907 9888

ராசி அதிர்ஷ்டம்
திகதி 22.04.2018 | வெற்றி வாரம் 2283 | வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 04 18 27 35
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 5, 932, 368/=
2018.04.24 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 280
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.04.22
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 77,755,198/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
L 28 35 38 67
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 230
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.04.22
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 58,892,915/-
வெற்றி இலக்கங்கள் 12 52 72 73 ஆங்கில எழுத்து V
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 . 04 . 1940 | 22 . 04 . 2018 |

### பொன்னுத்துரை பூபதி

கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பூபதி நேற்று (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். 077 9495103

## ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின்
## பெருமஞ்சத் திருவிழா - 24.04.2018

நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கும் இன்னிசை இசைச்சங்கமத்தில் செவிக்கும், விழிக்கும் இன்பமுற வாரீர்

கொழும்பு சித்தாரா இசைக்குழுவினரின் இசையில் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் புகழ் பூத்த பாடகர்கள் சாய்சரண், ஸ்ரீநிவாஸ் மற்றும் இவர்களுடன் பிரபல தென் இந்திய திரைப்பட பின்னணிப் பாடகர்கள் ஸ்ரீ மதுமிதா மற்றும் லதாகிருஷ்ணா ஆகியோர் கலந்து சிறப்பிக்கும்

இசைச்சங்கமம்

இடம்: ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான முன்றலில் (தாவடி தெற்கு, கொக்குவில்)
காலம்: 24.04.2018 செவ்வாய்க்கிழமை
நேரம்: இரவு 8.00 மணிக்கு



அனைவரும் வருக அனுமதி இலவசம்.

பிரதான அனுசரணையாளர்கள்
விஜிதா அரிசி ஆலை தாவடி | தேனு களஞ்சியம் திருநெல்வேலி

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 23

தையிட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் ஞானவைரவர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## திருவள்ளுவர் வி.கழக தாச்சித் தொடர் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 23

தையிட்டி திருவள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில், அண்மையில் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணிக்கும் சாந்தை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 9:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி.

சண்டிலிப்பாய் ஞனவைரவர் விளையாட்டுக் கழக அணிக்கும் ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 12:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது சண்டிலிப்பாய் ஞானவைரவர் அணி.

புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணிக்கும் ஆனைக்கோட்டை சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், இரண்டு அணியினரும் நிர்ணயிக்கபட்ட நிமிடங்களில் தலா 4 புள்ளிகளை பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)



# மாகாண கரப்பந்தாட்டம் யாழ்ப்பாணம் சம்பியன்

மாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்டச் செயலகங்களுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக அணி கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி இளைஞர் சேவை மன்ற மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி மோதியது. முதல் இரு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணி 25:19, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த இரண்டு செற்களையும் கைப்பற்றியது. மூன்றாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய கிளிநொச்சி அணி யாழ்ப்பாண மாவட்ட அணியின் நேர்செற் வெற்றி வாய்ப்பை இல்லாமல் செய்தது. எனினும், சரிவில் இருந்து மீண்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணி நான்காவது செற்றை 26:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. (ம-23,422)

## 75 புள்ளிகள் வித்தியாசத்தில் யாழ்ப்பாணம் இந்து வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 23

கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி கம்பீரமான வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. 82:07 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி அபார வெற்றி பெற்றது. (ம-23)



## முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், ஏப். 23

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்டச் செயலக அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி சம்பியனானது. கிளிநொச்சி இளைஞர் சேவை மன்ற மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி மோதியது. இதில் முதலாவது செற்றில் கிளிநொச்சி மாவட்டச் செயலக அணி 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. ஆனால் அடுத்த மூன்று செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி 25:17, 25:22, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்களைக் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. மூன்றாம் இடத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலக அணி பெற்றது. (ம-422)

## கதிர்காமம் அசத்தல்

இருபாலை கற்பகாஸ் விளையாட்டுக் கழகத்தின் 5ஆவது வருட நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் உபய கதிர்காமம் அணி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் மாதனை விளையாட்டுக் கழக அணியை வீழ்த்தியே உபய கதிர்காமம் அணி கிண்ணம் வென்றது. (ம-106)

## நண்பர்கள் முதலிடம்

புதுக்குடியிருப்பு, ஏப். 23

புதுகுடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கயிறு இழுத்தல் போட்டியில், ஆண்கள் பிரிவில் உடையார்கட்டு கிழக்கு நண்பர்கள் அணி முதலாம் இடத்தையும், புதுக்குடியிருப்பு கிழக்கு விடியல் இளைஞர் கழக அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தன. (அ-23)

## போராடி வென்றது சென். அன்ரனிஸ்


நெற்கொழு கழுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி சம்பியனானது.

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து மன்னார் பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவு செய்யாததை அடுத்து சமநிலைத்தவிர்ப்பு உதைகளில் வெற்றி[illegible]யத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏ[illegible]பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் [illegible]ன். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)



# கேத்லின் முதலிடம்

மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள கிரனெடா தீவின் குறுந்தூர ஓட்டப்போட்டியில் 100 மீற்றரில் முதலிடம் பிடித்தார் அமெரிக்க வீரர் ஜஸ்ரின் கேத்லின்.
பந்தய தூரத்தை 10 செக்கன்கள் 11 மில்லி செக்கன்களில் கடந்து முதலிடம் பிடித்தார் கேத்லின். கடந்த வருடம் கடைபெற்ற கிரனெடா போட்டிகளில் கேத்லின் கலந்துகொள்ளவில்லை. இந்த வருடம் தங்கம் வெல்லும் நம்பிக்கையை அவர் கடந்த வருடமே வெளிப்படுத்தியிருந்தார்.
(ம)




# கயிறிழுத்தல் போட்டி சாதித்தது நண்பர்கள்

புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கயிறிழுத்தலில் பெண்கள் பிரிவில் உடையார்கட்டு கிழக்கு நண்பர்கள் அணி கிண்ணம் வென்றது. (ம-23)

# சுப்பர் றாங் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 23
கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் சுப்பர் றாங் அணி கிண்ணம் வென்றது.
சென். மேரிஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுப்பர் றாங் அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென். சேவியர் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவு செய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் சுப்பர் றாங் அணி வெற்றிபெற்றது.
(ம-23)



# சென்னைக்கு விசில் போடு

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் ஹைதராபாத்தை 4 ஓட்டங்களால் வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ்.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. சென்னை அணியின் ஆரம்ப வீரர்களாக வற்சன் மற்றும் பிளாசிஸ். கடந்த ஆட்டங்களைப் போல் நேற்றைய ஆட்டத்தின் ஆரம்பம் சென்னைக்குச் சாதகமாக அமையவில்லை. 3.5 பந்துப்பரிமாற்றங்களில் அணி 14 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வற்சன். பிளாசிஸ் 11 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இலக்குச் சரிவைக் கருத்திற்கொண்டு டெஸ்ட் பாணியில் விளையாடினார் றெய்னா. 9.5 பந்துப்பரிமாற்றங்களிலேயே 50 ஓட்டங்களைத் தொட்டது சென்னை. 140 ஓட்டங்களைப் பெறுவதே கடினம் என்றவாறாகத்தான் சென்னையின் பாதி இன்னிங்ஸ் அமைந்தது. அதன் பின்னர் தனிநபர் வேடிக்கை காட்டினார் ராயிடு. 27 பந்துகளில் அரைச்சதம் கடந்த அவர், அரைச்சதத்தின் பின்னர் அதிரடியை இரட்டிப்பாக்கினார். றெய்னாவும் படிப்படியாக அடித்தாட ஆரம்பித்தார். சிக்சர்களும், பவுண்டரிகளும் சீறிப் பாய்ந்தன. 37 பந்துகளில் 79 ஓட்டங்களுடன் ரண் அவுட் செய்யப்பட்டார் ராயிடு. டோனி 12 பந்துகளில் 25 ஓட்டங்களைச் சேர்க்க முடிவில் 3 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைக் குவித்தது சென்னை. றெய்னா 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.
பதிலுக்குக் களமிறங்கிய ஹைதரபாத்துக்கும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. ஓட்டமெதையும் பெறாத நிலையில் முதலாவது இலக்கைப் பறிகொடுத்தது ஹைதராபாத். பான்டேயும் ஓட்டமெதையும் பெறாது பவிலியன் திரும்பி பின்னடைவைக் கொடுத்தார். எனினும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தினார் அணித்தலைவர் வில்லியம்சன். அவர் 35 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். வில்லியம்சனுடன் நிலைத்துநின்று அணியின் வெற்றிக்கு மிகையாகப் பாடுபட்டார் யூசொப் பதான். இருவரும் மாறிமாறி பவுண்டரிகளை வாரி இறைத்தனர். சென்னையின் பக்கம் இருந்த வாய்ப்பு படிப்படியாக ஹைதராபாத்தின் பக்கமாகவும் திரும்பிக் கொண்டிருந்தது. அணி 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 84 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியம்சன். இறுதி இரண்டு பந்துப்பரிமாற்றங்களில் 33 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. 45 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பப்பட்டார் யூசொப் பதான். எனினும் ரசிகர்களை இருக்கையின் நுனிக்குக் கொண்டுவந்தார் ரசிட் கான். 3 பந்துகளில் 16 ஓட்டங்கள் தேவை என்று இருக்கையில் சிக்ஸ், பவுண்டரி என அடுத்தடுத்து விளாசினார். இறுதிப் பந்தில் சிக்ஸ் அடித்தால் ஹைதராபாத்துக்கு வெற்றி. கிடைத்தது ஓர் ஓட்டம். 4 ஓட்டங்களால் வென்றது சென்னை.
(ம)






# நொறுக்கினார் வில்லியர்ஸ்; வென்றது பெங்களூர்

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் வில்லியர்ஸின் அபார ஆட்டம் கைகொடுக்க வெற்றிபெற்றது பெங்களூர்.
பெங்களூரை எதிர்த்து டெல்லி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 5 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பன்ட் 85 ஓட்டங்களைக் குவித்தார். ஸ்ரேயார்ஸ் 52 ஓட்டங்களைச் சேர்த்தார்.
பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு வில்லியர்ஸ் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 24 பந்துகளில் 50 ஓட்டங்களைக் கடந்த அவர், தொடர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். வில்லியர்ஸின் வேட்டை தொடர முடிவில் 12 பந்துகள் மீதமிருக்க 8 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது பெங்களூர். வில்லியர்ஸ் 39 பந்துகளில் 90 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். அவர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.
(ம)



# உலகக்கிண்ணத்தை இந்தியா தனதாக்கும்

## சேவாக் நம்பிக்கை

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடை பெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரை இந்திய அணி கைப்பற்றும் என்று நம்பிக்கை தெரிவித்தார் சேவாக்.
கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சேவாக் இவ்வாறு தெரிவித்தார்.
"எம்மிடம் உள்ள ஒருநாள் கிரிக்கெட் அணியைப் பார்க்கையில் 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரை நாம்தான் வெல்வோம். நிச்சயம் கிண்ணம் எமக்குத்தான். தற்போதைய இந்திய அணி, வெளிநாட்டில் டெஸ்ட் தொடரையே வெல்லும் திறன் கொண்டுள்ளது. சகல துறைகளிலும் இந்திய அணி பலம்பெற்றுத் திகழ்கிறது. புதுப் புது வரலாறுகளைப் படைக்கக் கூடிய வாய்ப்புக்களை இந்திய அணி கொண்டுள்ளது" என்று சேவாக் மேலும் தெரிவித்தார்.
(ம)

# ராஜஸ்தான் அணியிடமும் முடங்கியது மும்பை



ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியிடம் போராடி வீழ்ந்தது மும்பை. இரண்டு பந்துகள் மீதமிருக்க 3 இலக்குகளால் வென்றது ராஜஸ்தான்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இரண்டாவது இன்னிங்ஸில் பனிப்பொழிவுக்குச் சாத்தியம் இருக்கையில் முதலில் துடுப்பெடுத்தாடுவது என்ற முடிவு சிறிது விசித்திரம்தான்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 7 இலக்குகளை இழந்து 167 ஓட்டங்களைச் சேர்த்தது. சூரியக் குமார் யாதவ் 72 ஓட்டங்களையும், இசான் கிசான் 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். ரோகித் 0, குருனல் பாண்டியா 7, ஹார்டிக் பாண்டியா 4 என்று மத்திய வரிசையில் தடுமாற்றம் காட்டினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு சாம்சன், ஸ்ரோக்ஸ் இருவரும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். சாம்சன் 52 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 40 ஓட்டங்களையும் பெற்றனர். மத்திய வரிசை தடுமாறினாலும், கௌதம் பின்வரிசையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார். அவர் 11 பந்துகளில் 33 ஓட்டங்களைக் குவித்தார். முடிவில் 2 பந்துகள் மீதமிருக்க வென்றது ராஜஸ்தான்.

(ம)

**ஆங்கிலம்** 3 மாத சனி, ஞாயிறு மற்றும் வாரநாள் வகுப்புகள்

ஸாம்சன் ஆசிரியரின் நேரடி வகுப்பு

16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேசவிரும்பும் எவரும் இவ்வகுப்பில் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசப்பழகமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – மூன்றுமாதங்கள்

1. காலை 08–10 3.மதியம் 01–03
2. காலை 10–12 4.மாலை 03–05

வாரநாள் வகுப்புகள் [செவ்வாய்,வியாழன்]
1. காலை 08-10 2. காலை 10-12

முன்பதிவு செய்யவேண்டிய இறுதித்திகதி - 28.04.2018


SAAMSON Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
021 320 3313 077 1570 486

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931362
follow us : cnrworldwideexpress

## மரண அறிவித்தல்



### ஏரம்பு ஜெகதீஸ்வரன்

(ஓய்வு பெற்ற உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி)

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு ஜெகதீஸ்வரன் (22.04.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு மகேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் விக்னேஸ்வரியின் ( ஓய்வு நிலை ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி) அன்புக்கணவரும் கோகிலா (லண்டன்), வரதன் (லண்டன்), உத்தமன் (யாழ். பிராந்திய முகாமை யாளர் , அபான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் கலாவண்ணன், லக்ஷிமினி, கோகிலப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனும் தியாகராசா (ஓய்வு நிலை ஆசிரியர்), சண்முகானந்தராசா (பிரான்ஸ்), கணேசானந்தராசா (ஓய்வு நிலை பிரதேச செயலாளர், ஊர்காவற்றுறை) காலஞ்சென்ற முருகானந்தராசா ஆகியோரின் அன்புச்சகோதரரும் கோபி, தருணி, றாகவி, பிரகாஷ், கருணியா, சிவானியா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற நடேசலிங்கம் (லண்டன்) மற்றும் யோகேஸ்வரி (வைத்திய கலாநிதி), நாகேஸ்வரி காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.08.2018) புதன்கிழமை மு.ப. 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை இல்லம்,
ஞானவைரவர் வீதி, உரும்பிராய்
கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
0094 21205 4604
0094 7731 795 93

CHEMISTRY WORLD
A/L கணித விஞ்ஞானப் பிரிவு
இரசாயனவியல் ஆசிரியர்
Mr.S.Sureshkumar B.Sc(Hons) PGDE
★ 2018 - Paper Classes 6 pm - 7 pm
ஆரம்பம் 27.04.2018
★ 2019 - Chemical Equlibrium
★ 2020 - Oxidation & Reduction
No.198/14, Navalar Rd, Jaffna.
T.P: 077 555 9028 (புகையிரதக் கடவை அருகில்)
(CS15966)(10)

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சிவகுருநாதன் வீதியில் 3 பரப்பும், 10 குளி வெற்றுக்காணியும், யாழ். சீனியர் லேனில் 3 பரப்பும், 3 குளியும் அமைந்த வீடும் காணியும், யாழ். நல்லூர் முருகன் கோயிலுக்கு அருகில் செட்டித்தெரு, நல்லூர் குறுக்கு வீதியில் 5 பரப்பில் அமைந்த வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 0777 2325 35

குஜராத், அகமதாபாத், நேப்பாள் காசி யாத்திரை

நாள்கள்:- 16 ஆரம்பம்:-25.05.2018 யாத்திரீகர் :- 15

மிகவும் புனிதமான யாத்திரை

**செல்லும் இடங்கள் :- குஜராத்தில்:** பாவ்நகர், கடலுக்குள் பஞ்சலிங்கம், சோமநாதர், ஜோதிலிங்கம், தையூர், கங்கேஸ்வரர் பஞ்சலிங்கம் அம்பாஜி 51 கலசமுடைய சக்தி பீடம் (பெரிய ஆலயம்),காபர்மலை பார்வதிதேவியின் இருதயம் விழுந்த இடம். 51 சக்தி பீடங்களில் முதன்மையான ஆலயம். **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவர் உட்பட 15 இடங்களைத் தரிசிக்கலாம். **கயா:** முன்னோர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம்,டெல்லி, தாஜ்மகால், குருசேத்திரம், **அலகாபாத்:** கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், வேறு இடங்களும் காணலாம். சீத்தா மடியும் காணலாம். **நேப்பாள்:** கோரப்பூர், லும்பினி, புத்தபிரான் பிறந்த இடம், **காத்மண்டு:** கமக்கயா, போக்ரா, சுயம்புநாதர், பெரியகுகை, ஜெல்நாராயணர், தண்ணீரில் மிதக்கும் விஷ்ணு, குச்சேஸ்வரர், பசுபதிநாதரையும் தரிசிக்கலாம். **சென்னை : இராமேஸ்வரம்:** நவபாஷாணம், திருப்புலானி, உத்திரகோசமங்கை, **மதுரை :-** மீனாட்சி சுந்தரேஸ்வரரையும் தரிசிக்கலாம்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை

விமானப் பயணச்சீட்டு 4, மூன்றுவேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர், A/C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. ·இத்துடன் ஒருநாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். பிராமண சமூகத்தினரும் தயக்கமின்றி கலந்துகொள்ளலாம். விருப்பமுடையவர்கள் உடன் பதிவு செய்யவும்.

விஸ்வப்பிரம்மஶ்ரீ கலாநிதி T.ஶ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No.59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு -11
T.P: 077 768 0102, 077 736 2154
(IN)(11.17)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.